ஆனந்த போதினி.

8 . 8

12 பிப்ரவரி, 1933

211, N15AB
N33·18·8
190099

[illegible]
[illegible]2ll, N15AB
N33·18·8
190099

# “ஆனந்தபோதினி”

## சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட | இந்தியா, பர்மா, ஸிலோன் ... ... | 1—0— |
| | பினங், ஸிங்கபூர், தென்ஆப்ரிக்கா, பசரா, மெசபொடோமியா முதலிய வெளி நாடுகளுக்கு | 2—0— |
| நடந்துகொண்டிருக்கிற வருடத்திய தனிச் சஞ்சிகை விலை | | 0—2—0 |
| சென்ற வருடங்களின் தனிச் சஞ்சிகை விலை | | 0—3—0 |

**ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.**

(1) *சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் பூரணமாகப் பெயரை எழுதி யனுப்பவேண்டும்.*

(2) *சந்தாத் தொகையை முன்னடிச் செலுத்தியாவது அல்லது வி. பி யில் பணம் கட்டியாவது பத்திரிகை பெற்றுக்கொள்ளவேண்டும். எப்போது சேர்ந்தாலும் அவ்வருட ஆடிமாத முதல்தான் கணக்கு வைக்கப்பட்டு ஆடி மாத சஞ்சிகை முதல், பத்திரிகை அனுப்பப்படும்.*

☞ (3) *சஞ்சிகையை வி. பி. யில் வரவழைப்போர் ரிஜிஸ்டர் சார்ஜ் 3—அணா வோடு (18-4-1921 முதல் மணியார்டர் கமிஷன் 10-ரூபா வகையில் 2-அணா வாகையால்) அந்தக் கமிஷன் 2-அணா, வி. பி. க்குத் தபால் சார்ஜ் 0-0-6. ஆக 0-5-6-அதாவது 6-அணா சேர்த்து ரூபா 1-6-0 கட்டி வி. பி. யைப் பெறவேண்டும். மணியார்டர் அனுப்பினால் 1-2-0 மட்டியாகும். ஆதலால் முன்னடி மணியார்டர் அனுப்பிப் பத்திரிகை பெற்றுக் கொள்வதே நலம். இதைக் கவனிக்கவும்.*

(4) *யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் அவர்கள் அம்மாதம் 15-ம் தேதி வரையில் பார்த்து அதற்கு மேல் அதே தமிழ்மாத முடிவிற்குள் அவ்விவரத்தைத் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும். பிறகு தெரிவிப்போர் கிரைய மனுப்பிப் பெறவேண்டும்.*

(5) *இடம் மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புது விலாசத்திற்கு வந்து சேரும் வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு நமக்குப் புது விலாசத்தை யறிவிக்கவேண்டும். இன்றேல் அடுத்த சஞ்சிகை பெரும்பாலும் பழைய விலாசத்திற்கே போய்விடும். அதற்கு நாம் பொறுப்பாளியல்ல.*

(6) *சந்தா நம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா. அத்தகைய கடிதங்களால் நேரிடும் தவறுதல்களுக்கு நாம் பொறுப்பாளி யல்ல. பதிலை விரும்புவோர் ரிப்ளை கார்டாவது தபால் பில்லையாவது அனுப்பினாலன்றி விடை யளிக்கப்பட மாட்டாது.*

(7) *வியாசங்களை எழுதுவோர் சுத்தமாக இலக்கணப் பிழையின்றி, தங்கள் உண்மைப் பெயருடன், மத தூஷணை, பிறர் தூஷணை, ராஜ விரோதம் முதலியவையின்றியும், பொது ஜனங்கள் விரும்பக்கூடியவையாகவும் எழுதவேண்டும்.*

| | | | |
|---|---|---|---|
| **Life Subscription ஜீவிய சந்தா** | இந்தியா, பர்மா, சிலோன் | ரூபா | 15—0— |
| | அன்னிய நாடுகளுக்கு | ” | 25—0— |

*Telephone* No. 3005. *Telegram*:—"Ananda Bodhini," Madras.

விலாசம்:—நா. முனிசாமி முதலியார், “ஆனந்தபோதினி” 6, வால் டாக்ஸ் சின்னத் தம்பி முதலி தெரு, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

---

கடந்த வருடங்களைக்காட்டிலும் இவ்வருடப் பஞ்சாங்கத்தில் அனேக விஷயங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

108 பக்கங்கள் கொண்ட

## ஸ்ரீமுக வருஷத்திய

(ஜெகத்பிரசித்திபெற்ற [illegible])

[illegible]

“ஆனந்தபோதினி சுத்த திருக்கணித பஞ்சாங்கம்”

[illegible] கணிதத்திலும் [illegible] கணி[illegible], ஸ்ரீமான் [illegible] (B. [illegible] M. [illegible]) அவர்களால் இப் பஞ்சாங்கம் [illegible] கணிக்கப்பட்டது.

[illegible] சுலபமாக அறிந்து கொள்ளும்படி [illegible] நாழிகைபோகம், [illegible] பக்கத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றன. இதில் பஞ்சாங்கத்தில் இருக்க வேண்டிய, நக்ஷத்திரம், திதி, [illegible] யோகங்கள், [illegible] [illegible] விசேஷங்கள், கர்ப்பத்தி, [illegible] கள், தவிதப்பொருத்தங்கள், சகுனங்கள் முதலியவைகளோடு [illegible] நாயகர்கள் பலன் முக்கிய வேறு விஷயங்களும் சேர்க்கப்பட்டு ஜோசியர்களும் மற்றவர்களும் எளிதில் அறிந்து கொள்ளும்படி ஜோசிய பொது விஷயங்களும் வெளியிடப்பட்டிருக்கின்றன. இவ் வருஷம் விசேஷமாக ஜோசியர்களுக்கு மிகவும் உபயோகமாயுள்ள நக்ஷத்திர ஹோரை, சந்திர உதயம், கிரக உச்சம், நவக்கிரக கிரயன சுத்த ஸ்புடமும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இது ஜோசியர்களுக்கு கிரக ஸ்புடம் செய்ய உபயோகமாகும்.

பஞ்சாங்கம் 1-க்கு விலை அணா 2.

6-பஞ்சாங்கங்கள் 0—8—0. 12-பஞ்சாங்கங்கள் 0—14—0.

தனி பஞ்சாங்கம் வேண்டுவோர் விலையோடு தபால்கூலி ½ அணா சேர்த்து தபால் பில்லைகளாக அனுப்பவும்.

25 பஞ்சாங்கங்கள் வேண்டுவோர் ரூ. 1—10—0 முன்தி அனுப்பிவிட்டு தங்களுக்கு சமீபமான ரயில்வே ஸ்டேஷன் தெரிவித்தால் பார்சலாக அனுப்பிவிடுவோம். ரயில் சார்ஜ் நீங்கள் கொடுத்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

☞ எமது பஞ்சாங்கமும் புஸ்தகங்களும் எல்லா ஊர் புத்தக வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.

6-ம் நெ. 28-ம் நெ. பஞ்சாங்கங்கள்.

தனலக்ஷ்மி கம்பெனியார் வெளியிடும் 6-ம் நெ. 28-ம் நெ. பஞ்சாங்கங்களும் எமது அச்சுக்கூடத்திலேயே நல்ல விதத்தில் பதிப்பிக்கப்பெற்றிருக்கின்றன.

பஞ்சாங்கம் 1-க்கு அணா ½.

6-பஞ்சாங்கம் அணா 2½. 12-பஞ்சாங்கம் அணா 4.

ஷை வருஷத்திய தெலுங்கு நிம்மகெட்ட பஞ்சாங்கம்.

1-க்கு அணா ½. 6-க்கு அணா 2½. 12-க்கு அணா 4.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

காதலருக்கு இன்பந்தரும் நூதன நூல்
அன்பர்கள் ஆவலுடன் எதிர்பார்த்த ஆனந்த சாஸ்திரம்
வெளியாயிற்று !

# இன்பவாழ்க்கையின் இரகசியங்கள்

## (நான்காம் பதிப்பு)

அழகிய சீமை கலிகோ பைண்டு செய்யப்பட்டு கண்ணைக் கவரத்தக்க அநேக ஆப்டோன் படங்களுடன்



400-பக்கங்களுக்குமேல் அழகிய பெரிய வெளிட்டைப்பில் சுத்தமான எழுத்தில் அச்சிடப்பட்டுள்ளது

## இதன் விலை ரூபா 2.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூபா 1—8—0

இது காதலர்க்கு இன்பந்தரும் நூதன நூல்; போகானந்தத்தை விரும்பும் பூமானகள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ஆனந்த இரகசிய சாஸ்திரம்.

இது காதல் இன்பத்தை உள்ளவாறுணர்ந்து அனுபவித்து, இல்வாழ்க்கையை நல்வாழ்க்கையாக நடத்திப் பேரானந்தக் கடலில் மூழ்கி நற்சந்ததிகளைப் பெற்று, மறுமைப் பயனையும் அடைதற் கேதுவாயிருக்கும்படி பற்பல இன்பமார்க்கங்கள் நிறைந்த இந்நூல் இப்போது இனிய தமிழ்நடையில் வெளி விடப்பெற்றிருக்கிறது. இதில் நமது பூர்வீக கொக்கோக சாஸ்திரத்தின் சாராம்சங்களும், அகப்பொருள் நூல்களின் கருத்துகளும், தேக தத்துவ சாஸ்திரங்கள், வைத்திய சாஸ்திரங்கள் முதலியவற்றிற் கூறப்பட்டிருக்கும் பல அரிய விஷயங்களும், நாகரம், தெலுங்கு, கன்னடம், மராட்டி, அரபி, இந்துஸ்தானி, பார்ஸி, இங்கிலீஷ், பிரென்ச் முதலிய பாஷைகளிலுள்ள இன்பரச நூல்களின் கொள்கைகளும், இன்ப வாழ்க்கையின் இரகசிய முறைகளும், அவற்றிற்குப் பொருத்தமான மனத்தையும் கண்ணையும் கவரும் ஆப்டோன் படங்களும், லயன் பிளாக்குகளும், இன்னும் இல்வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகிய அநேகம் விஷயங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதனை வாங்கிப் படிப்போர் உண்மைக் காதல் என்பது இன்னதென்பதையும், இன்னவிதமானவர்களை மணம்புரிந்தால்தான் இன்பம் ஏற்படுமென்பதையும், இல்வாழ்க்கையில் இன்னவித மணக்கிரமங்களை அனுசரித்தால்தான் அளவற்ற ஆனந்தமுற்று அழகிய சந்ததிகளைப் பெற்று ஜீவித்திருக்கலா மென்பதையும் உணர்ந்து இவ்வுலகத்தில் அடைய வேண்டிய இன்பத்தையும, மறுமை இன்பத்தையும் அடைவார்கள். இதனை ஒவ்வொரு குடும்பத்தினரும் வாங்கி வாசிக்கலாம்.

ஷை தெலுங்கு பதிப்பு விலை ரூபா 2.

# இந்திராபாய் அல்லது இந்திரஜாலக்கள்ளன்

இந்த சம்பந்தப்பட்ட குற்றவாளியாகிய முஷ்டிக்கரம் என்ற கள்ளன் கல்வி, சாஸ்திர ஆராய்ச்சி. தந்திரம் சாமார்த்தியம் முதலிய யாவும் உடையவனாதலின், அவன் தன் கூட இருக்கும் ஆட்களுக்குக் கூட தன் சுய உருவத்தைக் காட்டாமலே கேட்போர் நெஞ்சம் கலங்கும்படியாகச் செய்யும் பல கொலை களவுகள் அதிசயமானவைகளே. இந்திராபாய் பன் முறைகளில் அக்கள்வனிடம் சிக்கிக்கொண்டு சற்றும் எதிர் பாராத ஆச்சரியமான விதமாய்ப் பிராணபத்துக்களி லிருந்து தப்புவதும் அவளைக் காப்பாற்றவும், முஷ்டிக்கரத்தைக் கண்டு பிடிக்கவும் துப்பறியும் கிருஷ்ணராவ் செய்யும் அற்புத சாமார்த்தியங்களும் வாசிப்போர்க்கு மிக்க பிரமையை யுண்டாக்கும்.

இதன் விலை ரூபா 2—8—0

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 31-3-33 வரை விலை ரூ. 1—4—0

# தமிழ் மெட்டீரியா மெடிக்கா

## என்னும் அருமையான வைத்திய நூல்.

# MATERIA MEDICA

இவ்வரிய பெரிய வைத்திய புஸ்தகமானது ஆங்கில மருந்துக் கலப்பு விவர முறைகளைத் தமிழில் விளக்கமாக உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்கு விளக்குவது. இன்னின்ன நோய்க்கு இன்னின்ன விதமாக மருந்துகளைச் சேர்த்து மிக்சர் (Mixture) முதலானவை செய்து சாப்பிடவேண்டு மென்பதை இந்நூல் நன்குகக் கூறுகின்றமையால் இதை ஓர் 'ஆபத்துக் குதவும் தோழன்' என்று அனைவரும் நம்பலாம். இது வைத்திய அனுபவம் மிகப் பெரிதும் உடைய ஒருவரால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தங்களுக்குத் தாங்களே கூடிய வரையில் நோய்களுக்குப் பரிகாரம் செய்து கொள்ளவும் இந்நூல் மிகவும் உபயோகப்படும். இதன் விலை ரூபா 3.

---

ஆனந்தபோதினி ஆபீஸ், ... பெட்டி, ... 7, மதராஸ்

புதிய நாவல்! புதிய நாவல்!!

# கிருஷ்ணஸிங்

அல்லது

## துப்பறியும் சிடன்

ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்கள் எழுதியது.

### அறிவைப் புகட்டும் அரிய நாவல் இதுவே.

துப்பறியும் இரகசியங்களும், தந்திர சாமார்த்தியங்களும், வீரதீரச் செயல்களும், உலகில் பல படுமோசப் படுகுழியிலிருந்து தப்புவதற்கான புத்தி மதிகளும், கெடுவான் கேடு நினைப்பான் என்பதற்கிணங்க நீதிமதியோடு கூடிய பல அத்தாட்சிகளும், இன்னும் பல இனிய அரிய போதனைகளும் அடங்கியது.

**இதன் விலை அணு 14.**

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 31-3-33 வரை விலை அணு 10.

# அம்பாலிகை

அல்லது

## அதிசய மரணம்

அறிவைப் புகட்டும் ஓர் அருமையான துப்பறியும் நாவல் இதுவே. இதில் கொலைகளவுக் கஞ்சாப் பாதகனான கறுப்பண்ணன் என்பவன் தந்திர சாமர்த்தியமாய் அம்பாலிகை யென்னும் தன் உறவினளை அவள் ஆஸ்திக்காக மணம் புரியக்கருதி, அவளை இறந்தவள் போல யாவரும் நம்பும்படியான சூழ்ச்சிசெய்து, ஏற்கனவே அவனுக்குச் சகோதரன் முறையும் அவளால் காதலிக்கப்பட்டவனுமான மனோகரன் என்பவன் மேல் குற்றஞ்சுமத்தி, குற்றஞ் செய்தவனைக் கண்டுபிடிக்க தவறுதலாய், பல கொலை களவுகளைக் கண்டுபிடித்தும், ரஸாயன சாஸ்திரத்தில் தேர்ச்சி பெற்றவனும், மகா வீரதீர சிங்கமும், ஆபத்துகளை அணுவளவும் மதிக்காது நேர்முகமாக எதிர்த்து வெற்றிமாலை சூடுபவனுமாகிய துப்பறியும் ஆனந்த சிங்கை ஏற்படுத்துவதும், கடைசியில் ஆனந்தஸிங் உண்மையான குற்றவாளியை அதாவது கறுப்பண்ணனையே, பலவித தந்திர சாமர்த்தியங்களால் கண்டு பிடிப்பதும், அம்பாலிகையை உயிருடனேயே மீட்பதும், தவறுதலாக அம்பாலிகையால் கருதப்பட்ட மனோகரன் கடைசியில் அவளை மணம் செய்துகொண்டு இன்புற்று வாழ்வதும், கறுப்பண்ணன் தான் செய்த குற்றங்களுக்காக தேசாந்தரம் போய்விடுவதும் துப்பறியும் ஆனந்தசிங் வெற்றிமாலை சூடி தான் அமிர்தம்மாள் என்னும் கனனிகையை மணம் செய்துகொண்டு மேலும் பிரக்யாதி அடைவதும் படிக்கப் படிக்க மிகவும் அறிவை வளர்க்கும் என்பது நிச்சயம்.

**இதன் விலை அணு 12.**

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 31-3-33 வரை விலை அணு 8.

---

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

புதிய நாவல்! பெருகும் ஆவல்!!

# சற்குணவல்லி

அல்லது

## சித்தூர் இளைய ஜமீன்தாரணி.

(ஸ்ரீ. எஸ். எஸ். அருணகிரிநாதர் எழுதியது)

இதில் தர்மசீலன் என்னும் கதாநாயகன் முதலில் ஆனந்தசுந்தரி என்னும் மாதை மணக்கிறான். இவளோ கணவனை மதியாத மாபாதகி, சிற்றின்ப ஆனந்தத்தையே மதித்து அன்னிய ஆடவருடன் அடிக்கடி உறவாடிக்கொடு லீலியாகி கொண்டவனை விட்டு கண்டவனுடன் திடீரென்று மறைந்து விட்டாள். தர்மசீலன் மிகவும் யோக்கியன். பிறகு அவன் மேல் காதல் கொண்ட கோடீஸ்வரி சற்குணவல்லி என்னும் சித்தூர் இளைய ஜமீன்தாரணி அவனை உள்ளன்புடன் மணக்கிறாள். இவளோ கற்பின் அணிகலம், பொற்பின் பொற்கொடி, பொறுமையின் பொக்கிஷம், நிறையுடைமை நங்கை, வீரத் தெய்வம். கணவனைக் கடவுளென மதித்தவள். தர்மசீலன் முதல் மனைவியைக் கொன்றுவிட்டு மறு மணம் செய்துகொண்டான் என்னும் ஆபாண்டமான பழி, சந்தர்ப்ப சாக்ஷியங்களால் அவனைப் பலவித பரிசோதனைகட்கும், ஆபத்துகளுக்கும் உட்படுத்திற்று. இருந்தாலும் சற்குணவல்லி அவன் மீது வைத்த பிரியம் மாறவில்லை. கடைசியில் ஆனந்தசுந்தரி திடீரென்று ஒரு நாள் தோன்றி தன் நடக்கைக்குத் தக்க தண்டனையைத் தானே ஏற்று தன் கணவன் மீது சுமத்தப்பட்ட வீண் பழியை விளக்கி, ஆவி நீத்தாள். இதில் இருவித மாதர் நடத்தை விளக்கப்பட்டிருப்பதோடு பலவித நீதிமதிகள் தெள்ளிய எளிய இனிய நடையில் படிப்போர் மனதைப் பரவசப்படுத்தும்படி எழுதப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆடவரும் பெண்டிரும் இதை வாசித்து இருமைப் பயனைத் தேடி இன்புறுவார்களாக.

**இதன் விலை ரூபா 1—8—0.**

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 31-3-33-வரை விலை ரூபா 1—0—0.

# கைவல்ய நவநீத வசனம்.

ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்கள் எழுதியது.

ஆன்மாக்கள், மாயையினின்றும் விடுபட்டு மோக்ஷசாதனத்தை அடையும் பொருட்டுக் கருணாநிதியாகிய கடவுள் அருளிய வேதத்தின் உட்பொருள்களைத் தழுவிப் பல மகான்கள் பல நூற்களை இயற்றி யிருக்கின்றனர். அவற்றுள் தாண்டவராய சுவாமிகள் இயற்றிய கைவல்ய நவநீதமும் ஒன்று. இதன் நடை, செய்யுளாகவும் மிகவும் கடினமாயிருப்பதால் எவரும் எளிதில் வாசித்துணரும்படி இதை வசனமாக எழுதி வெளியிடப்பட்டிருக்கிறது. இதனால் முத்தி மார்க்கத்தை எவரும் நன்குணரலாம். விலை ரூபா 1—8—0.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 31-3-33 வரை விலை ரூ. 1—2—0

---

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

ஆசிரியரின்றி ஆங்கிலந்
தெரிந்துகொள்ளும் ஆனந்த

# ஆங்கில பாஷா போதினி.

(நான்காம் பதிப்பு) விலை ரூபா 2.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூ. 1—8—0.

எம். ஏ., எல். டி. பட்டம் பெற்ற ஆங்கில போதகாசிரியராகிய திருவாளர் எம். ஷண்முகசுந்தர முதலியாரவர்களால் இயற்றப்பெற்ற உயர்ந்த திருத்தங்களோடும், சிறந்த அமைப்புகளோடும், நிறைந்த போதனைகளோடும் இப்பதிப்பு வெளிவந்திருக்கிறது.

**800-பக்கங்களுக்குமேல் திக்கு காகிதத்தில் அச்சிடப்பட்டு சீமை காலிகோ பைண்டு செய்யப்பட்டது.**

பற்பல கதைகளும், பாரதக் கதைகளும், ஸ்ரீ கிருஷ்ணர் சரித்திர சுருக்கமும் அடங்கியது. அவற்றிற்குப் பொருத்தமான அழகிற் சிறந்த 16-ஆப்டோன் படங்களுடன் கூடியது.

இக்காலத்தில் இங்கிலீஷ் இராஜ பாஷையாயிருப்பதால் அதை எல்லோரும் கற்றுக்கொள்ளவேண்டியது அவசியமாயிருக்கின்றது. அப்படிப் படிக்காத சிலர், பல சங்கடங்களை அடைகின்றனர். ஆதலின், அத்தகையினர் கற்றுக்கொள்வதற்குதவியாயிருக்கும்படி ஆங்கில பாஷையைத் தமிழ் மக்களுக்கு எளிதிற் போதிக்கும் அரிய போதனாமுறை நூலாகிய இது பலர் வேண்டுகோளுக்கிணங்க வெளிப்படுத்தப் பெற்றிருக்கின்றது.




இதனைச் சிரத்தையுடன் படிப்பவர் பணச் செலவில்லாமலும், வேறெவ்விதக் கஷ்டமில்லாமலும் மிக எளிதில் இங்கிலீஷ் பேசவும் படிக்கவும் எழுதவும் கற்றுக் கொள்ளலாம். ஆயிரக்கணக்கான பணச் செலவு செய்து 10 வருஷம் படிப்பதனால் எவ்வளவு ஆங்கில தேர்ச்சியுண்டாகுமோ அவ்வளவு தேர்ச்சியை ஒரு மாதம் அல்லது 40-நாளில் இப் புத்தகத்தின் உதவியைக்கொண்டு அடைந்து, ஆங்கிலத்தை அதி விரைவில் படித்துக்கொள்ளலாம். மனிதர் தாமே சுலபமாக இங்கிலீஷ் கற்றுக்கொள்ளத் தக்க மார்க்கங்களெல்லாம் இதில் விளக்கமாக அமைக்கப் பெற்றிருக்கின்றன.

இதில் இதுவரை வெளிவராத நூதன பாடமுறைகளெல்லாம் வெளியிடப்பட்டிருக்கின்றன. இன்னும் ஒரு ரூபா முதல் 10 ஆயிரம் ரூபாவரை சம்பளப்பட்டிக் கணக்கு, வட்டிக்கணக்கு, ஒவ்வோரு தேசத்திலும் ஏற்படும் மணி வித்தியாசம், அன்னிய தேச நாணய மதிப்பு முதலியனவெல்லாம் தெளிவாக விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது.

மேற்படி தெலுங்கு பதிப்பு விலை ரூபா 2.

**ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.**

ஔவையார் அருளிச்செய்த

**பெட்டகம்.**

புதிதாய் அச்சிடப்பட்டு வெளிவந்துவிட்டது. விலை அணா 2.

# கற்கோட்டை

**ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் வரையப்பட்டது.**

இந்த அற்புதமான நாவல் ஏற்கனவே நமது சஞ்சிகையில் தொடர்ச்சியாய் பிரசுரிக்கப் பட்டு வந்ததாகும். இதன் விசேஷத்தையறிந்து நமது சந்தாநேயர்களில் அநேகர் இதைப் புத்தகமாய் முடித்துத்தர வேண்டுமென்று பன்முறை கேட்டுக் கொண்டபடியால் இது வெளியிடப் பட்டது. ஸ்ரீமான் முதலியாரவர்களுடைய நாவல்களை வாசித்துள்ள நம் தமிழ நாட்டார்க்கு இந்நாவலின் சுவையையும் அழகிய கதைப் போக்கையும் நாம் எடுத்துக் காட்டவேண்டியது அநாவசியம் என்றே நினைக்கின்றோம். அவர் எழுதிய நாவல்களுள் இதுவே தலை சிறந்ததாகும். இதன் விசேஷ அம்சங்களைச் சுருக்கமாய்க் கீழே குறிப்பிடுகின்றோம்.

இந்த நாவல் ஆரம்பத்திலேயே வாசிப்போர் மனதைப் பூரணமாய்க் கவர்ந்துகொள்வதோடு முடியுமட்டும் அக்கவர்ச்சி நீங்காது. இது சரித்திர சம்பந்தமான நாவல் எனலாம். இதில் தேசப்ரஷ்டமடைந்த சில உயர்குல மகுட வர்த்தனர்கள் தலை மறைந்து வசிக்கும்போது, நெஞ்சு திடுக்கிடும் பிராணாபத்துகளில் சிக்கிக் கொள்வதும், அவற்றினின்றும் தப்பித்துக்கொள்ள அவர்கள் செய்யும் வீர தீர சாமர்த்தியச் செயல்களும் சொல்லொணா வியப்பையும் சோகத்தையும் வீரரசத்தையும் ஊட்டும். சில ஸ்திரீகளின் அற்புத நடக்கைகளும் துணிகரமான தீரச் செயல்களும், தம் காதலரிடத்தில் மெய்க் காதல் கொண்ட உத்தம ஸ்திரீகள் தம் காதலர் பொருட்டாய் எவ்வளவு வரையில் ஆடவருக்குச் சமமாய் நடந்து கொள்ளச் சக்தியுடையவர்களாயிருக்கிறார்களென்பதை நன்கு விளக்கும். இக் கதையிலுள்ள முக்கிய விசேடமாவது, இதிலுள்ள கதா பாத்திரங்களில் ஒவ்வொருவருடைய நடக்கைகளும் அவற்றின் பயன்களும் மானிடர்க்கு இன்றியமையாததான ஒவ்வொரு நீதியை அத்தாட்சியோடு புகட்டுகின்றன.

இது தெளிவான இனிய நடையில், ஆங்காங்கு நாம் உணரவேண்டிய முக்கிய விஷயங்களையெல்லாம் விளக்கிக் காட்டி எழுதப்பட்டிருக்கிறது. இதில் நூலாசிரியர் திருவுருவப் படமும் அமைக்கப்பட்டிருக்கிறது.

**இதன் விலை ரூபா 2—0—0.**

"ஆனந்தபோதினி" சந்தாதாரர்களுக்கு

**விலை ரூபா 1—8—0.**

**காமவல்லி** இன்பரசம் பொருந்தியது, பெண்களின் மாயஜாலத்தை விளக்குவது, நீதியைப் போதிப்பது. இதன் விலை அணா 8.

**ஆனந்தபோதினி ஆபீஸ்,** தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

சே. இராஜு செட்டியார், எம்.பி.பி.ஜி., அவர்கள் இயற்றியவை.

**புதிய நாவல்! புதிய நாவல்!!**

# சந்திரசேகரி.

(இரண்டாம் பதிப்பு)

எளிய இனிய நடையில் எழுதப்பட்டது. உலகானுபவமும் இலக்கண [illegible] விசேஷமாகக் கொண்டது; அன்பின் மகிமை, பொறுமையின் [illegible] [illegible] [illegible] [illegible] விளக்கமாகவும் படிப்போர் மனதைக் [illegible] எழுதப்பட்டிருக்கின்றது. அறிவை விருத்திசெய்யக்கூடிய [illegible].

இதன் விலை ரூபா 1—4—0

[illegible] 31-3-33 வரை விலை ரூ. 1.

[illegible] ? ஒரு இனிய அருமையான [illegible] நாவல்.

இதில் [illegible], [illegible] வெற்றி, 'அவனன்றி ஓர் அணுவும் அசை [illegible]', '[illegible]' என்னும் பல [illegible] நீதிகள் செல்வர்களின் ஆடம் [illegible], [illegible] பல அரிய அறிவைப் புகட் ம் [illegible] விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

இதன் விலை அணா 10.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 31-3-33 வரை விலை அணா 8.

# அன்பானந்தன்

அல்லது

## அருஞ்செல்வன் விளைந்த பெருஞ்செல்வம்

இந்நூலின் கதாநாயகன் பெயரே இந்நூற்கும் பெயராய் அமைந்தது ன்பானந்தன் என்னும் பெயரால் இரண்டு உண்மைகள் அறியலாகும்; அன்பு னந்தத்தில் முடிந்து அதனோடு ஒன்றுபி விளங்கும் என்பதொன்று; மற் றொன்று இந்நூல் எந்தப் பாஷையில் எழுதப்பட்டுள்ளதோ, எந்தப் பாஷை மக்குத் தாய்ப்பாஷையாக வுள்ளதோ, அந்தப் பாஷையின் பெருமை இப் டிப்பட்டதென்பது. தமிழ் என்னும் சொல்லே இனிமை என்று பொருள் டும். அன்பைவிட இனிமையுள்ளது வேறில்லை. இவ்வன்பும் அவ்வினிமையும் லந்தால் ஆனந்தம் பிறக்கத் தடையென்ன? இந்த ஆனந்தம் தமிழ்ப்பாஷை முழுவதும் நிரம்பியிருக்கிறது என்பதைக் குறிப்பிக்கவே, தமிழ் எழுத்துக் ளின் முதலெழுத்தாகிய 'அ' என்பதும், இறுதி எழுத்தாகிய 'ன்' என்பதும் ந்நூற் பெயர்க்கு முதலும் இறுதியுமாக அமைந்தன.

இதன் விலை ரூபா 1-4-0

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 31-3-33 வரை விலை ரூ. 1.

**ஆனந்தபோதினி ஆபீஸ்,** [illegible] 167, [illegible]

ஓம
பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 18 | ஆங்கீரஸஹு மாசிமீ கஉ | 1933ஹு பிப்ரவரிமீ 12உ | பகுதி 8

## கடவுள் வணக்கம்.

போனக மிருக்கின்ற சாலையிடை வேண்டுவ
புசித்தற் கிருக்கு மதுபோல்
புருஷர்பெறு தர்மாதி வேதமுடன் ஆகமம்
புகலு மதிறு லாம்பயன்
ஞானநெறி முக்யநெறி காட்சியது மானமுதல்
நாலுவி தங்கள் தேர்ந்து
நாலுன் எனக்குழறு படைபுடை பெயர்த்திடவு
நான்குசா தனமு மோர்ந்திட்டு
ஆன நெறி யாம் சரியை யாதிசோ பானமுற்று
அணுபக்ஷ சம்புபக்ஷம்
ஆமிரு விகற்பமும் மாயாதி சேவையும்
அறிந்திரண்டு ஒன்றென் னுமோர்
மானத விகற்பமற வென்றுகிற் பதுநமது
மரபென்ற பரம குருவே
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌன குருவே. (1)

நானெனவு நீயெனவும் இருதன்மை நாடாமல் நடுவே சும்மா
தானமரு நிலையிதுவே சத்தியம் சத்தியமென நீ தமிய னேற்கு
மோனகுரு வாகியுங்கை காட்டினையே திரும்பவு நான் முளைத்துத் தோன்றி
மானத மார்க் கம்புரிந்திங் கலைந்தேனே பாந்தேனே வஞ்ச னேனே. (2)

எந்தச் சமயம் இசைந்துமறி வூடறிவாய்
வந்த பொருளே பொருளா வாஞ்சிப்ப தெந்நாளோ. (3)

# அரும்பொருள் விளக்கம்

1. இதனால் மௌன குருவின் உபதேசச் சிறப்பை விளக்கி யருளுகிறார்.

(இ-ள்.) மடைப்பள்ளியில் உண்ணுதற்கு வேண்டிய பொருள்களெல்லாம் இருத்தல்போல் மக்கள் அடைதற்குரிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தம் நான்கும் வேதத்துடன் ஆகமங்களும் சொல்லுகின்றன. அதனால் உண்டாகும் பயன், ஞான நெறியாகிய முக்கிய நெறி, காட்சி, அநுமானம் என்கின்ற பிரமாணங்கள் முதலாகிய பலவகையும் ஆராய்ந்து நான் நான் என்னும் குழறுபாட்டைத் தும்சம் செய்யவும், சாதன சதுஷ்டயத்தினையும் விசாரித்தறிந்து, நல்ல நெறியாகிய சரியை முதலாகிய சோபானங்களையடைந்து, அநுபக்ஷம், சம்புபக்ஷம் என்கிற இரண்டு வேறுபாடுகளையும், மாயாதிகளுடைய தரிசனத்தையும் ஐயந்திரிபற உணர்ந்து, இரண்டு ஒன்று என்கின்ற ஒப்பற்ற மனோ விகற்பம் அற்றொழிய ஜயித்து நிற்பதே நமது மரபு என்று உரைத்தருளிய பரமாசாரியனே! மந்த்ராசாரியனே! யோக தந்த்ராசாரியனே! திருமூலரது மரபில் வந்தருளிய மௌன குருவே என்க.

மடைப்பள்ளியில் உண்டிக்குரிய பொருளனைத்தும் ஒருங்கிருப்பது போல் மக்கள் அநுஷ்டித்து நடக்கவேண்டிய அறம், பொருள், இன்பங்களையும் ஞானிகளுக்குரிய வீடுபேற்றினையும் முறையே வேதமும், ஆகமமும் கூறலின் "போனக..............ஆகமம் புகலும்" என்றனர். அறம், பொருள், இன்பம், வீடாகிய புருஷார்த்தம் நான்கில் நான்காவதாகிய வீட்டினையடைவதே சிறந்த செந்நெறியாகலின் "ஞான நெறி முக்ய நெறி" என்றனர். நான்கு சாதனமாவன—நித்தியா நித்திய வஸ்து விவேகம், இக முத்ரார்த்தபல போக விராகம், சமாதி சட்க சம்பத்தி, முமூட்சுத்துவம் என்னும் நான்குமாம்.

2. இதனால் குருவருள் பெற்றும் தாம் சஞ்சலத்தில் உழன்றமையைக் கூறுகின்றார்.

(இ-ள்.) நான் என்றும், நீ என்றும் இரு வகையாகப் பிரித்துணராமல் இடையாக மவுனமாய் இருக்கும் நிலையாகிய இதுவே உண்மை உண்மை என்று தேவரீர் தமியேனுக்கு மவுன குருவாகியும் வந்து கையமைத்துக் காட்டினீரே! அவ்வாறு காட்டியும் மீண்டும் நான் வெளிவந்து மனம்போன வழியே செய்து இவ்விடத்தில் அலைந்தேனே! பாவியேனே! என்? பாவியேன் ஆதலினால் என்க.

3. இதனால் உண்மைப் பொருள் நாட்டம் வேண்டுகின்றார்.

(இ-ள்.) எந்தச் சமயங்களுடனே கட்டுண்டிருந்தாலும் அவரவர்களுடைய அறிவுக்குத் தகுந்த அறிவாய்த் தோன்றும் பொருளே உண்மைப் பொருளாகத் துணிந்து அதனை விரும்புவது எந்த நாளோ என்க.

ஆனந்தபோதினி
ஆங்கீரஸ
௵ மாசிமீ 1௳

## லாட்டரிகளும் "போட்டிப் பரிசு"களும்.

நாடெங்கும் இப்பொழுது லாட்டரிகள் மிகுந்து விட்டன. நமது புனிதக் கோயில்கள், பள்ளிக்கூடங்கள், கல்வி நிதிகள், சங்கங்கள், மடங்கள், சத்திரங்கள், ஆஸ்பத்திரிகள் முதலியனவெல்லாம் லாட்டரி போட்டுப் பணந்தேட வேண்டிய நிலைமை ஏற்பட்டது பெரிதும் வெட்கக்கேடான செய்தியாகும். இக்காலத்தில் லாட்டரி விளம்பரங்கள் இல்லாத பத்திரிகைகளைக் காணல் அருமையாயிருக்கிறது. லாட்டரி ஏற்படுத்தி நடத்துகின்றவர்கள் லக்ஷக்கணக்காகவும் பல்லாயிரக் கணக்காகவும் தொகை தருவதாகப் படாடோபமான விளம்பரங்களைச் செய்கின்றார்கள். இவற்றை ஆயிரக்கணக்கான மக்கள்—ஏழை மக்கள் உண்மை என்று நம்பி மோசம் போகிறார்கள். எந்த லாட்டரியும்—பெரிய பொறுப்புள்ளவர்களால் நடத்தப்படுவதாக விளம்பரம் செய்யப்பட்ட லாட்டரியுங்கூட—குறிப்பிட்ட காலத்தில் குலுக்கப்பட்டுக் குறிப்பிட்ட தொகையைக் கொடுத்து விட்டதாக நாம் கேள்விப்படவில்லை. ஏதோ ஒரு தேதியைக் குறிப்பிடுவதும், அதைத் தள்ளி வைப்பதும், மேன்மேலும் காலங் கடத்துவதும், பின்னர்ச் சமாதானங் கூறுவதும், அடுத்த தடவை கட்டாயமாய்க் குலுக்கப்படும் என்பதும், அதற்கும் ஏதோ "தகுந்த சாக்குச்" சொல்லித் தள்ளிவைப்பதுமாகிய காரியங்கள் சர்வசாதாரணமாய் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கடையில் "நாங்கள் எதிர்பார்த்த தொகை சேரவில்லை—என்ன செய்வோம்! நாட்டில் இக்காலத்தில் புண்ணிய கைங்கரியத்தில்—பொது

நலத்தில் மக்கட்குச் சிரத்தை இல்லை" என்று மக்கள்மீது பழி கூறி விட்டு ஏதோ சொற்பத் தொகையைச் சிலருக்குப் பங்கிட்டுக் கொடுப்பதும் சில விடங்களில் உண்டு. இந்த மாதிரியான புண்ணிய கைங்கரியங்களையும் பொதுநலச் சேவைகளையும் செய்யவில்லை என்று இந்த "லாட்டரி பிரபுக்க"ளை யார் தண்டிக்கிறார்கள் என்று கேட்கின்றோம். உண்மையில் லாட்டரியில் பணந் தேடுவது தருமமா என்பதையும், அதில் எவ்வளவு நீசத்தனம் அடங்கி யிருக்கிறது என்பதையும், இவற்றைப் போலவே இக்காலத்தில் மக்கள் ஏமாற்றம் அடையும் வேறு சில விஷயங்களையும் ஒரு சிறிது விளக்கிக்காட்டவே இக்கட்டுரை எழுதத்துணிந்தோம்.

லாட்டரி போட்டுப் பணந்திரட்டுவதில் சிறிதேனும் நியாயமோ சன்மார்க்கத்தன்மையோ, யோக்கியப் பொறுப்போ இருப்பதாக நாம் கருதவில்லை. லாட்டரிக்குச் சூதாட்டத்திற்கும் சிறிதும் வேற்றுமை இல்லை என்பதே நமது அபிபிராயம். அணுவைக் கொடுத்து மேருவைப் பெறலாம் என்பதுதான் சூதாட்டத்தின் தத்துவம். லாட்டரியிலும் அதே தத்துவம்தான் அடங்கியிருக்கிறது. லாட்டரி என்பது அதிருஷ்டப்பேரால் நடைபெறினும் அதற்கும் சூது என்பதுதான் பொருள். லாட்டரியில் சூதாகிய நீசத்தன்மை அடங்கியிருப்பதினாலேயே ஏதோ ஒரு புண்ணிய கைங்கரியத்தின் பேரும் தருமத்தின் பேரும் சொல்லப்பட்டு அந்நீசத் தன்மைக்குப் பிராயச்சித்தம் தேடும் தோரணையில் சூழ்ச்சி செய்யப்பட்டு வருகிறது. லாட்டரிச் சீட்டுகளை வாங்கும் மக்கள் உண்மையில் கைங்கரியத்திலோ தருமத்திலோ கருத்தைச் செலுத்துகிறார்கள் என்று கூறிவிட முடியாது. தங்கட்குப் பெருந்தொகை குவிந்து விடாதா என்ற பேராசை கொண்டே லாட்டரிச்சீட்டுகட்குப்பணங் கொடுக்கிறார்கள். ஒரு அறிஞர் லாட்டரிக்குப் பணங்கொடுப்பதைக் "கண்ணீர் இல்லாத வரி" என்று வருணித்தார். இது எவ்வளவு பொருள் நிறைந்தமொழி என்பதை நேயர்கள் சற்றே சிந்தித்துப் பார்ப்பார்களாக.

லாட்டரியில் வரும் தொகையை நல்ல காரியத்தில் செலவு செய்கிறோம் என்பது லாட்டரி முறையின் நீசத்தன்மைக்குப் பரிகாரமாகாது. சூதாகிய லாட்டரி ஐம்பெரும் பாவங்களில் ஒன்றாயிருக்கும் போது அதனால் செய்யப்படும் காரியம் எப்படி நல்லதாகிவிடும் என்று எமக்கு விளங்கவில்லை. லாட்டரியில் பணம் திரட்டிப் புண்ணிய கைங்கரியம் செய்வது நீதியானால் திருடியும், கொள்ளையடித்தும், விபசார விடுதி வைத்தும் பணம் திரட்டி இத்தகைய கைங்கரியம் செய்வதும் நீதி என்றே கருதப்பட வேண்டும். இவ்வாறு செய்ய யாரேனும் ஒப்புக் கொள்ளுவார்களா என்று கேட்கின்றோம். லாட்டரியில் பணம் திரட்டிக் கைங்கரியம் செய்வது பசுவைக் கொன்று செருப்புத் தானம் செய்வதற்கு ஒப்பாகும் என்றே துணிந்து கூறுகின்றோம்.



நமது நாட்டில் நடைபெறும் பெரும்பான்மையான லாட்டரிகள் யோக்கியப்பொறுப்புடனும் நாணயத்துடனும் நடைபெறவில்லையென்பது கண்கூடு. நமது நாட்டு மக்கள் மதம்-தருமம் என்றால் எளிதில் மயங்கிவிடக் கூடியவர்களாயிருப்பதாலும், வறுமை வாய்ப்பட்டிருப்பதாலும் ஒருசில சுயநலக்காரர்கள் சுலபத்தில அவர்களை ஏமாற்றிவிடப் பார்க்கிறார்கள். சில மடாதிபதிகள் என்பவர்களும், கோயில் தருமகர்த்தர்கள் என்பவர்களும் மடாலயத் திருப்பணிகளின் பேராலும் கோயில் திருப்பணிகளின் பேராலுங் கிராமங்களில் ஒன்றுமறியாத பாமர மக்களை லாட்டரி ஆசை காட்டி ஏமாற்றி வருகிறார்கள். எத்தனையோ ஏழை மக்கள் இப்போலிகளால் ஏமாற்றப்பட்டதை நாம் நேரில் அறிந்திருக்கின்றோம். இவர்கள் வாக்குறுதி செய்தபடி நடந்துகொள்ளுவதில்லை. ஏதோ கிடைத்தவரை பற்றிக்கொண்ட பிறகு "எதிர்பார்த்தபடி ஒன்றும் கிடைக்கவில்லை" என்று கையை விரித்துவிடுகிறார்கள். பாவம் ஒன்றுமறியாத பாமர மக்கள் என்ன செய்வார்கள்? ஏமாந்து வசைமாரி பொழிவதைத் தவிர வேறொன்றும் செய்ய அறியார்களன்றோ? ஸ்ரீரங்கம் போன்ற மிகுந்த வருவாயுள்ள தேவஸ்தான நிர்வாகிகளுங்கூட இவ்வநீதியான லாட்டரி முறையில் இறங்கி வருவது மகா பாதகமாகும். சூதின் மூலம் தேடும் பொருளைக்கொண்டு கோயில் திருப்பணி செய்வதைக் கடவுள் ஏற்றுக்கொள்ளுவாரா என்று கேட்கின்றோம். பக்தகோடிகளால் உள்ளன்புடன் அளிக்கப்படும் பொருளைக்கொண்டு எவ்வளவு செய்யக்கூடுமோ அவ்வளவில்தான் ஆண்டவனும் திருப்தி அடைவார். ஒரு சில பேராசைக்காரர்களின் திருவிளையாடல்களால் இறைவனுடைய புனிதத்தன்மைக்கே களங்கம் உண்டாகின்றது. நீதிக்கும் சன்மார்க்கத்திற்கும் உறைவிடமாயிருக்கும் ஆண்டவன் திருநாமத்தை லாட்டரிச் சூதுகளால் அசுத்தப்படுத்தி விடும் பேதையரின் செயல்களை என்னென்று கூறுவது? லாட்டரி என்னும் அதர்மத்தால் பணம் திரட்ட முன் வருபவர்கள் உண்மையான தருமகர்த்தாகள் ஆவார்களா என்று ஆராய்ந்து அறியுமாறு நேயர்களை வேண்டுகின்றோம். பெரிய கோவில்களின் பேரால் லாட்டரி நடத்த முன்வரும் பெரிய மனிதர்கள் கூடக் குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட தொகையைப் பகிர்ந்தளிப்பதில்லை என்னும் உண்மை எல்லோருக்கும் தெரிந்த விஷயம். தவிர, எவ்வளவு வந்தது? எவ்வாறு செலவிடப்பட்டது? அதனால் என்ன பயன்? என்பவைகளை நமது மக்கள் கவனிப்பதே இல்லை. நிற்க,

லாட்டரி என்ற அக்கிரம முறை நமது நாட்டில் மேனாட்டு நாகரிகத்தின் பயனாக ஏற்பட்ட தொன்றாகும். மேனாடுகளில் அரசியல் நிர்வாகத்திற்குங் கூட லாட்டரி முறையில பணம் திரட்டும் வழக்கம் இருந்து வருகிறது. அந்நாடுகளிலுங்கூட இம்முறை விரும்பத்தக்கதல்ல என்பதே அறிஞர்களின் அபிப்பிராயம். நமது நாட்டில் தேவஸ்

தான நிர்வாகிகள் செய்து வருவது போலவே அந்நாடுகளிலுள்ள மிஷனரிகளும் சர்ச்சு நிர்மாணம், பள்ளிக்கூடம் கட்டல், ஆஸ்பத்திரி ஏற்படுத்தல் முதலியவைகட்கு லாட்டரி வழியில் பணம் திரட்டி வருகிறார்கள்.

இக்காலத்தில் குதிரைப்பந்தய லாட்டரிப் பித்து உலகம் முழுதும் வியாபித்திருக்கிறது. குதிரைப் பந்தயங்களின் பேரால் லக்ஷக்கணக்கான பவுன்கள் ஆசைகொள்ளுமாறு காட்டப்படுகின்றன. நமது நாட்டிலுள்ளவர்களும் தனித்தும் பலபேர் சேர்ந்தும் இடையறாது இத்தகைய லாட்டரிகளில் கலந்துகொண்டு வருகின்றனர். கோடியில் ஒருவருக்கு அல்லது ஒரு சிலருக்கு ஏதோ தொகை கிடைக்கலாம். ஆனால் எத்துணைமக்கள் கைப்பொருள் இழந்து வருந்துகிறார்கள் என்பதை யாரும் அவ்வளவாகக் கவனிப்பதில்லை. சக்கரவர்த்திகள், அரசர்கள், ஜமீன்தார்கள், பிரபுக்கள், பெரிய உத்தியோகஸ்தர்கள் முதல் சகலரும் குதிரைப்பந்தயப் பித்துப் பிடித்தலைவதை நாம் கண்டு வருகின்றோம். அதுவே நாகரிகமாகக் கருதப்படுகிறது.

சென்னையில் "பக்கெட் ஷாப்புகள்" என்ற குதிரைப் பந்தயக் கடைகள் இருந்தவரை வெகு தொல்லையாய் இருந்தது. கீரை விற்கிற கிழவி முதல் சகலரையும் "ரேஸ் பைத்தியம்" பிடித்தாட்டியது. அக் காலத்தில் க்ஷவரக் கடைக்குச் சென்றால் விரைவில் க்ஷவரம் செய்துகொண்டு வெளியில் வந்துவிட முடியாது. "காபிக் கிளப்பு"க்குச் சென்றாலும் அதே கதிதான். க்ஷவரக்கடைக்காரரும் "காபிக்கிளப்புக்"காரரும் ரேஸ் விளம்பரத்தைக் கையில் வைத்துக்கொண்டு கணக்குப் பார்த்த மணியமாகவே இருந்தார்கள். சட்டத்தின் மூலம் குதிரைப்பந்தயக் கடைகளைச் சென்னை நகர எல்லையை விட்டு ஒழித்தமையால் ஒரு பெருந்தொல்லை ஒழிந்தது. குதிரைப் பந்தயத்தால் கெட்ட குடும்பங்கள் அனந்தம். இத்தீமையை முழுதும் ஒழிக்க முடியாதது கலிகால விந்தை என்றே கூறி வருந்துகின்றோம். இதனால் உற்சாக புருஷர்கள் குதிரைப் பந்தயம் நடத்தக் கூடாது என்று கூற நாம் முன்வரவில்லை. அதன் பேரால் நடைபெறும் சூதை ஒழிக்க வேண்டும் என்றே வற்புறுத்துகின்றோம். நமது நாட்டில் பண்டைக்காலத்தில் யானைச் சண்டை, எருமைக்கடாச் சண்டை, ஆட்டுச் சண்டை, கோழிச் சண்டை முதலியன நடைபெற்றன. இன்றும் சிலவிடங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. உற்சாகப் பொழுதுபோக்கில் மக்கட்குள்ள சுவை இவைகளைச் சண்டை செய்யவிட்டு வேடிக்கைபார்க்கச் செய்கின்றது. இபபடியேதான் ஆதியில் குதிரைப் பந்தயமும் உற்சாகப் பொழுதுபோக்கின் பொருட்டு ஏற்பட்டிருக்கவேண்டும். அது நாட்டு மக்களின் சன்மார்க்கக் கேட்டிற்கும திருட்டிற்கும் புரட்டுக்கும் அழிவுக்கும் இப்பொழுது அடிப்படையாய் விளங்குவது வருந்தத்தக்கதாகும்.



நாம் மேலே எடுத்துக்காட்டிய தரும கைங்கரிய லாட்டரி, குதிரைப்பந்தய லாட்டரிச் சூதுகளைப்போலவே இக்காலத்தில் சில பத்திரிகைகள் "போட்டிப்பரிசுச்" சூதாட்டங்களை ஆரம்பித்திருக்கின்றன. முன்னே பெரும்பாலும் சிறுவர் சிறுமியர்களின் "மூளைக்கு வேலை" ஆக உத்தேசிக்கப்பட்ட "சொற்புதிர்கள்" இப்பொழுது ஒரு சில பத்திரிகைகாரர்கள் சூதாகப் பொருள் திரட்டும் பித்தலாட்டச் சாதனங்களாக மாறி வருகின்றன. சொற்புதிர்களின் வழியாகப் பொருள் தேடலாம் என்ற நோக்கத்தை அடிப்படையாக வைத்தே ஒரு சிலர் புதிய பத்திரிகைகளைத் தொடங்குவதிலும் முனைந்து நிற்கின்றனர். பெரும்பாலும் காலணா அரையணாப் பத்திரிகைக்காரர்களும் பக்ஷப் பத்திரிகைக்காரர்களும் இப்"போட்டிப் பந்தயச்" சூதில் இறங்கியிருக்கின்றனர். சில தினசரிகளும் இச் சூதிற்கு இடங்கொடுத்து வருகின்றன. பத்திரிகைச் சொந்தக்காரர் மாத்திரமன்றி வேறு தனிப்பட்டவர்களும் இவ்வேலையில் தலைப்பட்டிருக்கின்றனர். அதற்குப் பத்திரிகைச் சொந்தக்காரர் விளம்பரத்தொகை பெற்றுக்கொண்டு இடந்தந்து வருகின்றனர். இப்பொழுது இப்பத்திரிகைகளில் வெளிவரும் 'புதிர்க'ளின் யோக்கியதை என்ன? என்பதையும் அவை எவ்வாறு மக்களை ஏமாற்றுகின்றன என்பதையும் சிறிது கவனிப்போம். பொதுவாகப் போட்டிப் புதிர்களெல்லாம் யாரும் பார்த்தவுடன் ஆசை கொள்ளத்தக்க முறையில் மிகவும் எளிதாகவே காணப்படும். கடினமானவை போட்டால் யாரும் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டார்கள், தங்கள் சுயநல நோக்கமும் சித்தியாகாது என்ற உண்மையை உணர்ந்தே எளிய 'புதிர்க'ளைப் பிரசுரிக்கிறார்கள். இதில் "ஆசிரியர் தீர்ப்பே தீர்ப்பு. அதற்குமேல் அப்பீல் இல்லை" என்ற சட்டத்தையும் விதித்து விடுகிறார்கள். இவ் விஷயத்தில் என்ன நடந்தாலும் கேள்வி முறையில்லை என்ற கருத்தடங்கிய "இப் போட்டி சம்பந்தமாய் எத்தகைய கடிதப் போக்கு வரவும் வைத்துக்கொள்ள முடியாது" என்ற சட்டத்தையும் விதித்து விடுகிறார்கள். இவ்வளவு பாதுகாப்புக்களுடன் இந்தப் போட்டிப் பந்தய வியாபாரம் நடைபெற்று வருகிறது. சித்திரக்குறிப்பால் உண்மை கண்டுபிடிக்கும் ஊர்ப் போட்டிகளும், குறைவை நிறைவாக்கும் போட்டிகளும், எழுத்து நிலைமாறிய போட்டிகளும், குறுக்கு வார்த்தை பந்தனங்களும் இக்காலத்தில் ஏமாறும் மக்கள் வாயில் நீர் ஊறச் செய்கின்றன. பிரசித்தமாக—ஐயந்திரிபறத் தெரியும் அப் புதிர்களை விடுவித்துக் கூபனுக்காகப் பத்திரிகையைப் பணங் கொடுத்து வாங்கி, அதில் ஆசையுடன் எழுதி, கடன்வாங்கியாவது இரண்டணாவோ, நான்கணாவோ, எட்டணாவோ கட்டணம் சேர்த்து அனுப்பி விடுகிறார்கள். குறிப்பிட்ட தேதியில் ரூபாய் நூறோ இருநூறோ முந்நூறோ வரும் வரும் என்று எதிர்பார்க்கிறார்கள். கடைசியில் ஏமாந்துபோய் விழிக்கிறார்கள். காரணம் என்ன? "ஆசிரியர் தீர்ப்புக்குமேல் அப்பீல் இல்லை"

அல்லவா? இப்போட்டிகளில் பத்திரிகைச் சொந்தக்காரர்கள் கட - காளமேகங்களின் சிலேடைகளையும் கற்பனைகளையும் காட்டுவார் என்று சாமானிய மக்களால் எதிர்பார்க்க முடியாதே! பரி தொகை பெரிதாகக் காட்டப்பட்டுப் பங்கிட்டுக் கொடுக்கும்போ கூபனுக்காகப் பத்திரிகை வாங்கிய பணமும், கட்டணம் அனுப் பணமும், தபாற் செலவுங்கூட வெற்றி பெற்றவர்களின் கைக் வாராதது இப்போட்டிப் பந்தயங்களிலுள்ள ஒரு விசேஷ அம்ச கும். ஒரு போட்டியில் ஒருவர் எத்தனை விதமான விடைச வேண்டுமானாலும் அனுப்பலாம் என்றும் "போட்டிப் பரிசுச் சட்டம்" இடந்தருகிறது. இதன் ரகஸியம் என்ன என்பதையும் நேயர்கள் சிந்திப்பார்களாக. இவற்றை யெல்லாம் நோக்குவோருக்குப் "போட்டிப் பரிசுகள்" சூழ்ச்சியால் பொருள் பறிக்கும் சூதுச் சாதனங்கள் என்பது இனிது விளங்காமல் போகாது என்றே நம்புகின்றோம். ஒரு "போட்டிப் பரிசு"க்கு ரூபாய் இருநூறு அல்லது முந்நூறு என்று பரிசுத் தொகை வைக்கபபடுகிறதாக வைத்துக் கொள்ளுவோம். கட்டணம் எட்டணாவாக ஏற்படுத்தப்படுகிறது. பத்தாயிரம் பிரதிகள் வெளிவரும் பத்திரிகையில் குறைந்தபக்ஷம் இரண்டாயிரம்பேராவது போட்டியில் கலந்துகொள்ளுவார்கள் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை. இதற்குப் பரிசுத் தொகை பெரிதாயிருப்பதும், 'புதிர்' சுலபமாகக் காணப்படுவதுந்தான் முக்கிய காரணம். இந்தக் கணக்குப்படி பார்த்தால் ரூபாய் ஆயிரம் கைக்குவரும். பரிசுத்தொகை இருநூறோ முந்நூறோ கழித்து விட்டால் லாபம் என்ன என்பதை வாசகர்களே கவனித்துப் பார்ப்பார்களாக. போட்டிச் சூது விளம்பரத்தால் அதிகமான பத்திரிகை விற்பனையில் வரும் லாபமும் "பரிசு" லாபமும்தான் பிரதான நோக்கமேயொழிய மக்களின் அறிவு வளர்ச்சியைப் பற்றி இப்பரிசில் கொடையாளருக்குக் கவலை இல்லை. பொழுது போக்குக்கும் அறிவு வளர்ச்சிக்கும் ஏற்பட்ட "போட்டிப் பரிசுகள்" மக்களை ஏமாற்றிப் பொருள் பறிக்கும் தோரணையில் அமைந்து வருவதைக் கண்டு வருந்துகின்றோம். இத்தகைய சுயநல இழிதொழில்களில் ஈடுபட்டவர்களால் பத்திரிகைகளின் மதிப்பே பாழடைந்து வருகிறது என்பதை நாம் விரிக்கவும் வேண்டுமோ? இனிமேலேனும் மக்கள் இப்"போட்டிப் பரிசு"களில் ஏமாறாமல் இருக்க எச்சரிக்கை செய்கின்றோம். நாட்டின் நலத்தைக் காக்கும் அரசாங்கத்தார் நாம் மேலே குறிப்பிட்ட "தரும கைங்கரிய லாட்டரிகளை"யும் குதிரைப்பந்தய லாட்டரிகளையும் 'போட்டிப் பரிசு' மோசடிகளையும் அறவே ஒழிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஆனால் அவர்கள் அங்ஙனம் செய்வார்களா? பொது மக்கள் மனம் வைத்தால் ஆகாத காரியம் என்ன இருக்கிறது?

ஓம் தத் ஸத்.

---




# சங்கர மதமும் ஜாதி பேதமும்

(பண்டித. பூ. ஸ்ரீநிவாசன்.)

இந்து மதத்தின் பாகுபாடுகள் மூன்று. அவை துவைதம் விசிஷ்டாத்துவைதம் அத்துவைதம் என்பனவாம். இம்மூன்று மதங்களும் இந்துமத வேதங்களிற் பிரதிபாதிக்கப்பட்டவைகளேயாகும். வேதத்தினுட்பொதிந்து கிடக்கும் கருத்துக்களை யாராய்ந்து பொருள் காண விரும்பினோர்க்கு மூன்று வகைப்பட்ட வெவ்வேறு பொருள் காணப்பட்டனவாகலின் மூன்றுமத சித்தாந்தங்கள் தோன்றலாயின. ஆராய்ச்சி செய்யப் புகுந்த நீலகண்டர் இராமானுஜர் சங்கரர் என்னும் முப்பெருந்தலைவரும் தாம் கொண்ட பொருளை வேதத்தினுண்மைப் பொருள் எனச் சுருதி யுக்தி அனுபவங்களின் வாயிலாக விளக்கிக் காட்டி நிலைநிறுத்திச் சென்றனர். இவர்களுள் சங்கரர் அத்துவைதமே வேதத்தின்-வேதாந்தமாய உபநிடதங்களின்-பரம தாற்பரியமென்று கொண்டு விளக்கிப் போந்தவராகலின் அத்துவைத மதம் சங்கரமதம் என்னும் பெயரால் வழங்கத்தலைப்பட்டது. ஆயினும் சங்கரரே இவ்வத்துவைத மதத்திற்கு ஆதி கர்த்தா; அவர்தான் இம்மதத்தை யுண்டாக்கினவர்' என்று எண்ணிவிடலாகாது. பழமையாகவே வேதாந்தமெனப்படும் உபநிடதங்களில் கூறப்பட்டுள்ளவைகளுக்கு சிலர் வேறு பொருள் கொண்டனராகலின், அதன் பொருள் அதுவன்று இதுதான் (அத்துவைதந்தான்) உண்மைப் பொருள் என்று காட்டி அத்துவைத மதத்தை நிலைநாட்டின பெருமையே சங்கரர்க்குரியதாகும். நிற்க,

மேற்கூறிய மூன்று வகை மதங்களுள் அத்துவைத மதமானது உலகப் பிரசித்தி பெற்றது. ஸ்ரீ விவேகாநந்தர் அமெரிக்காவில் நடந்த சர்வமத சங்கத்திற்குச் சென்று மேல் நாட்டறிஞரெல்லாம் அங்கீகரிக்குமாறு விவாதித்து வெற்றி முழக்கத்துடன் மத வீரராகப் பலரைத் தம் சீடர்களாக்கித் திரும்பியதற்குக் காரணமாயிருந்தது இவ்வத்துவைத மதமென்னும் கூரிய வாளே. ஸ்ரீ இராம தீர்த்த பரம ஹம்சரும் அவ்வாறே மேல்நாடுகளுக்குச் சென்று போதித்

தது இவ்வத்துவைத மதத்தையே. இன்னும் எண்ணிறந்த மகான்கள் அத்துவைத மதத்தையே அனுஷ்டித்து வந்தனர் என்பது உலகறிந்த விஷயமே.

இவ்வாறு கூறுவதால் துவித விசிஷ்டாத்துவைதங்கள் தாழ்ந்தன வென்று கூறினதாகக் கொள்ளலாகாது. அத்துவைதம் துவைத விசிஷ்டாத் துவைதங்களைப் புறக்கணிப்பதில்லை. இவ்விரண்டினையும் தனக்குள்ளடக்கிக் கொண்டிருப்பதேயன்றி அத்துவைதம் அவற்றிற்குப் புறம்பானதல்ல. "குழந்தைகளுக்குப் பால்தான் ஆகாரமாகும்; வேறு ஆகாரம் பயன் படாது. சிறிது பெரிதானபின் கஞ்சியுபயோகப்படும். பாலோடு கலந்த கஞ்சியே பெரிய குழந்தைகளுக்குத் தேவையன்றிச சோறு பயன் படாது. பெரியோர்களான பின் சோறு கறி முதலியன தேவை. அது போல மாந்தர்க்குப் பிரதமத்தில் துவைதமும், பின்னர் விசிஷ்டாத்துவைதமும், முடிவில் அத்துவைதமும் தேவையாம்" என்று ஸ்ரீராம கிருஷ்ண பரம ஹம்சதேவர் இவ்வுண்மையினை உவமானத்தால் விளக்கிப் போந்தார். "ஒருரிய துவிதமே அத்துவித ஞானத்தையுண்டுபண்ணும் ஞானமாகும்" எனத் தாயுமானப் பெருந்தகையார் பேசியிருத்தலுங் காண்க. ஆகவே, அத்துவைத மதமானது வேறெம்மதத்திற்கும் விரோதமானதன்றுதலோடு அவற்றைத் தனக்கு அங்கமாகக்கொண்டு மிளிர்கின்றது. இதனைச் சிலர் அங்கீகரியாதிருக்கலாம். அங்கீகரிக்க வேண்டுமென்று வற்புறுத்தவும் வேண்டியதில்லை. அவரவர்களின் மனோ நிலைகளுக்கேற்ப துவித விசிஷ்டாத்துவைதங்களை அனுஷ்டிக்கவே வேண்டுமென வற்புறுத்திக் கூறும் அத்துவைத சித்தாந்தத்தை யனுஷ்டிப்போர் அம் மதங்களைத் தவறெனக் கூறுவது வற்ற காரியமன்றே. ஆனால் துவித விசிஷ்டாத்துவிதங்கள் சாதனமென்பதும் அத்துவிதம் சாத்தியமென்பதும் அத்துவைதிகளின் அபிப்பிராயம். "அது சரியன்று" என்று பிறர் பேசும்போதுதான் அத்துவைதி மற்ற இரண்டினையும் கண்டிக்கத் தொடங்குகின்றான்.

இப்பொழுது இங்கு நாம் வரையத் தொடங்கியது அத்துவைத ஸ்தாபனமல்ல; துவைத விசிஷ்டாத்வைத கண்டன மல்ல. எது உயர்ந்ததாயினுமாகுக. அது நமக்கு இங்கு விஷய மல்ல. சங்கரமதமாகிய அத்துவைத மதத்தில் சாதிபேதத்திற்கு இடமிருக்கிறதா என்பதை ஆராய்வதே நம் விஷயமாகலின் அது பற்றிச் சிறிது ஆராய்வாம்.

வேதத்தின் இறுதிப் பாகமாகலின் அத்துவைத மதம் வேதாந்த மென்று அழைக்கப்படுகின்றது. வேதத்தின் முதலும் இடையும் முறையே கர்மத்தையும் உபாசனையையும் வற்புறுத்தும். வேதாந்தமாகிய அத்துவைத மதமோ ஞானத்தைப் போதிக்கின்றது. தூலசரீரத்தில் வாதம் பித்தம் சிலேஷ்மம் என்னும் மூன்று நோய்க ளிருத்தல்போல, சூக்குமசரீரத்திலும் மலம் (பாவம்), விக்ஷேபம் (கலக்கம்), ஆவரணம் (மறைப்பு) என்னும் மூன்று வியாதிகளிருக்கின்றன. இவற்றுள் மலம் நிஷ்காம கர்மத்தாலும் விக்ஷேபம் உபாசனையாலும் நீங்கின பின்னர் ஆவரண நீக்கத்தின் பொருட்டு பிரஹ்ம



ஞானம் வேண்டப்படுகின்றது. அந்த ஞானத்தைப் போதிப்பதுதான் வேதாந்தம்.

வேதாந்த மதத்தின் முதல் போதனை தன்னாராய்ச்சி யாகும். தத்துவ சோதனையே வேதாந்தத்தின் முதல் வேலை. இந்தச் சரீரத்தி லிருக்கும் "நான் நான்" என்னும் விவகாரத்திற்குப் பொருளா யிருப்ப தெது? பருப்பொருளாய் (ஸ்தூலமாய்) காணப்படும் இவ்வுடலா? பிராணன் முதலியனவா? மனம் புத்தி, என்னப்படுகின்றனவே, அவையா? இத்தனை பொருள்களுள் (தத்துவங்களுள்) நான் என்னப்படுவது எது? என்று ஆராய்ச்சி செய்து தானாகும் பொருளை யறியவேண்டியதே அத்துவைத மதத்தின் வேலை. இவ்வாராய்ச்சியின் பயனாக அத்துவைதி யானவன் "தூல சரீரம் நானல்ல மனம் முதலியனவும் நானல்ல; பிராணன் முதலிய வாயுக்களும் நானல்ல;" என்று தத்துவங்களனைத்தையும் நீக்கித் தன் நிஜசொரூபத்தை யறிய வேண்டியவனாகிறான்.

பாராதி பூதம் நீயல்லை—உன்னிப்
பாரிந்திரியம் கரணம் நீ யல்லை
ஆராயறிவு நீ யென்றான்—ஐயன்
அன்பா யுரைத்தசொல் ஆனந்தம் தோழீ! சங்கர சங்கர சம்போ.

என்றபடி, தானது வரையில் தானெனக் கருதி வந்த தேகம் முதலியவற்றைத் தானல்லவென்று நூல்களின் வாயிலாகவும் ஆராய்ச்சியின் மூலமாகவும் அறிந்தபடி, தன் நிஜநிலையில் நிற்கத் தக்க உபாயத்தை ஆசிரியன் வாயிலா யறிந்து அப்பியாசம் செய்து அனுபவத்தாலும் அறிகிறான். இவ்வாறு தன்னை யறிந்த பின்னர்

தன்னையும் தனக்காதாரத் தலைவனையும் கண்டானேல்
பின்னையத் தலைவன் தானாய்ப் பிரமமாய் பிறப்புத் தீர்வன்.

என்றபடி, ஒருவன் தான் யார் என்பதை முதலில் அறிந்து கொண்டானானால், பின், தனக்கு ஆதாரமாயுள்ள தலைவனையும் அறிந்து கொள்வான் என்பது சங்கரமத சித்தாந்தம். சுருக்கமாகச் சொல்லுமிடத்து "நான் ஸ்தூலம் சூக்குமம் காரணம் என்னும் மூன்று சரீரங்களுக்கும் வேறாயிருக்கிறேன். ஆகவே, அவற்றின் தர்மங்களாகிய பருமை கருமை முதலியனவும் பிராஹ்மணத்தன்மை முதலியனவும் நானல்ல; என்னுடையனவு மல்ல" என்று அறிந்து கொள்ளுவதே வேதாந்த மதக் கொள்கையாம். சும்மா அறிந்து கொள்ளுவது மாத்திர மல்ல; அந்த நிலையில் நிற்பதே அத்துவைத மதமாம்.

இவ்வாறு அறிவதே—சுவானுபவமாக—சமாதி அப்பியாச வாயிலாக—அறிதலே ஞானமென்றும், அவ்வாறறிந்தவனே ஞானி யென்றும் வேதாந்தம் விளம்புகின்றது. ஆனால், இந்த நிலையை யடைவதற்கு வேதாந்தி சொல்ல முடியாத பாடுகள் படுகிறான். அவன் வேலை முழுதும்—அவன் கஷ்டங்க

னெல்லாம் மனத்தோடு போர் செய்வதே யாகும். உண்மையில் பெரும் பாரதப்போர் அவனுக்குள் நிகழ்கின்றதென்று சொல்வது பொருந்தும். வாசனாக்ஷயம் மனோநாசம் அவனுக்கு அத்தியாவசியம். அதுவே அவன் செய்ய வேண்டிய பெரிய வேலை. இதற்காக அவன் மனத்தின் உருவமாகிய அவாவை யழிக்க முயலவேண்டும். இது பற்றியே நித்தியா நித்திய வஸ்து விவேகம், இகாமுத்திரார்த்த பல போக விராகம், சமாதி ஷட்க சம்பத்தி என்னும் சாதனங்களை வேதாந்தம் ஆரம்பத்தில் விதிக்கிறது. ஆகவே,

அத்துவைத மதத்தைக் கைக்கொள்வோன் முதலில் நிஷ்காம கர்மம் செய்து சித்தசுத்தி யடையவேண்டும். பிறகு உபாசனையின் வாயிலாக மனோசாஞ்சல்யத்தைப் போக்கப் பழகவேண்டும். அதன் பின்னர், தான் யார் என்பதை ஆராயத் தொடங்கித் தத்துவ விசாரஞ்செய்து தனதெதார்த்த சொரூப மின்னதென் றறிந்து, தன்னிலையில் நிலைத்து நிற்கப் பழகவேண்டும். அதற்கு மனக்குவிவு வேண்டுதலின் விவேகம் விராகம் முதலியவற்றைச் சம்பாதிக்கவேண்டும். பின்னர் தனதான்ம சொரூபத்தை யறிகிறான். ஆன்ம சொரூபத்தை யறிந்தவன் பரமான்மாவை யறிகிறான் என்பதுதான் வேதாந்த மத சித்தாந்தத்தின் சுருக்கமாம்.

இந்த நிலையை யெய்தினோர் பல திறப்பட்டிருப்பர். அவர்களுள் இல்லறத்தி லிருப்போரு முண்டு. அவர்கள் உலக விவகாரத்தினிமித்தம் "நான் செய்தேன்; நான் பார்த்தேன்; எனது வீடு; எனது பிள்ளை" என்று, "நான், எனது" என்று விவகரித்துக்கொண்டிருப்பினும் அவை அவர்கள் மனத்தில் ஊன்றியிருக்க மாட்டா. நடிகனொருவன் ராயனைப்போலப் பிறர் பார்க்கும்படி பேசி நடித்தாலும், தான் இன்னானென்று தன்னை மறவாம லிருப்பதுபோல, உலக விவகாரங்களை நடத்திக்கொண்டிருப்பார்கள் அத்துவைத ஞானிகள்.

தாமரை யிலைத் தண்ணீர்போல்
சகத்தொடும் கூடி வாழ்வார்.

என்று ஆன்றோர் கூறி யிருக்கின்றனர். சனகன் அரசாட்சி செய்துகொண்டிருந்தானாயினும், தனதெதார்த்த சொரூபத்தை மறவாதிருந்தான் என்று நூல்கள் நுவலும். ஞானிகள்;

மாதவம் செயினும் செய்வர்
    வாணிபம் செயினும் செய்வர்
பூதலம் புரப்பர். ஐயம் புகுந்துண்பர்.

அன்பர்களே! இதுகாறுங் கூறியவற்றால் அத்துவைத மதானுஷ்டானிகளின் தன்மை இது என்று ஒருவாறு அறிந்துகொள்வது கடினமாகாது. ஆகவே, உலக வியவகார நிமித்தம் நான் எனது என்று விவகரித்துக்கொண்டிருந்தாலும், அந்தரங்கத்தில் தேகாபிமானம் விட்டிருப்பவனே சரியான சங்



கர நுஷ்டானி யாவான். அவ்வாறின்றித் தேகாபிமானமுடையவன்—தேகம் நான் எனக் கருதுவோன் அத்துவைதி யாகான். இவ் வுண்மையை ஞானாயுமான சுவாமிகளும்,

ங்கையெனு மிடிகரையை மெய்யென்ற பாவிநான்
    அத்துவித வாஞ்சை யாதல்
புரிய கொம்பின்தேனை முடவனிச்சித்தபடி ஆகும்

வற்புறுத்தியுள்ளார்.

"பிராஹ்மணன் முதலிய ஜாதி ஸ்தூல தேகத்தின் தர்மமாம்; சூக்ஷ்ம ஆத்மாக்களின் தர்மமாகாது. ஏனெனில் முன் தேகத்திலிருந்த இலிங்க தேகமும் ஆத்மாவுமே இந்த வர்த்தமான தேகத்திலும் இனிவரும் தேகத்திலும் இருக்கின்றன. ஜாதியோ முன் தேகத்திருந்தது இந்தத் தேகத்திலில்லை. இந்தத் தேகத்திலிருப்பது இனிவரும் தேகத்திராது. ஆகையால் ஜாதி ஸ்தூல தேகத்தின் தர்மமாமன்றிச் சூக்ஷ்ம தேக ஆத்மாக்களின் தர்மமாகாது.

சரீரத்தின் அவயவங்களில் விசாரித்துப் பார்க்குமிடத்து ஜாதி யென்பது ஸ்தூல தேகத்திலு மகப்படுகிறதில்லை (ஸ்ரீவிசார சந்திரோதயம்.)

என்று கூறியுள்ளவற்றையும் பிறவற்றையும் உற்று நோக்குமிடத்து அத்துவைத மதமாகிய சங்கரமதத்தில் ஜாதி பேதத்திற்குச் சிறிது மிடமில்லை. அங்ஙனம் ஜாதி பேதம் பாராட்டுவோன் அத்துவைதியா யிருக்கமுடியாது. அது முடியாதபோது அத்துவைத மதக் கொள்கைப்படி அவன் ஞானியா யிருக்கமுடியாது என்பது கூறாமலே அமையும்.

அத்தகைய சாதிமத பேதங்களை உதறித்தள்ளி "எல்லாம் ஒன்றே; எல்லாம் ஈசுவர சொரூபமே" என்னும் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள அத்துவைத மதம் சாதி பேதம் பாராட்டுமாயின் அதனைவிட இழிவான மதம் ஒன்றிராது. இவ்வுண்மையைச் சிவபெருமானே புலைய னுருக்கொண்டுவந்து சங்கராசாரியருக்கு அறிவுறுத்திச் சென்றார். தேகம் தானல்லவென்றறிந்த அத்துவைதி, "நான் இன்ன ஜாதியான், அவன் இன்ன ஜாதியான்" என்று, எங்குத் தேடினும் காணப்படாததும், அஞ்ஞானிகளால் ஆரோபிக்கப்பட்டுள்ளதுமாகிய ஜாதி பேதத்தைப் பாராட்டித் திரிவானோ? ஆகவே அன்பர்களே! அத்துவைத மதம் ஜாதி பேதத்தை அனுமதிக்கின்றதா? என்பதை நீங்களே ஆராய்ந்து பாருங்கள். இது மாத்திரமோ? அத்துவைதத்தில் மத பேதமுமில்லை. கிறிஸ்து மதமோ, புத்த மதமோ, மகம்மதிய மதமோ, வேறெந்த மதமோ அத்துவைதிக்கு எல்லாம் ஒன்றே. அத்துவைதி எந்த ஆலயத்திலும் சென்று கடவுளைத் தொழுவான். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருடைய சரிதையினையும், ஏனைப் பெரியோர்களின் வாழ்க்கையினையும் காண்போர்க்கு இவ்வுண்மை விளங்கும். இவ்வளவேன்? சங்கராசாரிய சுவாமிகள் ஆறு மதங்களையும் நிலைநாட்டினவரல்லவா? ஷண்மத ஸ்தாபனாசாரியர் என்னும் திருநாமம் பெற்றனரன்றோ?

இத்தகைய பெருமை வாய்ந்த அத்துவைத மதம் தற்காலம் எந்த நிலையிலிருக்கின்றது பாருங்கள். ஜாதி பேதத்தை நிலைநாட்டப் பாடுபடுகின்றது. அத்துவைதிகளெல்லாம் (எல்லோரும் என்று சொல்லமுடியாது. பெரும்

பான்மையோர்) நான் என்னும் அகங்காரப் பேயால் ஆட்டப் றவாக ளாகி, தேகமே நானென்றெண்ணி, கற்பிதமாகிய நும் ஆமே மானது மாகிய ஜாதியைச் சத்தியமென்று வாய் கூசாது பேசுவது சங்கர திற்குப் பெரிய அவமானத்தையே—அபகீர்த்தியையே உண்டுபண் ஆகும். தேகமே பொய் என்று கூறும் வேதாந்தி, சாதி யுண்டென்பது ப்பிற் கிடமன்றோ? இனி, மலடி மைந்தனும் முயற்கொம்பும் சத்திய யனச் சண்டையிடவும் துணிந்து விடுவார்கள்போலும் இவர்கள்.

தாதுவின் மயம தொக்கும், சமன்த பூதங்க ளொக்கும்,
ஓதும்நன் புலன்க ளொக்கும், அவ்வவ வுருவந்தோறும்
ஆதியாய் நின்ற நாத னொருவனே யாதலொக்கும்,
பேதமாம் சாதிபேத மென்கொடு பேசலுற்றாய்?

பேதமா முலகமெல்லாம் பெற்றவ னொருவனே, நம்
பூதமே எவ்வுயிர்க்கும் பொருந்திய வுடலமானால்
பூதத்தில் சாதியில்லை; போதத்திற் சாதியில்லை;
எதுக்கோ சாதி பேதம்? எனக்குநீ இயம்பவேண்டும்,

சாதியொன் றுயர்ந்தது தாழ்ந்த தொன்றெனப்
பேதமே வல்லராய்ப் பிதற்றுவார் சிலர்,
சோதியே அனாதியாய்த் துன்னி நின்றமை
போதியா மையின்வரும் புன்மை வேகமே.

சாதிபேதம தோதிய சாதிகள்
ஆதிபேத மிலாமை யறிந்திலர்
சாதிபேத மிலாமை யறிந்தவர்
சாதிபேத மிலாத தாத்தவர்.

என்று பெரியோர் பல படித்தாகப் பன்னிப் பன்னிப் பேசி வெறுத்துக் கண்டித்திருப்பதைச் சாதிபேதம் பேசித் திரியும் அத்துவைதிகள் அறியாரோ?

இனியேனும் அத்துவைதிகள்—உண்மையான அத்துவைதிகளாகத் தம்மை யாக்கிக்கொள்ள விரும்பினால், விருப்பு வெறுப்பகற்றி நடுநிலையினின்றாலோசித்துத் தங்களுக்குச் சொந்தமான அத்துவைத சாத்திரங்களால் அனுமதிக்கப்படாத சாதிபேதப் பாராட்டை யொழித்து, மதத்தின் மாண்பைப் பாதுகாக்க வேண்டுமென்று வணக்கமாகக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

("அத்துவைத மதம் சாதி பேதத்தை அனுமதிக்கவில்லை, உடம்பைத் தானல்லவெனக் கூறுகின்றது" என்றதனால் பிறமதங்கள் அப்படிச் செய்வதில்லை என்று கூறியதாக அன்பர்கள் நினைத்துவிடலாகாது. ஏனைய துவைத விசிஷ்டாத்துவைத மதங்களும் அவ்வாறே கூறுகின்றன வென்பது துண்மையே. எனினும் எடுத்துக்கொண்ட விஷயம் சங்கர மதத்தைப்பற்றியதாகலின், அஃதொன்றைக் குறித்தே ஆராய்ந்தோம் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.)

# பிராணிகளின் புத்தி கூர்மை.

(அம்பை. ரா. மு. கிருஷ்ணபாரதி.)

ஸர்வேசுவரனாற் படைக்கப்பட்ட ஜீவராசிகளனைத்திலும் மனிதனே சகலவிதத்திலும் மேம்பாடுற்றவனென்பது பெரும்பான்மையோரின் கருத்தாகும். இக்கூற்றில் ஓரளவு உண்மை யிருப்பினும், இஃது முற்றிலும் உண்மையென்று சாற்றுவது இயலாத தொன்றாகும். எங்ஙனமெனில், பிராணிகளிற் சில, சிற்சில விஷயங்களில் மானிடரைவிட மேம்பாடுடையனவாய் விளங்குகின்றன வென்க. அஃதெங்ஙனமெனச் சிறிது ஆராய்வோம்.

மேனாட்டாரிற் பிராணி சாஸ்திர விற்பன்னருள் 'டார்வின்' என்பவர் தலைசிறந்தவ ராவர். அப்பேரறிஞர், பிராணி வர்க்கத்தின் குணாதிசயங்களை நன்கறிந்து, பல அரும்பெரும் நூல்கள் இயற்றி யுள்ளார். அவை யாவற்றையும் ஈண்டு விஸ்தரித்தல் இயலாத காரியமாதலின், பொதுவாக அந்நூல்களில் அப்பெரியார், "பிராணிகளிற் பல, மிகவும் அதிசயிக்கத்தக்க புத்தி கூர்மை யுள்ளனவாயிருக்கின்றன" எனும் உண்மையை உலகிற்கு எடுத்துக்காட்டி யிருக்கிறார் என்பதுடன் நிறுத்தவேண்டி யிருக்கிறது.

மிருகங்களில் யானை உருவத்திற்போல் புத்தி கூர்மையிலும் பெரியதாகும். அதனை விளக்கத் தோன்றிய கதைகள் பற்பல. யானை யிடம் குறும்பு செய்த தையற்காரன் பட்டபாடு பள்ளியிற் பயிலும் சிறுவரும் நன்கறிவர். பருத்த மரக்கிளைகளைத் துதிக்கையிற் பிடித்து, தான் போகும் வழியில் குத்திப் பார்த்துக் கொண்டே, தன்னைப் பிடிக்க வஞ்சகமாகப் படுகுழி தோண்டி மேலே மறைவாக மூடப்பட்டுள்ள விடங்களைச் சப்த பேதத்தால் அறிந்து, தப்பித்துக்கொள்ளும் யானையின் புத்தி கூர்மை, அறிந்து இன்புறத்தக்கதாகும். தன் தலைவனுனையைச் சிரமேற்கொண்டு, நின்ற இடத்தை விட்டசையாது ஜயக்கொடிதனை முதுகிலே தாங்கி நின்று, மகாராஷ்டிரருக்கு வீரமுட்டி வெற்றி யளித்த தீர குஞ்சரத்தின் பெருமைதான் என்னே!

எச்சிற் சோற்றை இகழ்ச்சியுடனளிக்கும் எஜமானனைக் காக்கவேண்டித் தன் ஆருயிரையும் திரணமாக மதித்து முதலை வாய்ப்பட்ட நாயின் உயர் குணத்தை என்னென்பது! எவ்வேடத்தில் எந்நகரத்தில், எவ்விடத் திருப்பினும் தன் எஜமானனை நன்கறிந்து கொள்ளும் அம்மிருகத்தின் நுண்ணறிவு படைத்த மானிடர் எவரேனு முளரோ? இல்லை யென்பது கண்கூடு.

தலைவனின் குறிப்பறிந்து நடக்கும் நேர்மை படைத்த பரியுடன் எப் பணி யாளனும் யோட்டியிட வியலாது. அராபியனின் ஆருயிர் காத்த அரபிக் குதிரையின் அருங்குணத்தைப் போற்று திருத்தலும் எங்ஙனம்? அன்றி, அருந் தலைவனை அநியாயமாய் அழித்திட்ட பாதகரின் அட்டூழியத்தை அம்பலத்திற்

கொணர்ந்த அசுவத்தின் ஆண்மையைத் தான் கண்டு பரவசப்படா திருந்தல் எங்ஙனம்?

அதிகாலையிலெழுந்து நீராடி, மருந்தேயாயினும் விருந்தோடுண்டு நல் வாழ்க்கை நடாத்தும் காக்கையின் நற்குணத்தையும், சிறிதும் ஓய்வொழி வின்றிச் சாரைசாரையாய்ச் சென்று சாதனங்களைச் சேகரிக்கும் எறும்புகளின் ஒத்துழைப்பைப் பற்றியும் ஒவ்வொரு சிறுவரும் அறிவர்.

ஒருவரது சொற்களை அப்படியே சொல்லும் புள்ளினங்களும், செய்கைகளை அங்ஙனமே செய்யும் வானரங்களும் மாண்புடையனவே யாம். குரங்காட்டி தேக அசௌக்யமாய்ப் படுத்திருக்கையில் தானே நேரிற் சென்று பொருளும் தின்பண்டமும் தேடிக்கொணர்ந்த குரங்கின் செய்கையும், "குரங்குப் பால"த்தின் மூலம், கடத்தற்கரியதோர் ஆற்றினைக் கடந்து சென்ற மர்க்கடங்களின் செயலும், குரங்கினத்தின் வியக்கத்தக்க நுண்ணறிவினையே உணர்த்துகின்றன.

எனவே, புத்தி கூர்மை யென்பது மானிடரின் ஏகபோக உரிமை யன்று. பிராணிகளிற் பல நுண்ணறிவில் மானிடரைத் தோற்கடிக்கத் தக்கனவாயிருக்கின்றன. அதற்கு யான் மேலே குறித்த நிதர்சனங்களே போதிய சான்றாகும். 'தான்' என்ற அகம்பாவ குணத்தைவிட்டு, மனிதர் சமரசநோக்கத்துடன் கூர்ந்து கவனிப்பாராகில், அவர்கள் சிருஷ்டியில் மிகப் பல ஆச்சர்யங்களைக் கண்ணுறுவரென்பதிற் கடுகளவும் ஐயமில்லை.

## மாங்காய்ச் சித்திரான்னம்.

——:(o):——

அரிசி ½-படி, நல்ல ஜலம் 1½-படி இவைகளைக் கொண்டு முதலாவது சாதத்தை வடித்துக்கொண்டு அகல வாயையுடைய ஒரு ஈயம் பூசின பாத்திரத்தில் கிளறி ஆற்றவேண்டியது. கடுகு ½-பலம், மிளகாய் ¼-பலம், தேங்காய்த் துருவல் 2½-பலம், மஞ்சள் பொடி ¼-ரூபா எடை, உப்பு ¾-பலம் இந்த ஐந்து பதார்த்தங்களையும் அம்மியில் போட்டுக் கொஞ்சங் கொஞ்சமாய் ஜலம் தெளித்துக்கொண்டு வெண்ணெய்போல் அரைத்து அந்த மொத்தையை ஈயம் பூசின பாத்திரத்தில் ஆற்றிவைத்திருக்கும் சாதத்தில் போட்டுச் செம்மையாய்க் கலந்து கொடுத்துப் புளிப்பு மாங்காய் துருவல் 3-பலம் தை சாதத்தில் உதிர்த்துக் கலந்து கொடுக்கவேண்டியது. நெய் அல்லது நல்லெண்ணெய் 6-பலம் ஒரு வாணலியில் விட்டுக் காய்ச்சி அது காய்ந்தவுடனே மிளகாய் ¼-பலம், கடுகு காலே அரைக்கால் பலம், உழுத்தம் பருப்பு ½-பலம், கடலைப்பருப்பு ½-பலம் இவைகளைக் காய்ந்த நெய் அல்லது எண்ணெயில் போட்டுத் தாளிதம் தயார் செய்து காயம் அரைக்கால் ரூபா எடை நசுக்கித் தாளிதத்தில் போட்டு அந்தத் தாளிதத்தைச் சாதத்தில் கொட்டிக் கிளறிக் கொடுத்து ஐந்து நிமிஷம் தணலின்மேல் வைத்திருந்து பின்பு உபயோகிக்கவேண்டியது.

(லோ-ரி.)

ஆந்திர விஷ்ணு

# ஸ்ரீ. கிருஷ்ணதேவராயன்.

(கி. பி. 1336—1565.)

கோவை-திரு. சி. து. நாராயணசாமி முதலியார்.

எந்த மகாராஜன் கவிகளையும், கற்று வல்ல பண்டிதர்களையும் ஆதரித்து ஆந்திரர்களது தாய்ப்பாஷையாகிய தேட்ட மிகு தெலுங்கு மேலோங்கி வளர்வதற்குப் பாலூட்டி வளர்த்தானோ, எம்மகனீயனது நுண்ணறிவு நீதிசாஸ்திர பாண்டியத்தில், நாமகளார் நாயகனான நான்முகனிலும் மேலாக விளங்கிற்றோ, எவன் திண்ணிய தோளாற்றலால் பெருவீரனாக விளங்கித் தனது பிரதாபம் என்னும் சுவாலையினால் நான்கு கடல்களையும் முற்றுகையிட்டுப் பூமியையும் தனது ஆக்ஞா சக்கரத்தினால் பிரகாசிக்கச் செய்தானோ, எவன் வீரர்களுக்கெல்லாம் வீரனாக விளங்கி, ஒப்பற்ற ஆற்றலால் சிங்கவேறெனத் திகழ்ந்தானோ, எவன் சார்வபௌம திலகனாகி அகில சாமந்த நரபதிகளின் இரத்னகிரீடங்களின் ஒளியினால், தனது வீரக்கழலணிந்த பாதங்கள் துலங்குமாறு பெருமை பெற்றிருந்தானோ, எவன் வரையா ஈவதில் வள்ளலெனப் பெயர் சிறந்து வாழ்ந்து, நெடுந்தொலைவினின்றும் இரப்பதற்கு இரவு பகலாக வருகின்ற இரவலர் புலவர்களுக்கு அவரவர்களின் தகுதியறிந்து அக்ராஹாரம், சுவர்ணம், பூமி, பொன்னுடை, பூஷணங்களை அவர்கள் வெறுக்குந்தனையும் கொடுத்து அவற்றால் காமதேனுவையும், கற்பகத்தருவையும் மறக்கும்படி செய்தானோ, எவன் மெய்யன்பில் முற்றும் நனைந்து மிகுதியான ராஜகார்ய நிர்வாக துரந்தரனாகவும், புங்கானுபுங்க விஷய தீக்ஷண்ய தத்புருடனாகவும் விளங்கியிருப்பினும், யோகியானவன் பிரம்மத்தைக் காணுவதில் தனது எண்ணம் முழுதையும் ஒரு முகமாகவே செலுத்தி இரவு பகல் பக்த பராயணனாயிருந்து, வாக்கிற்கும், மனத்திற்கும் எட்டாது விளங்கும் பரம்பொருளின் திவ்யசரணாரவிந்தங்களில் அபார அன்புடனிருந்து தனது மனத்தை லயிக்கச் செய்திருந்தானோ, எவன் யாவராலும், கவிகளாலும் நாவாரப்புகழ்ந்து பாராட்டும் பெருமை பெற்றிருந்தானோ, எவன் சரித்திர நாயகனாகக் கீர்த்தி சிறந்திருந்தானோ, எவன் தனது துல்லிய கீர்த்தியை சரத்காலச் சந்திரன், வெண்தாமரை, பச்சைக்கற்பூரம், பனிநீர், முதலியன வெண்மை நிறமாக விளங்குதல்போல, வெள்ளிய நிறமாகப் பிரகாசிக்கும்படி நாலாதிசைகளிலும் நிலைநாட்டினானோ! எவன் இறுதியில் தனது ஆட்சியின் கீழுள்ள சமஸ்த ஜனங்களையும், கோரமான துக்கத்தில் ஆழ்த்திவிட்டு இகபரசுகம் உண்மையில் அழியக்கூடியதென்றும், "ஜாதஸ்யமரணம் த்ருவம்" (பிறந்தவனுக்கு மரணம் நிச்சயம்) [illegible]தைப் பிரபஞ்சத்திற்கு அறிவித்தானோ, எவன் ராஜ்ய போகத்தை

விட்டு சுவர்க்கத்தை அலங்கரிக்கச் சென்றானே, அத்தகைய பேரரசன்; அத்தகைய நீதிமான்; அத்தகைய மகாசூரன்; அத்தகைய வீராதிவீரன்; அத்தகைய சார்வபௌமதிலகன்; அத்தகைய பக்த சிரேஷ்டன்; அத்தகைய பரிசுத்த நீதிமான்; ஸ்ரீகிருஷ்ண தேவராயனே யாவன்.

2

ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு சமயத்தில் அந்நாட்டின் வரலாறு, புதுக்கும்படி செய்யவல்ல ஆற்றலுடைய புருஷர்கள் அவதரிப்பார்கள். அது போலவே சக்தி, தேஜஸ், பலம், ஞானம் முதலானவை நசித்து ஜனங்கள் அந்தகாரத்தில் ஆழ்ந்து திசைதெரியாது திகைக்கின்றபோது அவர்களுக்கு நேரான வழி காட்டிக் காப்பாற்றுவதற்கு அவதார புருஷர்கள் தோன்றுவார்கள். தெய்வபக்தி குறைந்து துராசாரங்கள் மலியும்போது அவற்றை அறவே அழிப்பதற்கு மானவர் மனம் என்ற நிலத்தில் பக்தி என்ற விதையை விதைக்கின்றவர் மதோத்தாரகர்கள் ஆவர். ஜனசமுதாயம் ஐக்கியமத்தியமின்றி நிலைகுலைந்து விபரீத பேதங்களின் பிரபாவத்தினால் தேசத்திற்குக் கேடுண்டாகும்போது ஜனசமுதாய சம்ஸ்கரணங்கள் செய்கின்றவர்களே ஜனசமுதாய கர்த்தர்களாவர். தேசம் பிறர் கைவசப்பட்டு ராஜ்யபலம் குறையும்பொழுது தங்களது சுகநலங்களைவிட்டு வீராவேசம் மிகுந்து கொடிய சத்துருவைப் போரால் நாட்டைத் தம் வசப்படுத்தி அழகு பெறச் செய்து அரசு செய்யும் அரசர்களே அரசர்கள். இத்தகைய மேலான அரசர்களின் புண்ணிய வரலாறுகள் மிகுதியும் போற்றுதற்குத் தகுதி வாய்ந்தவை. ஸ்ரீ கிருஷ்ண தேவராயர் வரலாறு, அத்தகைய மகா பவித்திரமானவற்றில் முதன்மை வாய்ந்தது. அதனையே இங்கு தக்க ஆதாரங்களுடன் சுருக்கமாக வரையத் தொடங்குகின்றோம். நானூறு ஆண்டுகள் கழிந்திருப்பினும் தேசமக்களான நாமனைவரும் இதுவரை ஸ்ரீ கிருஷ்ண தேவராயரது பிராசீன கௌரவ குணங்களை நினைவுகூர்தலே அவனது ஒப்புவமையற்ற கீர்த்திக்கு நிதரிசனமாம்.

3

விஜயநகர சாம்ராஜ்யம், வரலாற்று அமிசங்களில் மிகுதியான பெருமையை எவ்வாறு கொண்டிருந்தது என்பதை அறிந்து கொள்வதற்குப் பழைமையான வரலாற்றை ஆராய்வது உபயோகமாயிருக்கும். கிறிஸ்து மூன்றாம் சகாப்தத்தில் ஆந்திர அரசர்கள் கிருஷ்ணா கோதாவரி நாடுகளின் மத்திய தேசத்தைப் பரிபாலித்துக் கொண்டிருந்தார்கள். கிறிஸ்து ஆறாம் ஆண்டு முதற்கொண்டு சாளுக்கியர்கள் இவ்விந்திய நாட்டை அரசு செய்யத் தொடங்கினார்கள். ஒன்பதாம் நூற்றாண்டில் இராஷ்டிரகூடர்கள் இவர்களைத் துரத்தி ராஜ்யத்தைக் கைப்பற்றிக் கொண்டாலும், பத்தாம் நூற்றாண்டில் சாளுக்கியர்கள் தமது ராஜ்யத்தை மீண்டும் தமது கைவசப்படுத்திக் கொண்டார்கள். பன்னிரண்டாம் நூற்றாண்டில் சாளுக்கியர்கள் மீண்டும் க்ஷீணதசையடைந்தார்கள். அவர்களது நாட்டின் சில பாகங்கள் ஹொய்சள அரசர்களின் கீழும், தேவகிரி யாதவ மன்னர்கள்பாலும், எஞ்சியது காகதீயர்கள் வசமாகவும் மாறின. பதினான்காம் நூற்றாண்டில் மகம்மதியர்கள் நாடுபிடிக்கும் ஆசையால் தூண்டப்பட்டு தங்கள் வசமிருந்த பலமான படைகளைக்கொண்டு அவர்கள் மேற்குறித்த நாட்டின்மீதும் போர் தொடுத்து அவைகளைக் கைப்பற்றிக் கொண்டார்கள். அவர்கள் கைவசமான அந்நாடுகளுக்குப் பொதுவாக



“பதுமனி ராஜ்யம்” என்று பெயர் சூட்டி அரசு செய்தார்கள். இவ்விதமாக மகம்மதியர்கள் தங்கள் படையெடுப்பினால் இந்நாடுகளை வென்றது கண்டு பொறாது நமது இந்திய நாட்டை பகைவர் மேலும் கவராவகை நிலைநிறுத்துவதன் பொருட்டு கி. பி. 1336-ஆம் ஆண்டில் பலமான துர்க்கங்கள் பல கட்டுவித்து விஜயநகர சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்தார்கள். கி. பி. 1336—1565-ம் ஆண்டுகளுக்கு ஏகதேசம் 230 ஆண்டுகள் தக்ஷிண தேசம் (தென் நாடு) பிறருக்குச் சுவாதீனம் இல்லாதிருந்ததனால் விஜயநகர ராஜ்யம் மிகவும் மேன்மை பெற்று விளங்கிற்று. கிருஷ்ணதேவராயனது சாஸனங்கள் நூற்றுக் கணக்கானவைகள் ஆங்காங்கு காணப்படுகின்றன. மேல் நாடுகளிலிருந்து இந்நாடுகளுக்கு விஜயஞ் செய்த யாத்ரீகர்கள் இந்த ராஜ்யத்தைப்பற்றி மிகவும் புகழ்ந்து பாராட்டி எழுதியிருக்கிறார்கள். அவை—“விஜயநகர சாம்ராஜ்யத்தில் உன்னத அறிவும், உயரிய கல்வியும், அரிய நூற்புலமையும் மிக்க பண்டிதர்கள் மிகுதியாக விருந்தார்கள். அவர்களது அரும்பெரும் நூல்களில் சரித்திராமிசங்கள் வெகுவாக இடம் பெற்றிருந்தன. ஸ்ரீ கிருஷ்ணராயனது நவநாகரிகங்கள், சிற்பம் நிரம்பிய தேவாலயங்கள், பொன் நாணயங்கள், வியாபார நிலயங்கள், தர்மசாலைகள், நீர்நிலயங்கள் முதலியன ஆயிரம் வகையால் வருணிக்கக் கூடியனவாக விளங்கின” என்பனவாம். ஸ்ரீ கிருஷ்ணதேவராயர் கி. பி. 1336 முதல் 1448 ஆண்டுகள் வரை பாமின் அரசர்களுடன் போர் தொடுத்து வெற்றிபெறுவதே முக்கிய வேலையாகக் கொண்டிருந்தார். கி. பி. 1448 முதல் 1509-ஆம் ஆண்டுவரை விஜயநகரப் படைகளும் சேனாவீரர்களும், அரசரும் பகைவர்களுடைய எதிர்ப்புக்களுக்கு ஆட்பட்டு நிரம்பிய கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாயிருந்தனர். கி. பி. 1509ஆம் ஆண்டில் இவைகளையெல்லாம் நிவர்த்தித்து ஸ்ரீ கிருஷ்ணதேவராயர் விஜய நகரத்து அரசபீடத்தில் திருவீற்றிருந்து அரசு செய்தார்.

4

தற்காலத்தில் சென்னை ராஜதானியிலுள்ள ஜில்லாக்களில் வெளிவரலான ஸ்ரீ கிருஷ்ணதேவராயனது சாஸனங்களில் அவனது ராஜ்ய விஸ்தீரண விவரங்களும், அவனது ராஜ்யத்திற்குக் கிழக்கிலுள்ள சிம்மாசல க்ஷேத்திரம் வரையுள்ள எல்லைகளும் விவரிக்கப்பட்டுள்ளன. ஒட்ர தேசாதிபதியாகிய ருத்திர கஜபதியைக் கிருஷ்ணதேவராயன் நாட்டைவிட்டுத் துரத்திவிட்டதாகச் சிம்மாசலத்திலுள்ள ஒரு கல் வெட்டில் காணப்படுகிறது. விஜய நகரத்துக்குச் சிறிது தூரத்திலுள்ள “போகபுரம்” என்ற கிராமத்தில் கிருஷ்ணராயனால் “ஜயஸ்தம்பம்” ஒன்று நாட்டப்பட்டதாகவும், அவனது இராசமாதேவி “சின்னம்மை”யும், “திருமலம்ம தேவி”யும், சிம்மாசல தேவருக்கு சொர்ணாபரணங்களும், கிராமங்களும் தானஞ் செய்ததாகவும் சிம்மாசலத்திலுள்ள சிலாசாஸனங்களால் அறியப்படுகின்றன.

5

நெல்லூர் ஜில்லாவில் கொண்ட வீடும், உதயகிரி துர்க்கமும், ஒட்ர தேசத்து அரசனது ஆதிக்கத்தில் இருந்தன. கி. பி. 1513—1515-ஆம் ஆண்டுகளில் இவ்விரண்டு கோட்டைகளையும் ஸ்ரீகிருஷ்ண தேவராயன் முற்றுகையிட்டுத் தன் சுவாதீனஞ் செய்துகொண்டதாகச் சாஸனங்கள் கூறுகின்றன. உதயகிரி துர்க்கத்தைச் சுவாதீனஞ் செய்தபொழுதே அதற்கு நெடுந்தூரத்திலுள்ள, “கோண்டபல்லி;” “பெல்லமுகொண்ட;” “விஷ்ணு

கொண்ட;" "நாகார்ச்சுன கொண்ட;" முதலான மலைமேல் துர்க்கங்களையும் சுவாதீனஞ் செய்துகொண்டு, தனது தளகர்த்தர்களில், 'கொண்டய்யன்" என்பவனைக் கொண்ட வீட்டிற்கும்; "பாஸ்கரய்யன்" என்பவனை வினுகொண்டாவிற்கும்; "வீரபத்திரய்யன்" என்பவனை பெல்லமுகொண்டாவிற்கும்; "அய்யலய்யன்" என்பவனை நாகார்ச்சுன மலைக்கும் அதிகாரிகளாக நியமித்துப் பாதுகாத்து வரும்படியாக ஏற்பாடு செய்தான். உதயகிரியின் முற்றுகையின்போது அங்கிருந்த ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியினது சுந்தர விக்கிரகத்தை விஜய நகரத்திற்கு எடுத்துவரச்செய்து அழகான பெரியதொரு ஆலயங் கட்டுவித்து அதில் அவ்விக்கிரகத்தை ஆகம விதிப்படி பிரதிஷ்டை செய்வித்தான் ஸ்ரீகிருஷ்ணதேவராயன்.

6

நெல்லூர் சாஸனம்—உதயகிரியை ஒரு தாலூகாவாகப் பிரித்து அதற்குக் காரிய நிர்வாகஸ்தராக ஒரு அதிகாரியை நியமித்ததாக விவரிக்கிறது. கி. பி. 1515-ஆம் ஆண்டு கொண்ட வீட்டையும், ஒரு தாலூகாவாகப் பாகித்து "நாதெண்ட்ல கோபன்" என்னும் பெயரிய மந்திரியை, கார்ய நிர்வாக அதிகாரியாக நியமித்தான். இக் கோபன்னன் என்னும் பெயரினரே "பிரபோத சந்திரோதயம்" என்னும் நூலுக்குச் "சந்திரிகை" என்னும் உரை எழுதினோராவர். இவருக்குப் 'பாப்பையன்' என்னும் சகோதரர் ஒருவர் இருந்தார். கொண்டவீடு கோட்டையை ஸ்ரீ. கிருஷ்ணதேவராயன் முற்றுகை யிட்டபோது, தனக்கு உதவியாக வீரபத்திரராயன், நாஹரிபாத்திரன், மல்லுபானன், உத்தண்டபானன், நாசிராஜன், ஸ்ரீநாதராஜன் முதலானவர்களைச் சேர்த்துக்கொண்டான். அக்காலத்தில் குடிமக்களிடத்தில் அரசன் வரிப் பணம் வசூல் செய்யும்முறை சில, நெல்லூர்ச் சாஸனத்தில் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

7

இங்ஙனம் வசூலிக்கப்பட்ட வரித் தொகையைக் கொண்டவீட்டுத் துர்க்கத்தில் கோயில்கொண்டுள்ள கோதண்ட ராமசாமியின் பூஜா காரியங்களுக்கே உபயோகிக்கும் பொருட்டு ஸ்ரீ கிருஷ்ணதேவராயனால் ஏற்பாடு செய்யப்பட்டதாக கொண்ட வீட்டில் கண்டதொரு சாஸனத்தில் கூறப்பட்டிருக்கிறது. உதயகிரி, கொண்ட வீடுகளைப்போலவே நெல்லூர், கிருஷ்ணா மண்டலங்களிலுள்ள அனந்தகிரி, உண்டிரகொண்ட, ஊரால கொண்ட, ஆறுவெபல்லி, ஜல்லேபல்லி, சந்திகொண்ட, கப்பலவாயி, நல்லகொண்ட, ஜம்பழமெட்டு, கனககிரி, சங்கரகிரி முதலான பலமான துர்க்கங்களையும் ஸ்ரீ கிருஷ்ணதேவராயன் போர்செய்தே ஜயித்தான். இத்தண்ட யாத்திரையின்போது, ஸ்ரீ கிருஷ்ணதேவராயன் தனது பட்டத்தரசிகள் திருமலம்ம தேவியையும், சின்னம்ம தேவியையும் உடன் அழைத்துக்கொண்டு தாணிக்கோட்டையில் ஆலயங் கொண்டமர்ந்தருளும் "அமரேச்சுரனை"த் தரிசித்து அங்கு, துலாபுருடம், இரத்தினதேனு, சப்த சாகரம் முதலான மேலான தானங்களையும், ஆலய பூஜைக்காக சில கிராமங்களையும், தர்மஞ் செய்துவிட்டு, உதயகிரியை வெற்றி கண்டு அங்கிருந்தபடியே திருப்பதிக்குச் சென்று ஸ்ரீ வேங்கடேசப் பெருமானைத் தரிசித்து 30000 பொன் வராகன்களைக்கொண்டு பெருமாளுக்குக் கனகாபிஷேகஞ் செய்வித்து மூன்றிழையுள்ள சொர்ண சரமொன்றையும், நவரத்



தினங்கள் பதித்த கங்கணங்களையும் அணிவித்து, கண்பெற்ற பேறாகத் தரிசித்துப் பேரானந்தத்தில் ஆழ்ந்ததாகத் திருப்பதி சாஸனங்கள் கூறுகின்றன.

8

இவர் தமிழ் நாட்டுச் சிவாலயங்கட்குச் செய்த திருப்பணிகளில் சிலவற்றை இங்கு குறிப்பிடுவது மிகையாகாது. ஆர்க்காடு ஜில்லாவிலுள்ள நடுநாட்டுத் திருவண்ணாமலைத் திருக்கோயிலுக்கு ஆயிரக்கால் மண்டபமும், திருக்குளமும், வானளாவிய திருப்பெருங் கோபுரமும், திருத்தில்லை யெனப்படும் சிதம்பரத்தில் சில திருப்பணிகளும் தனது வெற்றியின் ஞாபகார்த்தமாக ஒரு ஜயஸ்தம்பத்தையும், தஞ்சாவூர், திரிச்சிராப்பள்ளி, மதுரை, புதுக்கோட்டை சேலம் முதலிய சிவாலயங்களுக்குத் திருப்பணிகளும் செய்வித்து தானங்கள் செய்ததாகச் சாஸனங்கள் கூறுகின்றன. அம்மட்டோ! ஆந்திர நாடுகளில் கடப்பை, பல்லாரி, அனந்தபுரம் முதலான ஜில்லாக்களில் சிறந்த தேவாலயங்கள் கட்டுவித்ததாகத் தான சாஸனங்கள் ஆயிரம் வகையாகப் புகழ்ந்து பேசுகின்றன. இவைகளால் ராயரது அபாரமான தெய்வ பக்தி இனைத்தென்பது நிதர்சனமாகின்றதன்றோ!

9

இராயரவர்களின் அதிகாரத்திற்கு உட்பட்டிருந்த இத்தேசங்களிலிருந்து இராயரவர்கட்கு அனுப்பப்படும் கப்பத் தொகைகள் தேவாலய பரிபாலனத்திற்குரிய செலவுகளுக்காகச் செலவிடுவதற்கு அதிகாரம் கொடுத்திருப்பதாகக் கல்வெட்டுகளால் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அல்லாமல் இக்கல்வெட்டுகளில் தமிழ் நாட்டில் செலுத்தப்பட்டு வந்த கப்பத் தொகைகள் இன்னவையெனத் தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்கிறது. அவைகளால் பின் வரும் விவரங்களும் காணப்படுகின்றன. சாலியன் ஒரு நெசவுத் தறிக்கு மூன்று பணமும், விவசாயி ஒரு ஏக்ராவுக்கு மூன்று பணமும், ஏகரோநு, வரிசோநு, அலமங்கி, நோதி, ஆருகுபேரு என்ற பெயர்களுள்ள வரிகளும் வாடிக்கையாக செலுத்தப்பட்டு வந்தன. இவ்விதமாக இராயரது சாமந்த அரசர்கள் பலர் 14, 15 ஆம் நூற்றுண்டுகளில் பலவகையான கப்பங்கள் வசூல் செய்து வந்ததாகவும்; துங்கபத்திரா கிருஷ்ணா நதிகளில் செலுத்தப்படுகின்ற பலவகை ஓடங்களுக்கும் வரி விதித்து வசூல் செய்திருப்பதாக அந்நாட்டுச் சாஸனங்களிலும், கலியாண காலங்களில் விவாக வரியொன்று விதித்து வசூலித்ததாக 'கடகி' சாஸனத்திலும் காணப்படுகின்றன.

10

இவ்வரி விதிப்புக்களையும், நியமனங்களையும் நாம் கவனிக்கும்போது நமது தேசீய அரசர்கள் குடிகளின் பொருள்களைத் திறையென்ற பொருளில் மிகுதியாக வசூலித்தனர்கள் என்று தெளிவாக அறியப்படுகிறது. ஆனால், இப்பொருள்கள் அனைத்தும் அப்படியே திரும்பவும் ஜன சமுதாயத்தின் நன்மைகளுக்கே உபயோகிக்கப்பட்டதென்பது கவனிக்கத் தக்கது. தஞ்சாவூரில் வசூலிக்கப்பட்ட பதினாயிரம் வராகனையும், ஆர்க்காட்டில் வசூலிக்கப்பட்ட பதினாயிரம் வராகனையும்; சேலத்திலும் கடப்பையிலும் கொண்ட வீட்டிலும் வசூலிக்கப்பட்ட பெருந்தொகைகளையும் அந்தந்த நாடுகளிலுள்ள ஆலயங்களிலுள்ள திருப்பணிச் செலவுகளுக்கே திருப்பிக் கொடுத்துவிட்டதாகத் தெரிவதனால் வரி வசூல்கள் சுயநலமின்றியும், துராக்கிருதச் செலவுகளுக்கு உபயோகிக்கப்படாமலும் இருந்தது போற்றத் தக்கதே. இக்காலத்தில் வித்

தியா இலாகா, ஆராய்ச்சி இலாகா, மராமத்து இலாகா, எந்தெந்தக் காரியங்களைச் செய்கின்றனவோ, அக்காரியங்கள் அனைத்தையும் அக்காலத்து அரசர்களது தேவஸ்தான பரிபாலன டிபார்ட்மெண்டே நிர்வகித்து வந்தது. சிற்சில சமயத்தில் தோன்றும் பஞ்சத்தின் கொடுமைகளின்போது வரி வசூல்களை வஜா செய்வதை நமது தேசீய அரசர்கள் கைக்கொண்டிருந்தார்கள். இவ்வளவு நன்மைகளும் ஸ்ரீராயரது அரசு காலத்தில் அமுலில் இருந்ததென்றால் அரசாட்சியின் திறமை எவ்வளவு நேர்மையுடையதாகவிருக்கிறது!

11

குண்டூரில் வெட்டப்பட்டுள்ள கற்சாஸனம் ஒன்றில் ஸ்ரீ கிருஷ்ணதேவராயன், கி. பி. 1516ஆம் ஆண்டிலிருந்து 1520ஆம் ஆண்டுவரை அதாவது நான்கு ஆண்டுகள் போர் என்னும் பிரஸ்தாபமேயின்றி கிழக்கே "ஸ்ரீகடர்மம்" முதல் தெற்கே பாண்டியர் மதுரை வரை நிம்மதியாய் பகைவர்கள் எதிர்கொண்டு திரை செலுத்தி வணங்கப்பெற்று ஏகச் சக்ராதிபதியாக விளங்கினனென்றும், அதில் ஸ்ரீ கிருஷ்ண தேவராயனை "ஸ்ரீமான் மகாமண்டலேஸ்வர ராஜாதிராஜா ராஜ பரமேஸ்வர தேஜோநிதி ஸ்ரீ கிருஷ்ணதேவமகாராயன்" என்று புகழ்ப்பட்டிருப்பதாகவும், இராயரவர்களின் சேனாதிபதிகளில் 'இராயசகோண்டன்' 'மாரய்யன்' என்பவர்கள் விஜய நகரத்து வெற்றிக் கொடியை ஸிம்மாத்திரியிலும் ஸ்ரீகடர்மத்திலும் உயர்த்தியதாகவும் விவரிக்கப்பட்டிருக்கின்றது.

12

தென் நாட்டில் பல தேவாலயங்களைக் கட்டுவித்ததாகவும், ஜீர்ணமடைந்திருந்த கோயில்களைச் செம்மையாகச் செப்பனிட்டதாகவும், அவைகளின் நித்திய பூஜைகளுக்குப் போதிய பொருள்களும், பூமிகளும் தானம் செய்ததாகவும், அந்தணர்களுக்கு அபரிமிதமான தானங்களைச் செய்ததாகவும், மதுரை, இராமநாதபுரம், திருவண்ணாமலை, தென்கன்னடம் முதலிய இடங்களில் ஸ்ரீ கிருஷ்ணதேவராயனின் கல்வெட்டுகள் காணப்படுவதனால் இவனது ஆட்சியில் இவனது நாடு அதுவரையிலும் வியாபித்திருந்ததென்றும் அறியக்கூடியதாகவிருக்கிறது. இராமநாதபுரம் ஜில்லாவில் வெளியான சாஸனங்களைக் கொண்டு கவனித்தால் இவன் ஈழம் முதலான தேசங்களை வெற்றிகண்ட விஷயம் விளக்கமாகின்றது. ஸ்ரீ வேங்கடய்யா அவர்கள் வெளியிட்ட சாஸனம் அபூர்வமானதென்றும், அதிலும் தமிழ்ச் சாஸனங்கள் முக்கியமானதென்றும், அவற்றில் இராயர் ஈழதேசத்தை வெற்றிகொண்ட விஷயம் விளக்கமாக அறியக்கூடியதென்றும் கூறப்பட்டிருக்கிறது.

13

ஸ்ரீகிருஷ்ண தேவராயன் வைணவ மத அபிமானியாயிருந்தும் சைவ மதத்தை ஆதரித்தும், சிவாலயங்களை மிகுதியாகக் கட்டுவித்தும், அவைகளுக்கு அபரிமிதமான மான்யங்கள் அளித்தும் உள்ள செய்கைகள் முதலியவற்றால் இராயர் மதத்வேஷமற்ற சமரஸமுடையவரென்பது புலனாகின்றது. ராயர் ஆந்திரரும், தெலுங்கு பாஷையே தாய்ப்பாஷையாகக் கொண்டிருப்பவரும் வைணவ மதத்தினரும் ஆனதால் திருவேங்கடம் எனும் திருப்பதியில் ஆலயங்கொண்டருளும் ஸ்ரீ வேங்கடேஸப் பெருமானைத் தனது ஆன்ம நாயகனாகவும் வழிபடு கடவுளாகவும், குல தெய்வமாகவும் கொண்டு மிகுதி



யாக அன்பு செலுத்தி வழிபட்டு வந்தார். தேசத்திலுள்ள வைணவ க்ஷேத்திரங்களில் பழைமையும் பெருமையும், கீர்த்தியும், சிறந்து மிகவும் பெரியதாய், பொது மக்களால் நன்றாக மதித்து வணங்கப்பட்டுவருவதாய்த் திகழ்வது திருப்பதியேயாம். எது வரையிலும் குலதெய்வங்களிடத்தில் நமக்கு அன்பும் ஆர்வமும் இருக்கிறதோ, எவ்வளவு காலம் நமது பெரியோர்களான முனிபுங்கவர்கள் பிறர் கண்களுக்கு அகப்படாமல் வசிக்கின்ற ஏகாந்த ஸ்தலங்களான மலைகள், ஆரணியங்கள் நமக்கு யாத்திரை க்ஷேத்திரமாகவிருக்கிறதோ, அவ்வளவு காலம் ஸ்ரீ கிருஷ்ண தேவராயனது கீர்த்தி மலினமடையாமலே இருக்கும். ஸ்ரீ கிருஷ்ணதேவராயன் பெருமாளிடத்தில் பேரன்புள்ளவரென்பதற்கு அடியில் வரும் உதாரணமே சிறந்ததொரு சான்றாகும். அது:—"ஓரிடத்தில் பிரதிஷ்டிக்கப்பட்டுள்ள ஸ்ரீ கிருஷ்ணதேவராயனுடைய சிலாவிக்கிரகம் ஒன்றில் ஒரு அங்கவஸ்திரத்தை இடுப்பில் தரித்து மற்றொரு வஸ்திரத்தினால் இடுப்பை வரிந்து கட்டிக்கொண்டு, இரு கரங்களையும் அஞ்சலியாகச் சேர்த்து சிரசின்மீது வைத்து இரு மனைவியர்களுடன் பக்தி விஸ்வாசத்துடன் நின்று வணங்கும் காட்சியைக் காண்கிறவர்கட்கு ராயருக்குக் கடவுளிடத்திலுள்ள முதிர்ந்த அன்பு இனைத்தென வருணிப்பது இயலாதென்னும் முடிவு தோன்றும்". என்பது.


## இரத்தினபுரி இரகசியம்
## மூன்றாவது கதை.

நமது 'ஆனந்தன்' வாசகர்கள் வேண்டுதலுக்கிணங்க ஆரம்பித்த நமது 'மனமோகினி' என்னும் நாவல் சஞ்சிகையின் 10-வது ஆண்டு முடிந்து இந்த பிப்ரவரி மாதம் முதல் 11-வது ஆண்டு பிறந்திருக்கிறது. இதில் பல அற்புத நாவல்கள் தொடர்ச்சியாக வெளிவந்து பிறகு புஸ்தக ரூபமாக வெளியிடப்படுகின்றன. 'இரத்தினபுரி இரகசியம்' என்னும் நாவலின் முதல் இரண்டு கதைகள் கொண்ட ஆறுபாகம் பிப்ரவரி மாத சஞ்சிகையுடன் முடிந்துவிட்டபடியால் மார்ச்சுமாத சஞ்சிகைமுதல் அதே நாவலின் ஏழாவது பாகம் புதிய கதையுடன் வெளியாகி இப்போது எட்டாம் பாகம் அக்கதையின் தொடர்ச்சியாக வெளிவருகிறது. நாவல் பிரியர்கள் அனைவரும் அதற்குச் சந்தாதாரர்களாகச் சேர்ந்து நமக்கு உற்சாகமூட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். பிரதி மாதமும் கிரௌன் சைஸில் 80 பக்கங்களுடன் வெளியாகின்றது.

இதன் வருஷ சந்தா ரூபா 2–8–0 தான்.

மானேஜர்:—ஆனந்தபோதினி ஆபீஸ்,

தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# மன அடக்கத்தின் மாண்பு.

(தெல்லிப்பழை. கா. சின்னப்பா.)

"சினமடங்கக் கற்றாலும் சித்தியெல்லாம் பெற்றாலும்
மனமடங்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே."

என்று தன்னை யுணர்ந்த தாயுமானசுவாமிகள் சாற்றி யிருப்பதைச் சைவ சமயிகள் சகலரு மறிவர். மாட்சிமை வாய்ந்த மானிடப் பிறவியைப் பூர்வ புண்ணிய பூஜா பலத்தினாற் பொருந்திய நாமனைவரும் எல்லாவற்றிற்கும் மேலாய்க் கற்க வேண்டியது நமது மனதை யடக்கி நன்மையையும் உண்மையையும் கடைப்பிடித்து ஒழுகும் மார்க்கத்தைப்பற்றியே யாம். மனதை யடக்கி நல்வழியிற் செலுத்தும் சக்தி வாய்ந்தவன் அடையத்தகும் அநுகூலத்திற் களவில்லை. உண்மையான சந்தோஷமும், உறுதியான மனஆறுதலும், கல்வி யறிவொழுக்கங்களிற் சிறந்த கனவான்களின் கண்ணியமும் இவனுக்கே உரியனவாகும். கல்விக் கடலெனக் கற்றோர் கருதிடும் கல்வித்திறனையும், அளப்பரும் செல்வம் செல்வாக்கு முதலியவைகளிற் சிறந்து திகழும் சீலத்தையும் ஒருவன் பொருந்தி யிருந்த போதும், தன்னுடைய மனதை யடக்கும் தன்மையற்றவனா யிருப்பின் மேற்கூறியவற்றால் அவனடையத் தரும் பயன் அற்பமேனுமில்லை.

மன அடக்கம் சாதாரண கல்வின் பயனாய் அல்லது இயல்பாய் ஒருவனிலமைந்து காணப்படுவது அரிதினுமரிதென்று சொல்வது மிகையாகாது. சிறந்த நூல்களை ஐயந்திரிபறக் கற்றுச் சற்சனசங்கத்தைச் சந்ததமும் சார்ந்து நிற்கும் மேதாவிகளனேகர் தம் மனதை யடக்கும் சக்தியைப் பெறாதவர்களாய் மனதின் வசப்பட்டு வாட்டமுற்று வருந்துவதை நாம் அல்லும் பகலும் அனுபவத்திற் கண்டிருக்கிறோம். இது மாத்திரமா? முற்பிறவிகளிற் செய்த நற்கருமங்களின் பயனாய் உலகப்பற்றற்றுத் திருவருளை நாடி நிற்கும் தெய்வத்தன்மை வாய்ந்த பட்டினத்தடிகள் தாயுமான சுவாமிகள் முதலிய ஞானிகள்கூட மனதை யடக்குவதன் கஷ்டத்தைப்பற்றித் தங்கள் அனுபவத்தின் சாரத்தைத் திரட்டிப் பக்தியோடு பாடிய பாக்களிற் பலமுறையும் பகர்ந்திருக்கின்றனர். உண்மை ஞானம் உதிக்கப்பெற்ற உத்தமர்கள் உலகப்பற்றற்ற பின்பும் மனதை யடக்கும் மாண்பைப் பெறுவது இலகு வல்லவென்று செப்பியிருக்கும் பொழுது, சாதாரண மனுடர் மனம்போன போக்கெல்லாம் போய்ச் சாந்தத்தைப் பெறும் சக்தியை யடைவது எவ்வளவு கஷ்ட மென்பதை யார்தானறியார்? மனவடக்கத்தைப் பெற விரும்புபவன் வேறோர் தியானமு மில்லாதவனாய் இறைவன் இணையடிகளை எப்பொழுதும் ஏத்தி யேத்தித் தொழுதல் இன்றியமையாதென்பதை மறத்தல் கூடாது.

நெப்போலியன் கெய்சர் முதலிய உலக கீர்த்தியில் உன்னத நிலையெய்திய ஒப்புயர்வற்ற சக்கரவர்த்திகள்கூடத் தங்கள் மனதை யடக்கும் சக்தியற்றவர்களா யிருந்தபடியாற்றான் மனம்போன போக்கெல்லாம் போய் ஆயி



ரக்கணக்கான அந்நியநாட்டுச் சகோதாரை அல்லும் பகலும் அழிப்பதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து அதோகதி யடைந்ததை அனைவரு மறிவர். நிலையிலாப்புகழை நிலையென நினைத்து இவர்கள் செய்த நிஷ்டூரங்களைப்பற்றிச் சரித்திரவாயிலாய் நாம் அறியத்தக்கதா யிருக்கின்றது. ஒருவன் பொய்ப்புகழ் பெறுவதற்காக எத்தனை இலட்சம் குடும்பங்களை இல்லாமற் செய்தும் இன்னலுறச் செய்தும் ஈற்றிலெய்தும் இன்பத்தை உற்று நோக்கும் பொழுது மனதிற்கு அடிமைப்படுவனின் பரிதாபநிலை எத்தன்மைத் தென்பதை ஒருவாறு உணரக் கூடும். மனஅடக்க மற்றவன் உலக மதிப்பில் உன்னத நிலையடைவது முடியாத காரியம். உலகத்தவராற் போற்றப்படவேண்டுமென்னும் அவா எவனுக்குண்டோ அவனுடைய மனம் எப்பொழுதும் கொதித்துச் சஞ்சலப்பட்ட படியே யிருக்கும். உலகம் முழுவதையும் வெற்றி கொண்டு ஒரு குடைக்கீழ் ஏகசக்கராதிபத்தியம் செய்வதிலும் பார்க்க ஒருவன் தன்னுடைய மனதை யடக்கி யாளக்கூடுமாயின் அதுவே சரியான ஆளுகை யென்று மதிக்கப்படத் தக்கது.

மன அடக்கமுள்ள ஒருவன் தான்மாத்திரம் நித்தியவின்பத்திற் கருகனாவதோ டமையாது தன்னைச் சார்ந்து நிற்கும் சகலருக்கும் சாற்றற்கரும் நன்மை புரிபவனாவான். அவனுடைய நன் முன்மாதிரி அனேகருடைய சீவியம் அனுகூலம் நிறைந்து விளங்கச் செய்யும் ஆற்றலை அவனுக்களிக்கும். இவ்வுலகிலுள்ள ஒவ்வொருவனும் தன்னைச் சூழவிருக்கும் இனத்தவர்கள் சிநேகிதர்கள் இன்னும் மற்றும பலருடனும் கூடி வாழவேண்டியவனா யிருக்கின்றான். ஆதலால் அவன் தன் மனதை யடக்கி அதன் வசப்படாது நல்லொழுக்கத்தின் வழி நின்று அனுதினமும் செய்பவை யனைத்தும் அவனைப்பற்றி யிருப்பவர்களுடைய மனங்களில் அவர்களை யறியாமல் சில நல்ல மாற்றங்களை உண்டாக்குவதற்கு ஏதுவாயிருக்கு மென்பதை ஒருவரும் மறுக்கத் துணியார். இதன் பொருட்டன்றோ "சற்சனருறவு சர்க்கரைப் பாகுபோல்" என்று தம்மை யறிந்த சற்புத்திர சிகாமணிகள் சாற்றியிருக்கின்றனர். ஒருவன் தன் சீவியத்திற் செய்யக்கூடிய சேவைகள் பலவற்றுள்ளும் தீமையற்ற சீவியஞ் செய்வதால் மற்றவர்களுக்குத் திவ்விய நன் முன்மாதிரி காட்டும் சீலம் வாய்ந்தவனாயிருப்பதே சாலச் சிறந்ததென்பது நாமனைவரும் நன்கறிந்த விஷயம். இதை யறிந்திருந்தும் மனதை யடக்கும் மாண்பைப்பெற வியலாதவர்களாய் நாம் வாணாளை வீணே கழிப்பது எவ்வளவு விசனிக்கத் தக்கது!

"உள்ளது போதுமென்ற மனமே குறைவற்ற களஞ்சியம்" என்ற முதுமொழியின் உண்மையை உணராதார் யார்? ஆசைக்கு அடிமையா யிருப்பவனுக்கு ஒருபொழுதும் மன நிறைவும் மன அமைதியு மிராது. எவ்வளவு கல்வி செல்வம் செல்வாக்கு முதலியவைகளிருந்தாலும் உள்ளதோடு திருப்திப்படாது ஓடித்திரிந்து உழைப்பவனுக்கு ஓயாத மனக்கலக்கம் இருந்தபடியே யிருக்கும். மனவடக்க முள்ளவனுக்கு ஒன்று மில்லாதிருந்தாலும் எல்லாம் நிறைவாயிருப்பது போலவும், அவ்வடக்க மற்றவனுக்கு எல்லாம் நிறைவாயிருப்பினும் ஒன்று மில்லாதது போலவு மிருப்பது நாம் அனுபவத்திற் கண்டறிந்த உண்மை யல்லவா? மனம் விரும்புவதெல்லாவற்றையும் தேடி யடைவதற்கு யாரால் முடியும்? ஆனால் அவசியமற்ற, தேடற்கரியவைகளை நமது மனம் பெறுவதற்கு விரும்பும் பொழுது அதை யடக்கும் சக்தி நமக்கு வாய்க்

கப்பெற்ருல், அதிலும் பார்க்க மேம்பட்ட பெறற்கரும் நற்பேறு வேறுண்டா? மனவடக்க மற்றவனுக்கு முகமலர்ச்சியும் அகத் தூய்மையும் பொருந்துவது அரிதாகும். அதுவுமன்றி அவனிடத்தில் கோபம், பொருமை, ஆசை, தற்பெருமை முதலிய கெட்ட குணங்கள் எப்பொழுதும் காணப்படும்.

எத்தொழிலில் ஈடுபட்டிருப்பவனுக்கும் மனவடக்கம் அவசிய மென்பதை மறுத்தலரிது. ஆயினும் ஆசிரியத்துவத் தமர்ந்திருக்கும் ஒருவனில் எவ்வளவுக்கு மனவடக்க மிருக்கிறதோ அவ்வளவுக்கு அவன் தான் ஈடேறுவது மாத்திரமன்றி, அவனிடத்தில் கல்வி கற்கும் பாக்கியம் வாய்ந்த பாலர்களனைவரையும் ஈடேற்றும் இணையிலாக் கருவியாயு மிலங்குவான். ஓர் ஆசிரியன் தன்னிடம் கல்வி கற்கும் மாணவர்களை ஆக்கவும் அழிக்கவும் வல்லமையுள்ளவனென்பது யாருமறிந்த மறுக்கொணு உண்மை யாகும். இந்நியாயம் பற்றியே ஆசிரியத்துவத் தமர்பவனின் பொறுப்பு மிகவும் பாரமானதென்று பலரும் பகர்வதுண்டு. மனதை யடக்க முடியாதவன் ஒருநாளைக்குத் தானும் ஆசிரியனுயிருப்பதற்குச் சம்மதித்தல் உசிதமல்ல. ஏனெனில் அவன் தினந்தோறும் அனேக பிள்ளைகளின் சீவியத்தைக் கெடுப்பவனுவான். அதுவுமன்றி அவ்வாசிரியன் கல்வி கற்பிக்கும் விஷயத்திற்கூட அனுகூலப்படுவது அசாத்தியம். ஓர் ஆசிரியன் மனவடக்க மின்மையால் செய்யும் ஒவ்வொரு செய்கையைப்பற்றியும் அவனிடத்தில் கல்வி கற்கும் ஒவ்வொரு மாணவனுக்கும் தெரியாமலிராது. இதை முற்றுயறிந்திருந்தும் எத்தனையோ ஆசிரியர்கள் மனதின் வசப்பட்டு மாழ்கின்றதை எம் அனுபவத்திற் கண்டிருக்கிறேும். எத்தொழிலாளனிலும் பார்க்க ஆசிரியத்தொழிலி லமர்ந்திருப்பவனே எண்ணிறந்த இளைஞர்களுக்கு எந்நேரமும் நன் முன்மாதிரி காட்டுவதற்கு ஏற்ற தருணமுடையவனு யிருக்கிறுன். ஆசிரியன் தன்னிலும் பார்க்க எவ்வகையிலும் எத்தனையோ மடங்கு மேம்பட்டவனென்று எம்மாணவனும் எப்பொழுதும் எண்ணுவது இயல்பே. அப்படி யிருக்கும்பொழுது மாணவருக்கு மனவடக்கத்தைக் கற்பிப்பதற்கு ஆசிரியன் தான் மனவடக்க முள்ளவனுயிருப்பது இன்றியமையாச் சாதனமாகும். அதை மறந்துதான் மனவடக்க மற்றவனுயிருப்பினும் அதைப் பொருட்படுத்தாது மாணவர்களை மனவடக்க முள்ளவர்களா யிருங்களென்று ஓர் ஆசிரியன் எவ்வளவு ஊத்துக் கூறினும் அதனுல் ஒரு பயனும் அடையத்தக்கதா யிராது. ஆசிரியனைப் போலவே எத்தொழிலில் ஈடுபட்டிருந்து சிலரையாவது தன் முன்மாதிரியால் நற்பயனடையச் செய்ய விரும்பும் எவனும் தன் மனவடக்கத்தைப்பற்றி மிகவும் சாவதானமா யிருத்தல் வேண்டும்.

இது வரையும் கூறியவற்ருல் மனவடக்கத்தைப் பெறுவது மிகவும் கஷ்டமாயிருப்பினும் அவ்வடக்கத்தைப் பெறுவது அவசிய மென்பதும் அவ்வடக்க முடையவனுற் செயற்பால நன்மைகள் அளப்பில வென்பதும் ஓரளவுக்கு எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. ஒருவன் இவ்வுலகில் சீவித்து நன்னிலை யெய்த விரும்பினுல் குரங்கிலும் கூடிய சேட்டையுள்ள மனதைச் சிவத்தியானத்தின் பயனுய் அடக்கி இப்பிறவியின் நோக்கத்தை நிறைவேற்றத் தண்டித்தல் வேண்டும். மனவடக்கத்தைப் பெற்றுத் திருவருளைத் தேடி அதன் வாயிலாய்ச் சிவபத மடைவதையே எமது சீவியத்தின் ஒரே இலக்காகக் கொண்டு அதற்கு வேண்டியவைகளைச் செய்வதைக் கனவிலும் மறவாமல் கண்ணியம்பெற் றுய்வோமாக.

# வணிக தர்மம்.

("கலாவதி")

"வணிகர்க்கழகு வளர் பொருள் ஈட்டல்"

[ஆங்கிலப் பேரறிஞராகிய Ruskin ஆசிரியர் எழுதிய "Unto This Last" என்னும் நூலின் மொழி பெயர்ப்பு.]

வணிகர் தொழில் தேசத்திற்கு வேண்டிய உணவு உடை முதலிய நுகர் பொருட்கள் ஈட்டித் தருவதே என்பதை மனதில் நன்கு பதிய வைத்துக்கொள்ள வேண்டும். "ஈட்டல்" எனவே, உபலக்கணத்தால், (தேச மக்களது உபயோகத்திற்கென) ஈட்டிய அப்பொருள் பழுதுருமற் பேணுதலும், பின் உரிய காலத்தே அப்பொருட்களைத் தக்கபடி பகுத்து உரிய இடத்திற் சேர்ப்பித்து அளித்தலுங் கொள்க. ஒரு ஆசிரியர் தொழில் தக்ஷிணை பெறுவதே யாகாமைபோல, வணிகன் தொழிலும் (தேசத்திற்குவேண்டிய பொருட்களைத் தேடித் தருமிடத்துத்தான்) லாபம் பெறுகையாகாது. தக்ஷிணை, கற்பிக்குந் தொழிலுக்கு உரிய அவசியமான ஜீவனும்சம் ஆகுமன்றி நல்லாசிரியர் வாழ்க்கையின் லக்ஷியம் ஆகாது. உண்மை வைத்தியனுக்கும் தான் பெறும் வேதனமே தனி லக்ஷிய மாகாது. இதுபோலவே உண்மை வியாபாரிக்கும் தான் பெறும் கூலி (லாபம்) வாழ்க்கையின் நோக்கமாகாது. மூவரும் கூலி கருதாது ஆற்றவேண்டிய ஒரு தொழில் உடையவர். இத்தொழில் சில சமயங்களில் கூலியின் மறுதலைக்கே செய்யவேண்டி இருக்கும். ஆசிரியர் தொழில் அறிவூட்டுவது; வைத்தியன் தொழில் நோய் தீர்ப்பது; வணிகன் தொழில் ஜீவாதாரமான பொருட்களைத் தேடித் தருவது.

தன் வியாபாரச் சரக்குகளின் குணகுணங்களையும் அவற்றைப் பெறு
தற்கு அல்லது ஆக்குவதற்கான வழி வகைகளையும் அப்பொருட்களின் ஆ
யந்த வரலாறுகளையும் நன்கு அறிந்திருப்பது வியாபாரியின் கடமை. இ
சரக்குகளைப் பரிபூர்த்தியான நிலைமையில் வாங்கியோ அல்லது ஆக்கியோ
கூடியவரை மலிந்த விலையில், அப்பொருள் பெரிதும் வேண்டப்படும் இட
இல் பரிவர்த்தனஞ் செய்யும் வேலையில் தன் பூரண சக்தியையும் முழுக் க
னத்தையும் செலுத்த வேண்டும். எந்தப் பொருளையும் தேடிப் பெற்று
கொள்வதோ அல்லது ஆக்கிக் கொள்வதோ பலர் மூலமாகவே நடக்கவேண்டி
இருப்பதால், வியாபாரி தன் தொழில்செய்யு முகத்தால் எத்தனையோ மன
தர்க்குத்தலைவனும் அதிகாரியுமாகின்றுன். இதனுல் அவர்கள் வாழ்க்கையில்
பொறுப்பில் பெரும்பாகம் அவனையே சார்கின்றது. ஆகவே, சரக்குகளை
கூடியவரை சுத்தமாகவும் மலிவாகவும் எவ்வாறு தேடுவது என்பதை ஆலோ
சிப்பதுடன், இப்பொருட்களை ஆக்குவதில் அல்லது இடம் பெயர்ப்பதி

உள்ள வேலைகளை, அவற்றைச் செய்வார்க்குக் கூடிய அளவு நன்மை தரத்தக்கதாக எங்ஙனம் அமைத்துக்கொள்வது என்னும் சூழ்ச்சியும் இவன் கடமை ஆகின்றது.

இந்த இரண்டு வேலைகளையுஞ் செய்வதற்கு உயர்ந்த புத்தி சாதுரியம், பொறுமை, அன்பு, திறமை ஆதியன வேண்டப்படுதலின், வர்த்தகன் தன் முழு சக்தியையும் கவனத்தையும் இவ்வேலையிற் செலுத்தவேண்டும். இவ்வாறே இக் கடமைகளைச் சரிவரச் செய்வதில், போர் வீரன் அல்லது வைத்தியன் கடமைப்பட்டிருப்பதுபோலவே, இவனும், தன் உயிரையும், எவ்வழியில் வேண்டப்படுகிறதோ அவ்வழியில் அர்ப்பணஞ் செய்யக் கடமைப்பட்டிருக்கின்றான். இவன் தன் தொழிலில் இரு விஷயங்களிற் குறைவு வராமற் காக்கவேண்டும். முதலாவதாக வாக்குறுதி தவறாமல் ஓம்பவேண்டும். [சொன்ன சொல் தவறாமையே வியாபாரத்திற்கு ஆதாரம்.] இரண்டாவதாகத் தான் கையளிக்கும் சரக்குகளின் சுத்தத்திற்கும் பரிபூர்த்திக்கும் பழுதின்மைக்கும் தானே பொறுப்பாளி என்பதை நன்கு உணர்ந்து இவற்றிற் குறைவு வராமல் ஓம்பவேண்டும். சொன்னசொல் தவறுவதினும், அல்லது, சரக்குகளில் தகாத பொருட்களைக் கலத்தல், சரக்குகளைத் தகுதி குறைந்தனவாகச் செய்தல், அறிந்து வைத்தே இவ்வஞ்சனைகட்கு உடன்படுதல் ஆதிய துரோகங்கட்கு ஒருப்படுவதினும், பொருட்களின் தகுதியிற் குறைவு வாராமற் காக்குமிடத்து நேரும் எவ்வித துன்பத்தையும் வறுமையையும் சிரமத்தையும் அஞ்சாமல் தாங்குவது ஆண்டு அவன் கடமையாம.

இன்னும், தன்னிடம் வேலைக்கு அமர்ந்தவர்களது அதிபதியாகையால், வியாபாரி (—இப்பதம் பெரிய பண்ணை முதல்வனையும் கைத்தொழிற்சாலையதிபனையும் அடக்கும்) அவர்கள்பால் தந்தைக்குரிய ஆணையையும் பொறுப்பையும் வகிக்கின்றான். பெரும்பாலும், ஒரு வியாபார ஸ்தாபனத்தில் வேலைக்கு அமரும் ஆளானவன், தன் குடும்பக் கூட்டுறவிலிருந்து முற்றாக விலக்கப்படுகிறான். முதலாளியே அவனுக்குத் தந்தையாக வேண்டும்; இன்றேல், அவன், நாளுக்குநாள் தன் தேவைகளை அறிந்து வேண்டிய உதவி செய்யவும் புத்தி புகட்டவும் தந்தையில்லாதவனாகின்றான். எப்பொழுதுமே, முதலாளியின் அதிகாரமும், வியாபாரத்தில் அனுஷ்டிக்கப்படும் நியாயா நியாய பாவங்களும், வியாபார ஸ்தலத்து ஏனைய தொழிலாளிகளின் சகவாசமும் அவரவர் குடும்ப வாழ்வினும் அதிகமாக இளைஞர் மனதைப் பாதித்துக் குடும்பச் செல்வாக்கை, நன்மைக்கோ தீமைக்கோ, இல்லாதாக்கி விடுகின்றன. ஆகவே, ஒரு முதலாளி தன் கீழ் வேலை செய்பவர்களை நியாயமாக நடத்த ஒரே வழியாதெனில், தன் மகன் ஏதோ சில சந்தர்ப்பங்கால் இவர்களைப்போல் தன் கீழ் வேலை பார்க்க நேர்ந்ததால், தான் அவனை எப்படி நடத்துவானோ, அப்படியே இவர்களையும் தான் நடத்தி வருகின்றானா என்பதைக் கண்டிப்பாகக் கவனித்து அப்படி நடந்துகொள்வதே.

ஒரு கப்பலின் தலைவன் தன் புதல்வனை ஒரு சாதாரண மாலுமியாக நியமித்தான் அல்லது நியமிக்க நேர்ந்தது என்று வைத்துக்கொள்வோம்; அப்பொழுது தன் மகனை நடத்துமாறே எப்பொழுதும் தன்கீழ் வேலை செய்யும் எல்லா மாலுமிகளையும் நடத்தக் கடமைப்பட்டிருக்கின்றான். இதுபோலவே ஒரு தொழிற்சாலை அதிபனும், தன் மகனை, ஒரு சாதாரண தொழிலாளியின்



ஸ்தானத்தில் வைப்பது சரி யென்று கருதியோ அல்லது சந்தர்ப்பங்களால் உந்தப்பட்டோ, தன் தொழிற்சாலையில் சாதாரண தொழிலாளியாக நியமிக்க நேர்ந்தால், அம்மகனை எப்படி நடத்துவானோ அப்படியே எப்பொழுதும் எல்லாத் தொழிலாளிகளையும் நடத்துவது கடமையாம்.

கப்பல் உடைய நேர்ந்தால் ஏனையோரையெல்லாம் பத்திரமாக வெளியேற்றிவிட்டுக் கடைசியாகவே தான் கப்பலிலிருந்து வெளியேறுவதும், பஞ்சம் வந்தவிடத்துத் தன் கடைசிச் சிறு உணவையும் மாலுமிகளுடன் சேர்ந்து உண்ணுதலும் கப்பற்றலைவன் கடமையாதல்போல, ஒரு தொழிற்சாலை அதிபனுக்கும், வியாபாரத்தில் கஷ்ட நஷ்டங்கள் வந்தவிடத்துத் தானும் தொழிலாளிகளுடன் சிரமங்களைப் பகிர்ந்து கொள்வதும், அவர்கள் தலைமீது பொறுக்க விடுவதினும் அதிகமாகவே கஷ்ட நஷ்டங்களைத் தான் தாங்குவதும் கடமையாம். பஞ்சமோ கலமுடைவோ யுத்தமோ நேர்ந்த வழித் தந்தை மைந்தனைக் காக்கத் தன் உயிரைக் கொடுக்க முந்துதல்போல, முதலாளியும், வியாபாரம் பங்கமுற நேரின், அதனால் வரும் கஷ்டநஷ்டங்கள் தொழிலாளிகளைத் தாக்காதபடி தான் அவற்றைத் தாங்க முந்தவேண்டும்.

இதெல்லாம் விந்தையாகத் தோற்றலாம்; ஆனால், உண்மையில், இது விந்தையாகத் தோற்றுவதொன்றே இதில் விந்தை. இவை எல்லாம் உண்மையே; அதுவும், ஏக தேசத்தில் அல்லது கொள்கைமட்டில் உண்மையல்ல; நிரந்தரமான, அனுபவ சாத்தியமான உண்மை. இதற்கு விரோதமான வியாபார முறைகளெல்லாம் போலி நியாயங்களை ஆதாரமாகக் கொண்டவையும் ஆபாசமான முடிவுகளுக்குக் கொண்டு விடுவனவுமாம். (தொடரும்.)

[ஆங்கில பொருளாதார சாஸ்திரங்களின் போலிக் கொள்கைகளை மறுக்க எழுந்த பாகங்களும், கிரேக்க, உரோமப் பெருநூல்களையும் விவிலிய நூலையும் எடுத்தாளும் பாகங்களும் மொழி பெயர்க்காது விடப்பட்டன.]

ஏஜண்டுகள் தேவை.

எல்லா ஊர்களிலும் நமது 'ஆனந்தபோதினி' மாத, வாரப் பத்திரிகைகளை விற்பதற்கும், சந்தா சேர்த்துக் கொடுப்பதற்கும், விளம்பரம் சேர்த்துக் கொடுப்பதற்கும் தக்க சாமர்த்தியமுள்ள ஏஜண்டுகள் தேவை. விவரம் அறிய விரும்புவோர் எமக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும். நமது புஸ்தகங்களும் பத்திரிகைகளும் எல்லா ஸ்டேஷன்களிலுமுள்ள ஹிக்கின்பாத்தம் புஸ்தகசாலைகளில் கிடைக்கும்.

மானேஜர்.

# "உழைப்பின் பயன்!"

(ஆரியூர்-வ. பதுமநாப பிள்ளை பாடியது.)

வானம் இருண்டு குமுறுது;
　　மழையது 'சோ' எனப்பொழியுது;
ஈனக் குடிசையில் ஒழுக்குகள்
　　எத்தனை! எங்கணும் ஈரமே
யான தரையிலோர் மூலையில்
　　ஐயகோ! நோயும் பசியுமாய்
மானம் மறைக்கக் கந்தை சுற்றி
　　மங்கை ஒருத்தி படுத்துளாள்!

மாதங்கள் ஏழுடைப் பாலகன்
　　வயிற்றுப் பசியின் கொடுமையால்
மாதவள் பக்கத்தில் அழுகிறான்!
　　வயது முதிர்ந்த ஓர் கிழவியங்(கு)
ஓதுமவனைச் சீராட்டியும்
　　ஓய்ந்திலன்; வயிறு பொறுக்குமோ?
வாதனைப் பிணியால் ஓர் கிழவனும்
　　வருந்திப் படுத்துக் கிடக்கிறான்

காட்சியதைக் கண்டு கலங்கியே
　　கண்களைக் கைகளால் மூடியே
மாட்சி மழைக்குப் பறைச் சுப்பன்
　　வசை பல சொல்லினன்; ஓய்வின்றி
வாட்டும் மழையினால் பிழைக்கின்ற
　　வழியை நாடிச் செல்ல வகையிலை!
வீட்டிலும் தானிய மணி இலை;
　　வெளியில் கடன் கொடுப்போர் இலை!

ஐந்து தினங்களாய்ப் பட்டினி
　　அன்னை படுத்துக் கிடக்கிறாள்!
மைந்தனுக்குத் தாய்ப்பால் ஊட்டவும்
　　வகையும் இலை; பசும்பாலுக்கு



எந்த இடத்திற்குச் செல்லுவான்?
　　ஏழைச் சுப்பன் அவர் துன்பத்தைச்
சிந்தையில் எண்ணிக் கலங்குவான்?
　　செய்வகை இன்னதென்(று) அறிகிலான்! (4)

பொத்தற் கோணியொன்றைத் தலையின் மேல்
　　போட்டுக்கொண்டு சுப்பன் புறப்பட்டான்;
சித்தமும் உடம்பும் நடுங்கவே
　　செல்வப் பண்ணையார் முன் நின்றான்.
"மெத்தவும் வருத்தப் படுகிறேன்;
　　வீட்டில் எல்லோரும் என் ஆண்டையே!
சுத்தப் பட்டினியாய்க் கிடக்கிறார்;
　　சூதிலை; சொல்வது சத்தியம்! (5)

ஆறு படிகள் நெல் ஆயினும்
　　அகம் இரங்கிக் கொடுப்பீர்"—என்றான்;
கூறியதைக் கேட்ட பண்ணையார்
　　கோபம் மிகுந்(து) "அடா! கழுதையே!
மீறினையோ? மாதம் பிறந்ததோ?
　　வேறே உனக்கு நெல் வேண்டுமோ?
தாறுமாறாய்ப் பேசும் பல் பொய்கள்
　　தம்மில் ஏமாந்திடேன் யான்"—என்றார். (6)

"சொன்னதில் பொய்யிலை; என் வீட்டில்
　　சொற்பமும் நெல் இலை; ஒருவரை
என்னொடு கூட அனுப்பியே
　　எங்கும் சோதிக்கச் செய்வீர்!"—என்றான்;
"என்னடா சொல்லினை? குடிசைக்குள்
　　யானும் ஒருவனை அனுப்பவோ?
உன்னிட முள்ள கொழுப்பினை
　　ஓட்டுவேன் பார்!"—என்றார் பண்ணையார் (7)

உடலுழைப்பின்றிச் சுகங்களில்
　　உவகை பெறும் அந்தப் பண்ணையார்,
கடமைக்(கு) உழைத்திட்ட சுப்பனைக்
　　கைகள் சலிக்கச் சவுக்கினால்
கொடுமையாய் அடி பல அடித்திட்டார்;
　　குமுறிய நெஞ்சொடு சுப்பனும்

கடவுளிடத்தில் முறையிடக்
கருதி ஓர் கோயில் அடுத்தனன்


கரங்கள் கூப்பிச் சுப்பன் கும்பிட்டான்;
கண்டுவிட்டார் ஒரு முதலியார்!
இரங்கிலர்; 'பஞ்சமன் அவ்விடம்
எப்படி அணுகலாம்' என்று எண்ணி—
நெருங்கினால் 'தீட்டு' ஒட்டிக்கொள்ளுமென
நினைந்(து) அவன்மேல் கல் எறிந்திட்டார்;
பெருந் துயர்ப்பட்ட அச்சுப்பனும்
பெரிதும் பயப்பட்டே ஓடினான்!

குடிசையடைந்து தரையினில்
குப்புற வீழ்ந்தவன் குமுறினான்;
"படியாளாய்ப் பண்ணையார் வயலிலே
பற்பல வருடங்கள் உழைத்ததற்(கு)
அடிகளோ பயனெனக் கிடைப்பன!
ஆண்டவனே!"—என்று அழுதனன்;
படிமகளாகிய அன்னைக்(கு) அப்
பஞ்சையின் மேல் அருள் இல்லையோ?

வேறு.

கருத்தினிலே செருக்கின்றி கண்ணனொடு
காகுத்தன் கருணையோடு
வருத்தம் மிகும் எவரிடத்தும் மனம் இரங்கித்
துணை செய்த வண்மை எண்ணில்,
செருக்கினரே! அவர் வாழும் திருக்கோயில்
புகும் உரிமை 'தீண்டாதார்'க்கு
இருக்கவில்லை எனத் தடுக்க எவ்வண்ணம்
துணிவீரோ? இயம்புவீரே!

வீரர் பலர் 'தீண்டாமை வேண்டாமை'
என்கின்றார்; வெகுளி மிக்க
ஈரமிலா நெஞ்சினர் அவ் இயக்கத்தைப்
பழிக்கின்றார்; எளியர் வாட
பாரத நாட்டினைப் பற்றும் பழி பாவம்
உள்ளவரை பயனொன்றில்லை;
வீரரெலாம் தீண்டாமை வெம்பிணியை
நீக்க பணி விரைந்து செய்வீர்!




# குமரனும் கொக்கும்.

(ரா. பி. சேதுப் பிள்ளை, பி.ஏ., பி. எல்.)

விளங்கும் பறவையும் விரும்பியுறையும் வளமார்ந்த மலையில் வேட்டையாடி மகிழுமாறு ஒரு வேடன் புறப்பட்டான். கொக்கிறகு தலையில் முடித்து, வக்கா மணியைக் கழுத்திலணிந்து, வரித் தோலைக் கச்சையாய் வரிந்து, கட்டியும் கோலும் கையிலெடுத்து, வேட்டுவன் மலையினுள்ளே புகுந்தான். இவ்வாறு வெளிப்பட்ட சிங்கன் என்னும் வேடனது குறிஞ்சிக் கோலத்தை,

"கொக்கிறகு சூடிக்கொண்டு குருவி வேட்டை யாடிக்கொண்டு
வக்காமணி பூட்டிக்கொண்டு மடவார்கண்போல் சுட்டிகொண்டு
தொக்காக் கச்சை யிறுக்கிக்கொண்டு துள்ளுமீசை முறுக்கிக்கொண்டு
திக்கடங்காக் குளுவசிங்கன் திரிகூடச் சிங்கன் வந்தான்."

என்று குறவஞ்சிக் கவிஞர் கூறிப்போந்தார். நல்ல வேட்டையாடும் நாய்போல் தடம்பிடித்துப் பூனைபோல் ஒளிபோட்டு, நரிபோல் பம்மி, அரிபோல் அறையும் ஆற்றல் வாய்ந்த சிங்கன், ஆடிப்பாடி அகங்களிப்பாயினான். அப்போது அவ்வழியாகக் கண்ணியும் பொறியும் கையிலேந்திக் கானகப் பறவையைக் கருத்திலமைத்து நூவன் என்னும் குளுவன் அங்கு விரைந்து வந்தான்.

"ஊர்க்குருவிக்குக் கண்ணியும் கொண்டு
உள்ளாலும் வலியாலும் எண்ணிக்கொண்டு
மார்க்கமெலாம்பல பண்ணிக்கொண்டு
கோட்கார நூவனும் வந்தானே."

இவ்வாறு குற்றால மலையிற் கூடிய, வேடர் இருவரும் மனம் களித்து வேட்டை யாடத் தொடங்கினார்கள். பறவைபோல் ஒலிக்கும் பான்மை வாய்ந்த நூவன், புதரில் மறைந்து நின்று புள்ளொலி யெழுப்பினான். அவ்வொலியை இனவொலி என்று கருதி ஏமாந்து பறவைகளெல்லாம் அங்கு பறந்து ஓடிவந்தன. சிங்கன் அருகே யிருந்த மரத்திலேறிப் பறந்து வரும் பறவைகளைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தான். மாடப்புறாவும், மடமயிலும், காடையும், காக்கையும், கிள்ளையும், கொக்கும் குழாம் குழாமாய் வருவதைக் கண்டு குறவன் மனம் களித்து,

"கண்ணி கொண்டுவாடா—குளுவா
பண்ணவர் குற்றாலர் காரார் திரிகூடச் சாரலிலேவந்து

பண்ணிய புண்ணியம் எய்தினாற்போலப் பறவைகளை பறந்தே
கண்ணி கொண்டுவாடா—குளுவா [மயுது
கண்ணி கொண்டுவாடா"

என்று கூவினான். அவ்வுரை கேட்ட நூவன் இறுமாந்து கண்ணியைக் கையி லெடுத்து அதன் கணக்கை நுணுக்கமாய்க் கூறலுற்றான்.

"கலந்த கண்ணியை நெருக்கிக் குத்தினால்
காக்கையும்படுமே—குளுவா காக்கையும்படுமே
மலர்ந்த கண்ணியைக் கவிழ்த்துக் குத்தினால்
வக்காவும்படுமே—குளுவா வக்காவும்படுமே
உலைந்த கண்ணியை இறுக்கிக் குத்தினால்
உள்ளானும்படுமே—குளுவா உள்ளானும்படுமே
குலைந்த கண்ணியைத் திருத்திக் குத்தடா
குற்றால மலைமேல்—குளுவா குற்றால மலைமேல்."

என்று கண்ணியின் பெருமையைப் புகழ்ந்து கூத்தாடத் தொடங்கினான். அப்பொழுது பறந்தோடி வந்த பறவைகள் வேடன் விரித்த வலையை நோக்கி வரக்கண்ட சிங்கன் மனம் களித்து,

"ஏறாத மீன்களும் ஏறி வருகுது
எத்திசைப்பட்ட குருகும் வருகுது
ஆலாவும் கொக்கும் அருகே வருகுது
ஆசாரக் கள்ளர்போல் நாரை திரையுது."

என்று குதித்துக் குதித்துக் குலாவினான். அறியாப் பறவைகள் அருங் கண்ணியிலகப்பட்டு மீள இயலாது சிக்கிய தன்மையைக் கண்ட சிங்கன் அப்பறவைகளைப் பொது மாதராது கண்வலையிற் பட்டுழலும் காமுகருக்குவமை கூறும் நயம் கற்றோர் கருத்தைக் கவர்வதாகும்.

"பூசியுடுத்து முடித்து வளையிட்டுப் பொட்டிட்டு மையிட்டு பொன்னிட்டு [பூவிட்டுக்
காசுபறித்திடும் வேசையர் ஆசாரக் கண்ணிக்குள்ளேபடும் காமுகர்போலவே
தேசத்துக் கொக்கெலாம் கண்ணிக்குள்ளேவந்து சிக்குதுபார்கறி தக்குது [பார்."

என்று வேடன் கூறும் மொழிகள் வியப்பைத் தருவனவாம். மங்கையர் கையிலமர்ந்து மழலைமொழி பயின்ற கிளி யொன்று கூட்டினின்றும் தப்பிக் காட்டினுள்ளே போந்து குற்றால மலையைக் குறுகிற்று. அதனைப் பேடை யென்று கருதிப் பின்தொடர்ந்த சேவல்கள் ஒன்றோடொன்று பூசல்விளைத்த பேரொலியைக் கேட்டு கானகப் பறவையெல்லாம் குழாம் குழாமாய்க் கூடி வேட்டுவன் கண்ணியைத் தட்டிப் பறந்து சென்ற பான்மையைக் கண்ட சிங்கன்,

"மேடையினின்றொரு பஞ்சவர்ணக்கிளி
மின்னார்கை தப்பிஎன் முன்னாகவந்தது
பேடையென் றேஅதைச் சேவல் தொடர்ந்தது
பின்னொரு சேவலும் கூடத் தொடர்ந்தது



கூடிய இன்பம் இரண்டுக்கும் கிட்டாமல்
சுந்தோப சுந்தர்போல் சண்டை கலகத்தில்
காடெல்லாம் பட்சியாக் கூடிக் குளாம்பாடிக்
கண்ணியும் தட்டி என் கண்ணிலும் குட்டியே
போயினுமையே—பறவைகள்
போயினுமையே."

என்று ஆடிப் பாடினான். இவ்வாறு மலையில் வேட்டையாடித் திரியும் வேடன் தேவரிற் சிறந்த மூவரொடும் முறை தொடுத்து மகிழும் தன்மை உலகத்தை மகிழ்விப்பதாகும். கருமுகில் வண்ணன் காக்கை வேட்டையாடி அதன் கண்ணை அறுத்தான். செம்மேனிவாய்ந்த ஈசன் கொக்கு வேட்டையாடி அதன் இறகை வேணியிற் சூடினான்.

"கானவர் வேடத்தை ஈனமென் றெண்ணாதே
காக்கை படுத்தான் கருமுகில் வண்ணனும்
மேனாட் படுத்திட்ட கொக்கிற கின்னும்
விடைமே விருப்பார் சடைமேலிருக்குது."

என்று வேடர் தொழிலின் மேன்மையைச் சிங்கன் வியந்து கூறினான். காக்கும் தெய்வமும் அழிக்கும் தெய்வமும் கையாண்ட கானவர் தொழிலை எவரும் ஈனமென் றெண்ணலாகாது. மறையனாய அயன் அழகிய அன்னத்தைக் கவர்ந்தான். மாயவன் பருந்தைக் கவர்ந்தான். பிரணவ வடிவாய பெருமான் பெருச்சாளி கவர்ந்தான். இவ்வாறு பெரியோர் விரும்பி யாடிய வேட்டையின் பெருமையை,

"முன்னாள் படுத்த பரும் பெருச்சாளியை
மூத்த நயினார் மொடுவாய்க்கொடு போனார்
பின்னான தம்பியார் ஆடு மயிலையும்
பிள்ளைக்குறும் பாற் பிடித்துக்கொண் டேகினார்
பன்னரும் அன்னத்தை நன்னக ரீசர்
பரிகல மீந்திடும் பார்ப்பானுக்கீந்தனர்
வன்னப் பருந் தொருகள்வன் கொடுபோனான்
வக்காவும் நாரையும் கொக்கும் படுக்கவே."

என்று சிங்கன் புகழ்ந்து போற்றினான்.

இன்னும் வளமார்ந்த மலையில் வளர்ந்த வள்ளியின் தேனூறு சொல்லுக்கு வாயூறி நின்ற குமரன், கொக்கு வேட்டையாடிய செயலைக் குன்றக் குறவர் பாராட்டி மகிழ்ந்தார்கள். கொடிய வேற்படை தாங்கிய குமரன் ஆறுநாள் அலைந்து திரிந்து ஒரு அரிய கொக்கை அடித்தான். இவ்வாறு வருந்தி வென்ற கொக்கை நன்றாய் அவித்துச் சாறுக்கிச் சட்டியில் வைத்தார்கள். அச்சாற்றைச் செந்தண்மைவாய்ந்த அந்தணரும் சிவநெறி போற்றும் செல்வரும் ஆதரித்து ஏற்றார்கள். பெருந்தவ முனிவரும் அச்சாற்றைத் தம் அருந்தவத்தின் பயனாகக் கருதி அகமகிழ்ந்தார்கள். இவ்வாறு ஆன்றோர் போற்றும் வண்ணம் அரிய கொக்கு வேட்டையாடிய குறவனது பெருமையை,

"மீறுமிலஞ்சிக் குறத்தியைக் கொண்ட செவ்வேட்குறவன்
முதல் வேட்டைக்குப் போனநாள்
ஆறுநாட் கூடி ஒரு கொக்குப்பட்டது
அகப்பட்ட கொக்கை அவித்தொரு சட்டியில்

சாருகவைத்தபின் வேதப் ராமணர் தாமும்கொண்டார்
 சைவர் தாமும் கொண்டார் தவப்
பேருமுனிவரு மேற்றுக் கொடாரிதைப்
 பிக்குச் சொல்லாமலே செ[illegible]கவே
கண்ணி கொண்டுவாடா—குஞ்சு
கண்ணி கொண்டுவாடா."

என்று குன்றக்குறவன் வியந்து புகழ்ந்தான். குமரனை வேடன் கையில் வேலேந்தி அடாத செயல் செய்த சூரனை பார்க்கப் புறப்பட்டான். வேலனைப் பாலனென்று எண்ணி இகழ்ந்த சூரன் ஆது[illegible] சுற்றி அமர் விளைத்தான். அக்கொடியனைக் கொன்று கொடுமையை அகற்றக் கருதிய குமரன் ஆறு நாளும் சலியாது அவ்வசுரனைத் தொடர்ந்து சென்றான். மாயம் பயின்ற சூரன் பாலனை மயக்க எண்ணி ஓர் கொக்கின் (கொக்கு=மாமரம்) வடிவெடுத்து நின்றான். முருகன் அக்கொக்கை வேலாலெறிந்து வீழ்த்தினான். அப்போது கொக்காய் நின்ற கொடியோன் குமரனது பெருமையை அறிந்து பணிந்தான். அந்நிலையில் அன்பர்க்கு அருள்புரியும் அண்ணலாய ஆறுமுகப் பெருமான் சூரனது ஆணவத்தை அழித்து ஆட்கொண்டருளினார். இவ்வாறு ஆறுநாள் அலைந்து அசுரனை வென்ற பெருமையை கந்தசட்டிச் சாருக (சாறு=திருவிழா) அமைத்து அந்தணரும் அருந்தவரும் மிக்க ஆர்வமுடன் ஆதரித்தார்கள். ஆகவே மாமரமாய் நின்ற மாறுபடு சூரனை வென்று அவன் ஆணவத்தை அவித்துச் சாருகச் சட்டியில் வைத்த சரிதையை கொக்கு வேட்டை யாடிய குமரன் செயலாக வேடன் வகுத்துரைக்கும் நயம் வியப்பைத் தருவதாகும். இவ்வாறு வேட்டையில் வல்ல வீரன் குன்றக் குறவனது மனையிலே வளர்ந்த வள்ளியை வேட்டு மணந்தது இயல்பே யன்றோ? ஆறு நாள் அலைந்து அருங் கொக்கடித்த குமரனுக்கு வள்ளியை வாழ்க்கைத் துணையாகக் கொடுத்து வளமார்ந்த மலையையும் குறவர் சீதனமாய் வழங்கினார்கள். இவ்வுண்மையை,

"வெள்ளிமலைக் குறவன்மகன் பழனிமலைக் குறவன் எங்கள் வீட்டிற்கொண்ட
 வள்ளிதனக் கெருவர் மலையாட்சி சீதனமாய் வழங்கினரால்."

என்று குறமாது நயமாகக் கூறிப்போந்தாள். வேடாது மருகனாய் அமைந்த முருகன் வேட்டகத்தே விரும்பி உறைந்து குறிஞ்சி நிலக் குரிசிலாய் இன்று நிலவுகின்றான். இவ்வாறு அஞ்சிறைவண்டின் அரிக்கணம் ஒலிக்கும் குன்றமர்ந் துறையும் குமரனது பெருமையை,

"தின்னென் தடக்கைவெஞ் சிலைவேடர் குடிகொண்ட
 சீறூரு மூரூர்தோறும்
செந்தினைப் புனமுடு தண்சாரல் பிறவுமாம்
 சீதனக் காணிபெற்றுத்
தண்ணென் குறிஞ்சித் தலந்தலை யளிப்பவன்
 சப்பாணி கொட்டியருளே
தையலுநயகிமருவு தெய்வநா யகன் மதலை
 சப்பாணி கொட்டி யருளே."

என்று ஆன்றோர் போற்றிப் புகழ்ந்தார்கள்.

# மாதர் உலகம்



## பிராட்டியார்

(ஸ்ரீமதி. பண்டிதை-அகிலாம்பிகை அம்மையார்.)

—:(o):—

(519-ம் பக்கத் தொடர்ச்சி.)

சொல்லின் தூய்மையாலும், களங்கம் அற்ற தோற்றத்தாலும், பணிவுடைமையாலும் இராம நாம ஸ்மரணத்தினாலும் நீ யாவன்? என வினவுதற்குத் தகுதியை யுடையவனாகப் பிராட்டியார் கருதி வினவத் துணிந்தார் எனச் சென்ற சஞ்சிகையிற் கூறினோம்.

அவ்வாறு வினவப்பெற்ற தூதுவனாகிய அநுமான் தனது வரலாற்றினையும் வாலி வதம் சுக்கிரீவ பட்டாபிஷேக முதலிய அனைத்தையும் மிக மிகச் சுருக்கிக் கூறிப் பிராட்டியார் தன்னை நம்புவதற்குக் காரணமாகிய அணிகலன்களின் முடிப்பை நினைவூட்டுகின்றான். அரக்கன் வசப்பட்டபின் அலங்காரத்திற்குரிய ஆபரணங்களைப் பூண்டிருத்தல் தகாதென்னும் கொள்கைபற்றிப் பிராட்டியார் அவைகளைக் களைந்து உடுத்திருந்த வற்கலையில் சிறிது கிழித்து அவைகளைக் கட்டிக் கீழே எறிந்ததாகப் பின்னால் தெரிகிறது. தவிரத் தன்னைத் தேடிவரும் இராம லட்சுமணர்களுக்கு இஃதோர் அடையாளமாகவும் இருத்தல்கூடும் என்றும் கருதி யிருக்கலாம். ஆனால் அஃது செல்லும் நெறியில் வீழாது சுக்கிரீவன் அநுமனாதியர் குழுமியிருந்த மதங்க மலையில் வந்து விழுந்தது. அதனை வானர வீரர்கள் நோக்கிப் பேரதிசயம் பூத்தவர்களாய்க் காணுதற்கரிய ஒளியுள்ள கலன்கள் பொதிந்த அம்முடிப்பினை வெகு பதனமாக வைத்துப் பேணியதில் வியப்பில்லை. மக்கள் கைப்படில் அவைகள் மீண்டும் காண நேராமற் போயிருக்கலாம். பொருளாசைக்கு இடமில்லாமல் இயற்கை வாழ்வில் இனிது வாழும் வானர வீரர்களிடத்தே அடைந்ததால் பின்னர் இராமன் நோக்க அநுகூலப்பட்டது. இவ்விடத்தில்தான் மக்கள் கருத்திற்கும் எட்டாமல் ஊழின்வலி தனது கடமையைச் செய்கின்றதென்பது புலனாகின்றது.

அச்செய்தியை ஈண்டு அநுமான் பிராட்டியாருக்கு நினைப்பூட்டுகின்றான். அவைகளைப் பின்புவந்த இராமனுக்குத் தாங்கள் காட்டியதும் அதனால் பிராட்டியார் தென்திசையிலேயே இருத்தல் வேண்டுமென அனுமானித்ததும் அவ்

வணிகலன்களே இராமனது சோகத்தை ஆற்றுவித்தனவென்றும், குறிப்பாகவும் சுருக்கமாகவும் உணர்த்திய அநுமான் பிராட்டியாரை நோக்கி, அன்னாய்! அன்று நீ இழித்து நீத்த மற்றை நல்லணிகளே இற்றைநாள் அளவும் உன் மங்கலம் காத்ததென வெகு விநயமாகவும் இராமன் பிரிவாற்றாமல் உயிர் சோருந் தன்மையில் மெலிவதையும் உணர்த்திப் பிராட்டியாரின் மனதை நெகிழ்வித்தான். இங்கு நீர் நீத்த அணிகள் எனக்கூறாது இழித்து நீத்த என்றமை கூர்ந்து சிந்திக்கத்தக்கது.

ஆடமைத்தோள் நல்லார்க் கணிகலன்களே எவற்றினும் சிறந்ததாகும். அத்தகைய சிறப்புடைய அணிகலன்களை நாயகனைப் பிரிந்த பிறகு இழிந்தவைகளாக வெறுத்துக் கைவிட்டனர். எனினும் அவ் வணிகலன்கள் மீண்டும் உம்மை யடைந்து பிரகாசிக்கும் ஊழ்வன்மையால் தங்களுக்கெல்லாம் நாயகமாகிய நுமது மாங்கல்ய சூத்திரத்தைக் காப்பாற்றி நின்றன. அதாவது அவ் வணிகளே இராமன் உயிரை நிலைநிறுத்தியதென்பது மிகையாகாதென்றுணருமாறு கூறுகின்றார். இம்மொழிகளால் அநுமானிடம் நம்பிக்கை பிராட்டியார் உள்ளத்தில் கால் கொண்டது. இதனைக் கவியரசர்,

" எய்தவ னுரைத்தலோடும் எழுந்த பேருவகையேற
வெய்துற லொடுங்குமேனி வானுற விம்மியோங்கி
உய்தல்வந் துற்றதோவென் றருவிநீரொழுகு கண்ணாள்
அய்யசொல் ஐயன்மேனி யெப்படிக் கறிதியென்றாள்"

என்னும் செய்யுளால் விரிக்கின்றார்.

எனக்கும் விடுதலைக் காலம் எய்தியதோ? என்று தனக்குள்ளாக எண்ணி அவ்வெண்ணத்தினால் உடல் பூரித்து விம்மிதம் எய்திய பிராட்டியார் தனது நாயகனது ஒப்பற்ற வனப்பை அநுமான் வாயிலாகக் கேட்டு இன்புறவிரும்பிக் கூறும்படி கேட்கின்றார். அவ்வாறே ரகுவீரனது திருவடி முதல் திருமுடி யீறாகத் தனது கல்வித் திறமைதோன்ற எடுத்துக் கூறினர். அதனைக் கேட்டபோது பிராட்டியார் அனலிடை இட்ட மெழுகென உருகினர் என்றார் கவி. என்னே! காதலனது சவுந்தர்ய விசேஷங்களைத் தானே கண்டு களிப்பதிலும் பிறர் விதந்து கூறக் கேட்பது பன்மடங்கு தாபத்தை வளர்த்தல் இயற்கையென்பதனை ஈண்டு உணரும் பொருட்டே வலியுறுத்துகின்றார். இவ்வாறு விரகாக்கினியால் தன் நிலை மறந்து தளர்கின்ற பிராட்டியாரைச் சாந்தப்படுத்தும் உபாயமாக அநுமான் மீண்டும் தாயே நுமது நாயகன் சொன்ன குறியுமுண்டு, அடையாளச் சொல்லுமுளவால் அவைகளையும் கேட்டருள்வீராக என மேலும் புகல்வதானான். அவைகளுள் வனத்திற்குப் புறப்பட்டபோது உடன் வருவேனென்று பிடிவாதம் செய்து தன் எண்ணம் சித்தியாவதற்காக மேற்கொண்ட பிராட்டியாருடைய கோபமும் ஸாகஸமும் உயிரையே கக்குபவர்போல் காணப்பட்ட உணர்ச்சியையும் ஈண்டு நினைவூட்டினன். இதர சம்பவங்களைப் பிறகு உணர்த்திய இராமன் முதலாக இதனைக் கூறியது பெண்கள் இயற்கைப்படி (நாயகன் விருப்பத்திற்கு மாறாய்) அழுது ஸாகஸம் செய்வது பிறகு கேட்டை விளைவித்தல் கண்கூடென்பதை அறிவிக்கவே யாரும் இன்று நேர்ந்துள்ள விபரீத நிலைமைக்கு அந்தச் செய்கையே முக்கிய காரணமாதலின் அதனை நினைவுறுத்தினர் என்று கொள்ளுதல் மிகையாகாது.



அடுத்தாற்போலப் பிராட்டியின் கவலை இன்னதென் றுணராத பிள்ளைமைப் பண்பினையும் நினைவூட்டு முகத்தால், அயோத்தியின் புறமதில் கடவாமுன்னர் கானம் என்பது எங்குளது என வினவியதையும், சுமந்திரனிடம் தான் வளர்த்த கிளியையும் பூவையையும் கவனமாய்ப் பாதுகாக்கும்படி தன் தங்கைக்குச் செய்தி கூறியதையும், அடையாளமாக நினைவூட்டுகின்றார். இது சீதையின் தவற்றை முதலிலும், அவரது இளமைக்கேற்ற பொறுப்புணராத பிள்ளைமைக் குணத்தை அதன் பின்னரும் கூறியது ஓர் நயம்பாடு முறையேயாகும்.

இவ் வடையாளங்களைக் கூறியபின்னர் இதைவிட வேறு மொழிகள் வேண்டுவதில்லை யெனக் கருதித் தனது உயிர் நிலையாகிய காதலனுடைய பெயர் தீட்டப்பெற்றதாகிய அழகிய மோதிரத்தினைப் பிராட்டியாருக்குக் காட்டுகின்றார். அது கண்டக்கால் பிராட்டியார் என்ன தன்மையை யடைந்தனர் என்பதை உவமைச் சொற்களால் எடுத்துக்காட்ட முடியாது எனினும் கவியரசர் கற்பனா சக்தியால்,

" இறந்தனர் பிறந்தபயன் எய்தினர் கொலென்கோ
மறந்தனர் அறிந்துணர்வு வந்தனர் கொலென்கோ
துறந்தவுயிர் வந்திடை தொடர்ந்தது கொலென்கோ
திறந் தெரிவதென்னை கொலிநன் னுதலிசெய்கை."

" இழந்த மணிபுற் றரவெதிர்ந்த தெனலானாள்
பழந்தன மிழந்தன படைத்தவரை யொத்தாள்
குழந்தையை யுயிர்த்த மலடிக் குவமைகொண்டாள்
உழந்துவிழிபெற்ற தோருயிர்ப் பொறையும் ஒத்தாள்"

எனப் பலபடச் சித்தரிக்கின்றார். கரை கடந்த இன்ப உணர்ச்சியையும் அவ்வாறே கரை கடந்த துன்ப உணர்ச்சியையும், வாய்ச் சொற்களால் எடுத்துக் காட்டமுடியாதென்பதே முழு உண்மை.

இந்நிலையில் ஆநந்த வெள்ளத்தில் மூழ்கித் திளைத்த அன்னையார் அநுமன் நீட்டிய அக்கணையாழியை வாங்கித் தன் மேனியில் அணைத்துக் கண்ணிணைகளில் ஒற்றி மெய்யாகவே இராமனைப் பரிசித்தால் எய்தக்கூடிய இன்பத்தை யடைகின்றார். காதலனைக் காணாவிடத்து அக்காதலனது உடைமைகளைக் கண்டு இன்புறுவது கற்புடை மங்கையர்க் கியல்பானதொன்றேயாதலினென்க. மோதிர ஸ்பரிசத்தால் தோள்கள் கிளர்ந்தும், உடனே தாபத்தால் மெலிந்தும், ஆச்சரியத்தால் குளிர்ந்தும் இராமனை அணுகப்பெறாமையால் வெம்மையுற்றும் பெருமூச்செறிந்தும் மாறி மாறி ஒரு நிலை காணாதவராயினார். மீட்டும் மீட்டும் அரசமுத்திரையுடன் கூடிய அவ்வாழியை உற்று நோக்குகின்றார். நோக்க நோக்கப் பழைய எண்ணங்கள் மனதில் வரவே அதனைக் காணவொட்டாமல் கண்களில் நீர் பெருகுகின்றது. ஏதோ பேச எண்ணுகிறார் நாவெழவில்லை; ஒன்றும் தோன்றவுமில்லை. விம்மிதத்தினால் பிராட்டியார் விழுங்கப்பட்டவர் போலாயினார் என்றனர் கவி. மேலும் உள்ளுணர்ச்சியின்படி உடல்நிறம் மாறுமென்ப துண்மையாதலின் பிராட்டியாரது அழுக்கடைந்து மாசுண்ட மணிபோலிருந்த திருமேனி உடனே அதிசயிக்கும்படி மாறுதல் அடைந்து பொன்வண்ணம் பூத்ததுபோற் பொலிவு பெற்றதென்றும் கூறியுள்

ளார். இதுவும் உண்மைக் காதலர்பால் ஏற்படும் நிகழ்ச்சியென்பதே நூலோர் துணிபு. அம் மோதிரத்தினால் பிராட்டியாருக்கேற்பட்ட மெய்க்காதலின் தன்மையையும் அத்தன்மையால் உள்ளங் குழைந்து உருகித் தன்னை மறந்திருந்த அயர்ச்சியினின்றும் தெளிவித்து மெல்ல இப்பேருதவி புரிந்த தூதுவனுக்குத் தனது நன்றியையும் வாழ்த்துரையையும் வெளியிட்டுரைக்கக் கூடிய மருந்துமாக உதவியதென்றார் கவிவேந்தர். இக்குறிப்பினைப் பொய்யாமொழிப் புலவரும், "தன்னோய்க்குத் தானே மருந்தென"க் கூறிவைத்தனர். பிராட்டியாரே மருந்துமுண்டு கொல் நான் கொண்ட நோய்க்கென எண்ணி எங்கினார். மனதிலுண்டாகும் பிணி உடலை நோய்வாய்ப்படுத்த வல்லதாகின்றது. எனினும் வாதபித்த சிலேட்டுமாதிகளால் உடலுக்கெய்தும் பிணிகளை ஓடதிகள் குணஞ் செய்வதுபோல இம்மன நோயினாலெய்தும் பிணிகளை மாற்ற முடிவதில்லை. ஆதல்பற்றியே தன்னோய்க்குத் தானே மருந்தென்றார் அறிஞர்.

இந்நிலையிலிருந்தும் சிறிது தெளிவுபெற்ற பிராட்டியார் தன திருவிழிகளிலும் அன்பிற்கு முண்டோ அடைக்குந் தாழ் என்றபடி பெருகி வழியும் கண்ணீர் தனது மார்பினை நனைக்க வாய் குழறி உரைதடுமாறி அநுமனை நோக்கி உயிர் தந்தாய் உத்தம, அத்தகைய பேருதவி புரிந்த உனக்கு என்னால் செய்யக்கூடிய நன்றிக் கறிகுறியான செய்கையுமுளதோ? அம்மையென் றழைக்கும் ஈன்ற தாயானாய். சுற்றத்தார் எவருள்ளும் சிறந்தவர் தாயேயாகும். ஆதலின் முதன்மைபெற்ற அவ்வன்னை யானாய் என்றனர் தொ க்கத்தில்-தாயைக் குறிக்கும் மொழிகள் பலவிருந்தும் ஈண்டு பிராட்டியார் எழுத்துணர்வில்லாததும், மொழி வழக்கறியாததுமான ஆண்குலமும் இயல்பாகத் தன் அன்னையை அழைக்கும் அம்மா என்ற தெய்வ வொலியினாலேயே அநுமனை வாயார அம்மையானாய், பின்னர் நல்லறிவூட்டும் அத்தன் என்னும் தந்தையும் ஆனாய் என்கிறார். அதன் பிறகு அப்பன் ஆனாய் என்கிறார். இவ்வப்பன் என்னும் மொழி சராசரங்களுக் கெல்லாம் பரம பிதாவாகிய கடவுளுமானாய் என்று புனைகின்றார். மேலும் அக்கடவுளுடைய பேரருளின் பெருக்காகிய இன்ப வாழ்வும் ஆகின்றாய். எவ்வாறெனில் இம்மையே மறுமைதானும் இசையோடு நல்கலை யாதலின் எனச்சுட்டவும் செய்கின்றார். இம்மை இவ்வுடம்பைத் தந்து நல்லறிவூட்டி வளர்ப்பவர் தாயும் தந்தையும். மறுமையை யளிப்பவர் கடவுள். துன்ப வுணர்வினின்றும் விடுதலை செய்து இன்பத்தில் திளைக்கச் செய்வது எல்லாம் வல்ல இறைவன் திருவருட் செல்வமே என்பது இச் செய்யுளில் பிராட்டியார் அமைத்த உள்ளுறையாகக் கொள்ளலாம். கைம்மாறு கருதாமல் இதம் செய்யும் அன்னையாதியர்க்கும் எதிர்பாரா நிலையில் பழந்தவப் பயனைக் கூட்டிவைத்து உய்விக்கும் இறைவன் திருவருளுக்கும் மக்களால் நன்றி செய்தல் இயலுமோ? தனித்தனியாகப் பிரித்தும் நன்றி செய்யாதெனில் தாயும் தந்தையும் இறைவனும் அவனது திருவருளுமாகிய இவ்வனைத்தும் ஒன்று பட்டு வந்ததாக நான் மதிக்கும் உனக்கு எவ்வாறு நன்றியைச் செய்ய முடியும் என்பது மேலும் உய்த்துணரத் தக்கதொன்றாகும் எனக் கூறியருளிய பிராட்டியார் மனம் இத்தகைய பேருதவியாளனாகிய அநுமனுக்கு ஏதாவதொன்றை அளித்தல் வேண்டுமென அவாக்கொண்டது. இயற்கை நியதியும் இதுவேயன்றோ? பெரிய ஒளிக் கடவுளுக்குச் சிறு தீபம் ஏற்றி வழிபடல் அறிஞர் வழக்கேயன்றோ? தன்மனம் அமைதியுறல் வேண்டி ஒருவாறு துணிந்து பிறகு ஒரு மாற்றம் புகல்வதானார்.



"பாழிய பணைத்தோள்வீர துணையிலேன் பரிவுதீர்த்த
வாழியர் வள்ளலேயான் மறுவிலா மனத்தேன் என்னின்
ஊழியோர் பகலாயோதும் யாண்டெலா முலகமேழும்
ஏழும் வீவுற்றஞான்றும் இன்றெனவிருத்தி"

என அன்புடன் ஆசீர்வதிக்கின்றார். தனது மாசற்ற கற்பு உண்மையானால் பதினான்கு உலகங்கள் நிலைகுலைந்து அழியும் காலத்திலும் நீ அழிவில்லாது இன்றுபோல் இருப்பாயாக எனத் தனது தெய்வக் கற்பினைப் பந்தயங்கட்டி வாழ்த்துகின்றார். இதில் முக்கியமாக நோக்கவேண்டியது இன்றென என்பதுதான். வாழ்த்துக் கூறுபவர்களெல்லாம் நீவிர் பல்லாண்டு பல்லாண்டாய் வாழக் கடவதென மொழிவதே மரபு. ஆனால் அவ் வாழ்த்துரைப்படி பல ஆண்டுகள் ஒருவர் வசிப்பாராயின் நரை, திரை மூப்பாதிகளினால் கண்ணொளி மழுங்கி செவித்தொளை மூடிக் கால்நடை கோணி மெய்வலி ஒடுங்கி ஒரு கணம் பலயுகமாக வருந்திப் பிறரால் வெறுக்கப்பட்டுக் காலனைக் கைகூப்பி என்று வருவாய் என ஏங்கி நடுங்கி நாக்குழறி வருந்துதல் கண்கூடு. இத்தகைய வாழ்த்துரை, வசை மொழியேயன்றி வேறுண்டோ?

உலக மாதாவாகிய பிராட்டியார் அவ்வாறு பொதுப்பட வாழ்த்துரை வழங்காமல் எச்சரிப்புடன் இன்றென இப்போதுள்ள உடலாற்றல் உணர்வாற்றல்களோடு என்றும் குறையாது வாழ்வாயாக என்றருளியதாகக் கவிவேந்தர் கூறிவைத்த அழகினை எம்போற் சிற்றறிவுடையோர் எண்ணித் துணிய முடியுமோ? அதனிலும் இருத்தி என்றதும் இசையோடு என்றதும் பின்னும் பின்னும் அன்னையாரின் அன்பு பொங்கிய வாழ்த்தாகிய ஓவியத்திற்கு இரு விழிகள் போன்றவைகளாம். பாபமிகச் செய்தோரின் பெயரும் பூமியில் நின்று நிலவுகின்றது. அதிற் பயன் யாது? ஆதலின் இசையோடு கீர்த்தியோடென்றார். அழியா உடல்நலம் பெற்றவர் ஆன்ம சக்தியினாலேயே புலனடக்கத்தினாலே என்றும் இளமையோடிருத்தல் கூடும். அத்தகைய தவ ஒழுக்கம் இசையை நிலைநாட்டும். இவ்விரண்டினையும் உட்கோளாக பிராட்டியார் வாழ்த்துரை பொலிகின்றது.

## சந்தா நேயர்களுக்கு

நமது "ஆனந்தபோதினி" மாத சஞ்சிகை ஒவ்வொரு தமிழ் மாத முதல் தேதியிலும் எக்காரணத்தை முன்னிட்டும் நிறுத்தப்படாமல் தபாலில் சேர்க்கப்பட்டு வந்தும் சிலர் சஞ்சிகை கிடைக்கவில்லை என்று எமக்கு அடிக்கடி தெரிவிக்கின்றனர். இந்த நண்பர்கள் அந்த அந்த ஊர் போஸ்டு மாஸ்டருக்கு விஷயந் தெரிவித்தால் சஞ்சிகைகள் ஒழுங்காகக் கிடைத்து வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

[illegible]

# கற்பு எனுந் திண்மை

(பண்டித. இராமசுப்பிரமணிய நாவலர்.)

‘கற்பு’ எனப்படுவது கணவன் வழி நிற்றல். கொண்டானிற் சிறந்த தெய்வமின்றெனவும், அவனை இன்னவாறு வழிபடுக வெனவும் இருமுது குரவர் கற்பித்தலும் கணவன் வழி நிற்றலையே வற்புறுத்துகின்றன. ‘கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை’ என்பதூஉம் இதனையே வலியுறுத்துகின்றது.

இனிக் ‘கற்பு’ எனும் சொற்பொருளாவது ‘கற்றல்’ என்றவாறு. கல்வி எனினும் கற்பு எனினும் ஒக்கும். ‘கல்’ என்னும் பகுதியடியாப் பிறந்து ‘பு’ என்னும் தொழிற்பெயர் விகுதி பெற்று நின்றது. சிலர் ‘பு’ என்னும் பண்புப்பெயர் விகுதி பெற்று நின்றது எனக் கூறிக் ‘கற்பாவது கல்லின் தன்மை’ எனக் கூறுப. நச்சினார்க்கினியர் தொல்காப்பியத்துக் கற்பியலின் தொடக்கத்து, “கொண்டானிற் சிறந்த தெய்வமின்றெனவும் அவனை இன்னவாறே வழிபடுக எனவும் இருமுதுகுரவர் கற்பித்தலானும், ‘அந்தணர் திறத்தும் சான்றோர் தேஎத்தும்’ ‘ஐயர் பாங்கினும் அமரர்ச் சுட்டியும்’ (தொல். பொ. கற். 5.) ஒழுகும் ஒழுக்கந் தலைமகன் கற்பித்தலானும் கற்பாயிற்று. இனித் தலைவனும் களவின்கண் ஓரையும் நாளும் தீதென்று அதனைத் துறந்தொழுகினாற்போல ஒழுகாது ஒத்தினும் கரணத்தினும் யாத்த சிறப்பிலக்கணங்களைக் கற்பித்துக் கொண்டு துறவறத்திற் செல்லுந் துணையும் இல்லற நிகழ்த்துதலிற் கற்பாயிற்று”

எனக் கூறிப் போந்தமையானும், கற்பித்த கல்விக்கண் உள்ளம் உறுதிப்பட்டு நிற்றல் கற்பிற்கு இலக்கணமாவதன்றி அவ்வாறு உறுதிப்பட்டு நிற்றலானே கற்பு ஆயிற்றன்றாகலானும், கல்லின் தன்மை எனின் தீய ஒழுக்கத்தின் கண்ணும் உள்ளம் கல்லின் றன்மை எய்தி உறுதிப்பட்டு நிற்பிற் கற்பாகல் வேண்டுமாகலானும் அது பொருளன்மை அறிக. இனி இதனைச் சிலர் வடசொற்றிரிபெனக் கொண்டும் இடர்ப்படுப.

இருமுது குரவரும் கணவனும் கற்பித்தவழி நில்லாது உள்ளம் நெகிழ்ந்தோடின், அது கற்ற கல்வியை நெகிழ விடுதலாகலான் கற்பன்மையும் அக்கல்விக்கண்ணே உறுதி உற்று ஒழுகலே கற்பாதலும் அறியப்படும். தீயொழுக்கங்களைப் பிறர்வாய்க் கற்று ஒழுகலும் கற்பன்றோ எனின், அன்று. என்னை? கற்பெனச் சிறப்பிக்கப்படுவது இருமுது குரவரானும் கணவனானும் கற்பிக்கப்படுதலே யாகலான். உரிமையும் சிறப்பும் கருதி ஒரோ வழி மூத்தோரும் ஆசாரியரும் கற்பித்தலும் அமையுமென்க. அவர் தீயன கற்பியாராகலின் கற்பு நல்லொழுக்கத்தையே குறித்து நின்றது எனக் கொள்க. அவர் தீயொழுக்கம் கற்பிக்கின் அது கற்பெனச் சிறப்பிக்கப்படாது, கற்பதெல்லாம் கல்வியாயினும் என்றுணர்க. அதனானன்றோ உள்ளம் களவொழுக்கத்தின் உறுதிப்பட்டு நிற்பினும் அதன்கண் இடைவிடா தொழுகலைக் காதலன் விரும்பி



னும் கூறினும் கற்பெனப்படாதாயிற்று. களவு வெளிப்பாடு கற்பினோடொக்கு மென்றதும், ஆண்டு இருமுது குரவர் தலைவி கணவன் வழி நிற்றலை உணர்ந்து உடன்பட்டுப் பின்னர் வேண்டுவன கற்பிப்பார் என்பது கருதியாம்.

‘அச்சமு நாணு மடனு முந்துறுத்த
நிச்சமும் பெண்பாற் குரிய வென்ப.’

என்பதனான், நாண், மடம், அச்சம், பயிர்ப்பு எனப் பெண்கட்கு உரியனவாகக் கூறப்பட்ட நால்வகை இயல்புகளினும் அடங்காது கற்பெனப் படுவது. இவை இயற்கையாகப் பெண்பாலார்மாட்டு முற்பட்டு நிகழலானும், அவற்றுட் சிறந்த நாணினும் கற்புச் சிறந்ததாகலானும், எய்திய கல்விக் கண் உள்ளம் நெகிழாது நிற்றல் கற்பிற்கிலக்கணமாகலானும் நெகிழ்ந்துழிப் பேணிய கற்பும் உடன் வீதலானும் கற்பு அவற்றிற் பிரிந்து பெண்பாலார்க்குத் தனிப் பெருஞ் சிறப்பளித்து நிற்ப தொன்றாம்.

‘உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச்சிறந் தன்று.’ (தொல். பொ. கள. 22)

என்பதனான் நாணினும் கற்புச் சிறந்த தென்பதூஉம், அதுகுற்றமின்றி நிகழினே சிறப்பது என்பதூஉம் பெறப்படும். பிறரும், ‘செயிர்தீர் கற்பிற் சேயிழை கணவ’ ‘மறங்கடிந்த அருங் கற்பின்’ எனக் கூறிப் போந்தமையும் அறிக. ‘தாயிற் சிறந்தன்று நாணுடையலாருக்கு நாண்டகைசால்—வேயிற் சிறந்த மென்றோளி திண்கற்பின் விழுமிதன்று’ என்னும் திருக்கோவையாரும் ஈண்டுக் கருதத் தக்கது.

இருமுது குரவரும் கணவனும் கற்பித்த நெறிக்கண் நின்று கணவன் வழி ஒழுகற்கு மெல்லியலார்க்கு உள்ளுறுதி இன்றியமையாதாகலின், கற்பின்மேல் திண்மை ஏற்றிக் கூறல் மரபு. இதனான் உள்ளம் சிறிது அவ்வொழுக்கினின்று நெகிழினும் கற்பன்று என்பது பேணப்படும். மேற்காட்டிய திருக்கோவைப் பாட்டின்கண் ‘திண் கற்பு’ என்றதும், திருக்குறளின் கண்,

‘பெண்ணிற் பெருந்தக்க யாவுள? கற்பென்னும்
திண்மை யுண்டாகப் பெறின்’

என்றதும் ஈண்டு அறிபற்பால. இத்தகைத் திண்ணிய கற்புடையாரை, அவர்தம் உள்ளுறுதியும் மனவொழுக்குங் கருதித் துறவிகளினு மிக்கா ரென்ப மேலோர். இத்தகையார் இல்வாழ்க்கைக்கணின்று அதனை எவ்வாற்றானும் சிறப்புறச் செய்தலானும், தம் மொழுக்கத்தான் இம்மையில் தமக்கும் தம்மை அடைந்தார்க்கும் புகழெய்துவிப்பதனானும், மறுமைக்கும் புண்ணியம் பயத்தலானும், தம் அருகாக் காதலானும் அன்பினானும் கெழுதகைமை யுற்றுப் பிறபிறப்பினும் கணவனொடு கெழுமலானும் எம்மைக்குந் துணையாய் நிற்றலான் இவரினும் பெறுதற்கரிய பொருடான் யாவுள? இவரே மனைக்கு விளக்கம்; இவர் தம் தகைசால் புதல்வரே இவர்க்கு விளக்கம்; அப்புதல்வரே மனைக்கு மணிகள். ஆக்கற்கும் அழித்தற்கும் துறவிகளினும் வல்லார் இவரே என்பதற்குப் பல் வரலாறுகளும் சான்று பகரும். கோவலனுயிரைச் சிறு

வரை மீட்டதும் மதுரைமாநகரை யழல் மிசைந்ததும் கண்ணகி கற்பினனே நிகழ்ந்தனவெனின், திண்கற்பிற் சேயிழையார் திறன் எத்தகைத்தாம்?

'தெய்வந் தொழா அள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை' (மணிமேகலை)

'தெய்வந் தொழா அள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை' (திருக்குறள்)

என்ற பெருமை இன்னோர்க்கே எய்தற் குரித்து. 'புகழ் புரிந்த' இல்வாழ்க்கைத் துணைவியர் இன்னோரே யாவர்.

'வடமீன் புரையும் கற்பு' (புறம். 122) 'செயிர்தீர் கற்பு' (புறம். 3) என்பனவும் பிறவும் இத்தகையார் திண்கற்பினையே குறித்து நின்றன.

"கன்னிக் காவலும் கடியிற் காவலுந்
தன்னுறு கணவன் சாவுறிற் காவலு
நிறையிற் காத்துப் பிறர்பிறர்க் காணது
கொண்டோ னல்லது தெய்வழும் பேணப்பெண்டிர்."
(மணிமேகலை. 18. 98-102)

என்று சிறப்பிக்கப்பட்டாரும் இவரே.

இத்தகைத் திண்கற்புடையார் தம் காதலர் எய்தும் நன்மைக் கண்ணும் தீதின் கண்ணும் உரிமை உடைய ராவர். காதலர் வாழ்வே தமக்கு வாழ்வு; அவர் வீழ்வே தமக்கு வீழ்வு. காதலர் இறப்பிற் கனையெரி பொத்தித் தாமும் வீவர் எனில், இன்னோர் காதன்மை வியக்கற்பாற்றன்றே. பத்தினிப் பெண்டிர் தம் காதலர் இறப்பிற் றம்முயிரையும் நீக்கும் இயல்பு மணிமேகலையில்,

"காதல ரிலறப்பிற் கனையெரி பொத்தி
யூதுலைக் குருகி னுயிர்த்தகத் தடங்கா
தின்னுயி ரீவர்; ஈயா ராயின்,
நன்னீர்ப் பொய்கையி னளியெரி புகுவர்"

என நயம்பட உரைத்திருப்பது ஈண்டு ஆய்ந்து உணரத் தக்கது. 'நன்னீர்ப் பொய்கையி னளியெரி புகுவர்' எனவே, இத்தகையருங் கற்பினு யிழையார்க்கு நெருப்பும் அந்தாமரைப் பொய்கையே போன்று களிப்பினை யளிப்பதா மென்பது பெறப்படும். இவ்வாறு காதலர் இறப்பிற் றம்முயிர் துறவாது, 'அன்பரோ டுடனுறை வாழ்க்கைக்கு நோற்றுடம் படு' தலை அத்துணைச் சிறப்பிற்றாகக் கொள்ளார் என்பது,

"பல்சான் றீரே! பல்சான் றீரே!
செல்கெனச் சொல்லா தொழிகென விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான் றீரே!
அணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந் தட்ட
காழ்போ னல்விளர் நறுநெய் தீண்டா
தடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம்



ர்ளொட் சாந்தொடு புளிப்பெய் தட்ட
லை வெந்தை வல்சி யாக
ற்பெய் பள்ளிப் பாயின்று வதியும்
யவற் பெண்டிரே மல்லேம்."

என்பதூஉ முணரப்படும். காதலரிறப்பிற் றாமுமிறப்பதே திண்கற்பினார்க்குச் சிறந்ததென்பதூஉம் தாம் வீழ்ந் துயிர்விட வோங்கும் செய்யதழல் தமக்குப் பொய்கை போலுமென்பதூஉம்,

"பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட் டீமம்
நுமக்கரி தாகுக தில்ல; எமக்கெம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென வரும்பற
வள்ளித ழவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையுந் தீயுமோ ரன்றே."

என்பதனானும் பெறப்படுமா றுணர்க.

இத்தகைக் கற்புடையாரை உலகம் பெறின் இல்வாழ்க்கை நெறி இனிதாவதூஉ மன்றி இக்காலத்திய கைம்பெண் மண ஆராய்ச்சியு மோர்பால் இறுதலுறுதலுமாம். இக்கற்புக் கடவுளாரான் உலகம் பொலிக.

"ஆனந்தபோதினி" மாத சஞ்சிகை
தெலுங்குப் பதிப்பு
—(o)—
நமது "ஆனந்தபோதினி" தமிழ்மொழியில் மாதப் பதிப்பும், வாரப்பதிப்பும் வெளிவந்து தொண்டாற்றி வரும் விஷயம் எல்லாரும் நன்கு அறிந்ததே. "ஆனந்த போதினி" தெலுங்கு மொழியிலும் ஒவ்வொரு இங்கிலீஷ் மாத முதல் தேதியில் வெளிவருகின்றது. இப்பொழுது அதற்கு மூன்றுவதாண்டு நடைபெறுகிறது. தமிழ் நேயர்கள் தங்களுக்குத் தெரிந்த தெலுங்குப் பயிற்சியுள்ள நண்பர்களுக்கு இவ்விஷயத்தைத் தெரிவித்துச் சந்தாதாரர்களாகச் சேரும்படி தூண்டுமாறு வேண்டுகின்றோம். மாதிரி காபி இலவசம்.

வருட சந்தா தபாற்கூலி உட்பட
உள் நாடுகளுக்கு ... ரூபா 1—0—0
வெளி நாடுகளுக்கு ... ,, 1—12—0

மானேஜர்.

# "தமிழரும் காதலும்"

("நாமகள் தொண்டன்".)

"நான் மறை விரித்து நல்லிசை விளக்கும்
வாய் மொழிப்புலவீர் கேண்மின் சிறந்தது
காதற் காமம் காமத்துச் சிறந்தது." (குன்றம் பூதனார்)

காதல் என்றும் சிறப்புடையது. பண்டைத் தமிழர் காதலை எங்ஙனம் போற்றிக் காத்துவந்தனரென்பதை ஆராயின் மேற் கூறியதின் உண்மை தெள்ளிதில் புலனாகும். காதல் முன்னும் மணம் பின்னுமாகிய கந்தர்வ மண வழக்கே பண்டைக் காலத்து நந்தமிழ் நாட்டு மக்களிடை நடந்து வந்துளது. இருவர் மனமொருமித்து மணம் பெறும் காதல் இயற்கையாக அதிதீவிரமாய் இணைந்து நிற்கும் பரஸ்பர தெய்விக உணர்வு என்பது நம்முன்னோர்களின் கருத்து. "காதல் என்னும் அழிவற்ற செல்வம்; மறுமையிலும் நம்மைத் தொடர்ந்துவரும் நிறைசெல்வம்; என்றும் மக்களை விட்டு நீங்காத பொக்கிஷம்;" என்னே காதலின் சிறப்பு,

காதல் உயிர்க்கனலை வீரக்கொழுங்கனலாக ஒளிசெயு மென் காற்று. 'காதலினால் உயிர் வீறு கொண்டு எழும்' என்பர் பண்டைத்தமிழர். காதலே இம்மையிலும் மறுமையிலும் இன்ப வாழ்வு வாழ்வதற்கு ஏற்ற கருவி. "காதலர்கள் இயற்கைப் பேரெழில்கள் இறையொளி கண்டனர்; இறைபுனம் கண்டனர். அருள் அழகு கண்டனர்; நறையாடு நறுமலரிலும், மாதர் தண்மதி முகமலரிலும் அதிரமணீயமான இன்ப இறையொளி கண்டு களி பேருவகை பூத்தனர்."

அருள் அறத்தின் அடிப்படையாதல் போன்று இன்ப ஒழுக்கத்திற்கு ஆணிவேர் போல் அமைந்து கிடப்பது அகக்காதல் என்பது பண்டைத் தமிழர் கருத்து.

"அன்பகத்தில்லா உயிர் வாழ்க்கை வன்பாற் கண்
வற்றன் மரந்தளிர்த்தற்று."

அன்பென்னும் பாசத்தால் பிணிக்கப்படா இல்வாழ்க்கை வன்னிலத்தில் பட்டமரம் தளிர் பெறல் போலும்—என்பது தண் தமிழ் மறை.

தமிழோடு காதலும் பிறந்தே யிருந்தது. அன்பால் உந்தப்பட்டு அதன் பின் அகவுலகில் ஏற்படும் உணர்ச்சியே காதல். அன்பே காதலின் வித்து. காலடைவில் இவ்வன்பு காதலாக வளர்ந்து, கனிவுற்று, பரிணமிக்கின்றது. பண்டைத் தமிழர் காதலைக் காக்க தம்முயிரையும் துறந்தனர் என்பது சங்கநூல்கள் வெளியிடும் உண்மை. சிறு பிராயத்திலேயே ஆண் பெண் இரு பாலார்க்கும் இடை இறைவனால் விதைக்கப்பெற்ற இவ் அன்பு இவ்விருவரும் தக்க பருவம் எய்தியதும் காதலாக மாறி கனிவெய்துகின்றது. ஓர் பெண் இளம் பிராயத்திலேயே தன்னுடன் கூடி விளையாடிக்கொண்டிருக்கும் சிறுவனிடம்



நட்புரிமை கொண்டுவிடுகின்றாள். பின் அவள் மணத்திற்குரிய மங்கைப்பருவம் அடைந்ததும் காதலென்பது என்னவென்றறியாத பசுங்குழந்தைப் பருவத்தில் தான் நேசித்த சிறுவனையே காதலிக்கின்றாள்; அன்றைய நாள் நட்பு இன்றைய காதலாக மாறுகின்ற விந்தையினை எடுத்தியம்ப என்னைப்போன்ற சிற்றறிவு உடையார்க்கும் வலிமை உண்டோ? அப்பெண்மணி அச்சிறுவனைக் கூடி இன்புறினவளே அன்றி வேறெவன்பாலும் தன் நெஞ்சைச் செலவிட்டாள். அச் சிறுவனல்லாது பிறனொருவனையே தான் கலியின் கொடுமையால் மணக்க நேரிடின் கற்பரசியாகிய அப்பண்டைத் தமிழ் மங்கை, தன் கற்பிற்கு பங்கம் வாராது காப்பாற்ற உயிர் நீத்துவிடுவாள். 'ஓர் பெண் என்று ஓராண்மகன்மீது காதல் கொண்டு விடுகின்றாளோ, அன்றே அகவுலகில் அவ்விருவருக்கும் கண்ணாலம் நிறை எய்திவிடுகின்றது' என்ற விழுமிய கொள்கை நந்தமிழ் நாட்டுப் பண்டை மக்களிடை வழங்கப்பட்டு வந்ததென்பது பழைய தமிழ் நூல்களில் காணக்கிடக்கின்றதன்றோ? காதலிருவர் கருத்தொத்து ஆதரவு பட்டதே காதலன்றோ? இன்பமும் அதுவே அன்றோ? ஓர் பெண்மணி பசும்பிராயத்திலேயே

மணல் சிற்றில் காலில் சிதையா அடைச்சிய பொற்
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்த

சிறு பட்டியாகிய இளைஞன்பால் கொண்ட நட்பு காதலாக பரிமளித்துவிட்டது. இதை யறியாத அவள் பெற்றோர் அவளைப் பிறனொருவனுக்கு மணம் முடிக்க ஏற்பாடுகள் செய்துவிட்டிருந்தார்கள். இதனையறிந்துகொண்ட அம்மாது தான் காதல் கொண்டிருக்கும் சிறுவனைப்பற்றித் தன் தோழியிடம் கூறித் தன் கற்பைப்பாதுகாத்துக்கொண்டதாக பண்டைத்தமிழ் நூலாகிய 'கலித்தொகை' பாலைத் திணையில் ஓர் பாட்டு காணப்படுகின்றது. அதன் கருத்து வருமாறு.

ஒளி பொருந்திய வளையணிந்திருக்கும் தோழீ! யான் கூறுவதை சற்று செவி சாய்த்துக் கேட்பாயாக! வீதியில் நாம் மணலால் சமைத்து விளையாடிய சிறு வீடுகளைக் கால்களால் எற்றி அழித்தும், நாம் சூட்டிக்கொண்டிருந்த மலர் மாலையைப் பறித்தும், வரிப்பந்தைக் கொண்டோடியும் நாம் நோவத்தக்கவையெல்லாம் செய்த அச்சிறு பட்டிப் பையன் முன்னொரு நாள், நானும், அன்னையும் வீட்டிலிருந்தபோது 'தாகசாந்தி செய்ய நீர் வேணும்' என்று எம் வீட்டிற்கு வந்தான். அவனுக்கு ஜலம் கொண்டு கொடு என்று அன்னையு மென்னைப் பணித்தனள். அங்ஙனமே நீர் கொண்டு அவன்பால் சென்றேன். அவனோ என் கையைப் பிடித்து வம்பு செய்யவே 'அன்னாய்! இவனொருவன் செய்ததைப்பார்' என்று கூவினேன் நான். அன்னையும் பதறிய மனதுடன் அவண் அடைந்தாள். அன்னை எங்கு அவனைச் சினந்து விடுவாளோ என்ற அச்சத்தால் 'உண்ணுநீர் விக்கினன்' என்று நிகழ்ந்தவற்றை மறைத்து மொழிந்தேன். அன்னையும் அவன் உடல் நலம் எழில் நலங்களில் பெரிதுமீடுபட்டு அவன் முதுகைத் தன் கையால் தடவிக் கொடுத்தனள். அவ்வமயம் என்னைக் கடைக்கண்ணால் கோல்வான்போல் நோக்கிப் பிறகு மகிழ்ச்சிக்கு ஏதுவாகிய வதுவையினைக் கள்வனாகிய அப்பட்டிப் பையன் அன்றே செய்துவிட்டான்.

கற்பிற்சிறந்த இளைய தமிழ் மங்கை ஒருத்தி தன் இளமைக் காலத்தில்

நிகழ்ந்த நிகழ்ச்சிகளில் வைத்துத் தான் ஓர் இளைஞன் மையினை எத்துணை திறமையுடன் எத்துணை மனக்க நுட்பமாகத் தான் கொண்டுவிட்டிருந்த காதல் கற்பொ வராமல் பாதுகாத்துக்கொள்கின்றாள் பாருங்கள்! முன்பு றில்'களைக் காலால் எற்றி அழித்தமையும் மாலையைப் பறித் டோடியதும், அன்று அன்னையும் அவளும் வீட்டிலுள்ள நீர் வேட்டேன்' என்று அவன் கூறி அவண் வந்தமையும், பிரகாரம் இளைஞனுக்கு ஜலம் கொண்டு சென்றபோது அவ கையைப் பிடித்து வம்பு செய்தமையும், அதனால் அச்சமும் நாண அலறலும் அங்கு அன்னை வந்ததும், இளைஞனைக் காக்க மெய்யை மறைத்துத் தான் மொழிந்தமையும் சிறு பட்டி தன்னைக் கொல்வான்போல் நோக்கிய கடைக் கண் பார்வையும் இன்னும் இவள் மனதில் பசுமையாகவே இருக்கின்றன.

இளைஞன் பெண்ணின் கையைப் பிடித்ததும் அவள் தன் அன்னையைக் கூவி அழைக்கின்றாள். அன்னையும் அலறி அங்கு வந்துவிட்டாள். இளைஞன் அன்னையின் சினத்திற்கு ஆளாகா வண்ணம் காப்பாற்றப் பெண் சூழ்ச்சி செய்கின்றாள்; செய்தும் விட்டாள். அன்னை வந்ததும் 'உண்ணுநீர் விக்கினன்' என்று மறைத்து மொழிந்தமையை ஆராயுங்காலின்றும் நம் அகக்கண் முன் தோன்று நிற்கின்றது. அது என்ன? அவள் அங்ஙனம் கூறியது அன்பு பற்றி; மெய்யன்பின் வழி நடக்கும் இன்ப வாழ்வே 'காதலின்பம்'. எனவே காதல்பற்றி எங்ஙனம் தன் மனதிற்கினியானை காப்பாற்றிவிட்டாள் அம்மாது பாருங்கள்! இளைஞனை காத்ததின் பலனாகக் காதலின்பத்தைப் பெற்றுவிட்டாள்; அவள் தன் கற்பொழுக்கமும் பாதுகாக்கப்பட்டுவிட்டது. மற்றுமோர் விஷயம்.

மற்று என்னைக்

கடைக்கண்ணால் கொல்வான்போல் நோக்கி
நகைக்கூட்டம் செய்தான் அக்கள்வன் மகன்

என்று கூறுவது நம் பண்டைத் தமிழ் நாட்டார் கொண்டிருந்த ஓர் விழுமிய கருத்தைத் தன்னுள் அடக்கிக் கொண்டுளது. காதலர் கண்களுக்கு ஓர் விசேஷ வேகமும் சக்தியுமுண்டு.

"கண்ணொடு கண்ணிணை நோக்கு ஒக்கின் வாய்ச் சொற்கள்
என்ன பயனு மில."

காதலிருவர் கண் இணைகள் ஒன்றையொன்று திருஷ்டியால் ஒக்குமாயின், வாயளவில் பிறக்கும் சொற்கள் யாது பயனுமுடையனவல்ல என்பது பொய்யில் புலவர் போதனை. இதைத் தழுவியே கம்பரும்,

"கண்ணொடு கண்ணிணை கவ்வி ஒன்றை (ஒன்று)
உண்ணவும் நிலை பெறா(து) உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான்—அவளும் நோக்கினாள்."

என்று காதலர் காட்சியினைச் சித்திரித்திருக்கின்றார். அதிதீவிர காதல். காதலிருவர் கண்கள் ஒன்றை ஒன்று நோக்கால் ஒத்துக் காதலின் பரிபாஷையில் தட்டுமுட்டு இன்றி உரையாடி உவகை எய்துகின்றன. வாய்ச் சொற்களால் அடக்கிவிட முடியாத அரும்பெரும் பொருள்களை எல்லாம் காதலர் கண்கள் ஒரு கணத்தில் பேசி முடித்துவிடுகின்றன. இருவர் கண்களும் நோக்கால்



உள்ளம் ஒன்று படுகிறது. மனம் ஒன்றி நிற்க, அ வெய்துகின்றது.

இணையான சம்பவம் நடந்திருக்கின்றது. அன்னை வீக் ரலைத் தடவுகிறாள். அப்போது அவனும் நோக்கினான் ர்; அன்னதொரு நோக்கினிலே ஆவி கலந்து விட்டனர். நோக்குக் கொல்வது போன்றிருந்ததாம். அப்படி இருந்த வாரிப் பெருந்திரைபோல் அவளுக்கு வந்ததொரு மகிழ்ச் பரிருந்தது! காதலர் பார்வை பசுத்தோல் போர்த்த புலிபோ ந்த கண்ணிணைகளும் பேசிக்கொண்டது என்ன? யாரறிவார்? அவர் களே அறிவார். புறம்பாக மணம் நிறைவேறவிடினும் இவ்விருவருக்கும் அகத்தே மணம் நடந்தேறிவிட்டது. இவ்விழுமியகொள்கையினை அன்று தமிழர் கையாண்டனர் என்பது இக்கலித்தொகைச் செய்யுள் வெளியிடுகின்றது.

இதுபோன்ற பாக்கள் நமக்குப் பெரிதும் துணைபுரிகின்றன. பண்டைத் தமிழர்களிடை வழங்கப்பட்டுவந்த நடை, உடை, நாகரிகம் முதலிய அரண்மனைத் தாழ்களைத் திறக்கச் சிறந்த திறவுகோல்கள் போன்றன இப்பாக்கள். காதலைப் பண்டைத் தமிழர் எவ்விதம் போற்றிவந்தனர் என்பது மேலைப் பாட்டில் அறியக் கிடக்கின்றது. காதலை அன்று ஏற்றிப் போற்றி வந்தமைக்கு நேர் விரோதமாக இன்று நாம் காதலை எற்றி இழித்துக்கொண்டிருக்கின்றோம். நம்மை இக்காட்டுவழி நடத்திக்கொண்டுவிட்டது சமணர்களின் துறவுக்கொள்கையே. இதனால் நான் சமணத்தைத் தாழ்த்துக் கூறவில்லை. நான் சமரஸ சன்மார்க்கத்தை விரும்புகின்றவன். எல்லாமொரு தெய்வம்; எல்லோருமோர் குலம். மதம்-காதலையும் காமத்தையும் ஒன்றென எண்ணிச் சமணர்கள் காதலையும் எற்றினர் போலும். காதல் வேறு காமம் வேறு அன்றோ! பிற்காலத்திய தமிழர் சமணக் கொள்கையில் மனதைச் செலவிடுத்துக் காதலை இழித்துரைத்துவிட்டனர். எனவே இன்று காதல் மாசு சூழ்ந்த மணியாகிக் கிடக்கின்றது. அதைக் களைந்து அதன் தொன்மை நிலையாய கதிர்பொழி மணியாகச் செய்து வைக்க வேண்டுவது நம் கடன்!

இத்துணைச் சிறந்த பண்டைத் தமிழ் மாதரின் காதற் கற்பொழுக்கத்தை எடுத்துரைக்கும் இத்தனித் தமிழ் செய்யுள் வழக்கு பாராட்டற்பாலது. சூரிய மண்டலம், சந்திர மண்டலங்களினும் மேலெழுந்து செல்லும் கூடகோபுரங்கள், மாட மாளிகைகள் கற்பித்து ஒரு சில சாதாரணமான கட்டிடங்கள்கூட இல்லாத ஓர் ஊரில், அக்கட்டிடங்கள் இருப்பதாக மனக்கோட்டை கட்டி, அவற்றின் மேலடுக்குகளில் உலவாக மாதர்களை அமைத்து, அம்மாதர்களின் முடி முதல் அடி ஈறும் உள்ள ஒவ்வொரு உறுப்பையும் பற்பல பாக்களால் இன்னும் இல்லாத பொய்களை எல்லாம் அமோகமாய்ப் பெய்து புனைந்து பாடும் இக்காலத்தார் செய்யுள் வழக்கு ஓர்புறம்! உள்ளவற்றை உள்ளவாறே எடுத்துக்கூறி, எள்ளளவும் பிழைபடாது வரைந்த ஓவியம் போல்வதாகிய பழந்தமிழ்ப் புலவரின் செய்யுள் வழக்கு ஓர் புறம். இவ்விரண்டிற்கும் உள்ள வேற்றுமை கொஞ்சநஞ்சமல்ல. இதனைக் கண்டு அறியக் கம்பராமாயணச் செய்யுட்களோடு இக்கலித்தொகைச் செய்யுளை ஒப்பிட்டு நோக்குழி அது தெட்டெனத் தெரியும்.

"கண்ணைக் காக்கு மிரண்டிமை போலவே
காதலின்பத்தைக் காத்திடுவோமடா." (பாரதியார்.)

# பெட்டகக் கதைகள்

("சேம்பியன்".)

(530-ம் பக்கத் தொடர்ச்சி)

1. "மாதுமை சொல்லை அரன்கேட்டு முனம்
மால்மகன் ஓர் தலையைத் துணித்துப்
பேதை மதிகொண் டலைந்தனனேயது
பேச அறியாயோ பெட்டகமே."

என்றதில் அடங்கிய கதை:—

பிரமதேவன் சிருஷ்டிகர்த்தா; திருமாலுக்குப் புத்திரன். பிரமதேவனைத் திருமால் கற்பங்கள் தோறும் தம்முடைய மனத்திலும், கண்ணிலும், வாக்கிலும், காதிலும், மூக்கிலும், அண்டத்திலும், உந்தியிலும் படைப்பார். இதனாலேயே பிரமதேவன், 'மால்மகன்' என்று சொல்லப் படுகிறான். இவன் பொன்னிற மானவன்; தாடி, மீசை யுடையவன்; ஒரு காலத்தில் ஐந்து சிரங்களோடு கூடியிருந்து பிறகு சிவபெருமானால் ஒரு சிரம் கிள்ளி யெறியப்பட்டு நான்கு சிரத்தோடு கூடி யிருப்பவன்; மேல் வலக்கையில் ஜபமாலையும், மேல் இடக்கையில் தண்டாயுதமும், கீழ் வலக்கையில் கமண்டலமும், கீழ் இடக்கையில் ஸ்ருக், ஸ்ருவமும் கொண்டிருப்பவன். இவன் சுயம்புவாயும், ஒவ்வொரு கற்பத்தில் விஷ்ணு உருத்திரர்களிடம் தான்பிறந்தும், அவர்களைத் தன்னிடம் பிறப்பித்தும், தேவர் ரிஷிகள் பிதிர்க்கள் ஆகியவர்களுக்கு மூல காரணனாயும், எல்லாச் சிருஷ்டிகளுக்கும் காரணனாயும் இருப்பவன். இவனுக்குச் சரஸ்வதி, சாவித்திரி, காயத்திரி என்னும் தேவியர் உண்டு.

இந்தப் பிரமதேவன் ஐந்து முகங்களோடு கூடி எல்லாச் சிருஷ்டிகளுக்கும் காரணனா யிருக்கும்போது ஒரு காலத்தில், "சிவன் என்னுடைய புத்திரன்; என்னாலேயே உலகங்களெல்லாம் உண்டாயின," என்று மிகவும் செருக்குற்றிருந்தான். இப்படிச் செருக்குற்றிருக்கும்போது ஒரு சமயத்தில் சிவபெருமானைப் பார்ப்பதற்கு அவர் எழுந்தருளி யிருக்கும் திருக்கைலாயத்தில் உள்ள சபாமண்டபத்தை நோக்கிப் போயினான். அப்போது தனியா யிருந்த உமாதேவி பிரமதேவனைக் கண்டார். சிவபெருமானுக்கு ஐந்து திருமுகங்கள் உண்டு. அவரைப் போலவே பிரமதேவனுக்கும் ஐந்து முகங்கள் ஏற்பட்டிருந்ததால் உமாதேவியார் அவனைக் கண்டதும், சிவபெருமானென்றே நினைத்து எழுந்து மரியாதை செய்தார். பிறகு அவன் பிரமதேவன் என்பதை உணர்ந்து அவமானம் அடைந்தார்.

உடனே உமாதேவியார் சிவபெருமானிடம் சென்று, "உம்மைப் போலவே பிரமனும் ஐந்து சிரங்களோடு கூடி யிருப்பதனாலே நான் அவனைக் கண்டு, தாங்களே வருகிறீர்கள் என்று நினைத்து எழுந்து மரியாதை செய்



தேன்; பின்னர் அவனை இன்னவனென்று உணர்ந்த பின் பெரிதும் வெட்கத்தை அடைந்தேன்; இனிமேல் இவ்வித அவமானம் நேராதிருப்பதற்கு ஏதேனும் ஓர் உபாயம் செய்யவேண்டும்" என்று கூறினார்.

சிவபெருமான், "அந்தப் பிரமன் என்னைப்போலவே ஐந்து சிரங்களைப் பெற்றிருப்பதனாலேயேதான் எல்லாரினும் மேற்பட்டவனென்று செருக்குற்றிருக்கின்றான்; அந்தச் செருக்கை ஒழித்துவிட வேண்டும்; அவனுடைய சிரங்களில் ஒன்றைக் கிள்ளி யெறிந்து விட்டால்தான் அந்தச் செருக்கு ஒடுங்கும்; உன்னைப் போன்றவருக்கு இப்பேர்ப்பட்ட சந்தேகமும் உண்டாக மாட்டாது" என்று பிரமதேவனுடைய ஐந்தாவது சிரத்தைக் கிள்ளி யெறிந்தார். அந்தப் பிரமகபாலம் பிரமஹத்தி தோஷத்தால் அவர் கையிலேயே ஒட்டிக் கொண்டது. அந்தக் கபாலத்தோடு சிவபெருமான் மனக் கவலை கொண்டிருந்தார். மகாவிஷ்ணு அந்த தோஷத்தை நீக்கக்கருதி, இலக்ஷ்மி அந்தக் கபாலத்தில் பிச்சையிட அது நீங்கும் படிக்கும், தம்முடைய தொடையைக் கீறி இரத்தத்தை இட்டு அது வெடிக்கும்படிக்கும், தமது நெற்றியின் வியர்வையை அந்தக் கபாலம் நிறையவிட்டு அது பொடியாகும் படிக்கும் செய்தார். "வேதானத்தன் அத்தரத்தைத் தீர்த்தான் அரங்கன்" என்று பின்னைப் பெருமாள் ஐயங்கார் திருவரங்கத்து அந்தாதியில் கூறி யிருப்பதாலும் இவ் வரலாறு உணரப்படும்.

சிவபெருமான், பிரமனுடைய சிரத்தைக் கிள்ளின வரலாறு வேறு விதங்களாகவும் சில புராண இதிகாச கதைகளிற் கூறப்படுகிறது: "பிரமன் செருக்குற்ற காலத்தில் சிவமூர்த்தி அவனுடைய ஐந்தாவது சிரத்தைக் கிள்ளி யெறிய அந்தப் பிரமதேவன் அவரை நோக்கி, 'எம்பெருமானே' உலகத்தில் செருக்கடையும் மற்றவர்களும், நீர் என்னுடைய சிரத்தைக் கிள்ளிச் செருக்கை ஒடுக்கிய வீரச்செயலை உணர்ந்து தங்கள் செருக்கும் ஒடுங்குமாறு நீர் எப்போதும் இந்தக் கபாலத்தைக் கையில் தரித்தருள வேண்டும்' என்று வேண்டினான். அவ்வாறே சிவபெருமான் அந்தப் பிரமகபாலத்தை எப்போதும் கையில் ஏந்திக் கொண்டிருக்கிறார்" என்பது சில நூல்களிற் கூறப்படுகிறது.

"பிரமன் கர்வங்கொண்ட காலத்தில் சிவபெருமான், பயிரவரை ஏவி அவனுடைய நடுத்தலையைக் கிள்ளி யெறியச் செய்து, அந்தப் பிரமன் வேண்டுகோளால் அவ்வாறு கிள்ளி யெறியப்பட்ட பிரமகபாலத்தைக் கையில் தரித்தருளினார்" என்று வேறு சில நூல்கள் கூறுகின்றன.

இவ்வாறு புராண கதைகள் ஒன்றுக்கொன்று முரணாக ஏற்பட்டிருப்ப...ல் எதையும் துணிந்து கூற முடிவதில்லை. பலர் தர்க்கமிட்டுக் கொள்ள ...ஏதுவாகிறது. நம்நாட்டில் ஏற்பட்டிருக்கும் மதவிகற்பங்களினாலேயே ...வாறு ஒரு வரலாறு பலராலும் பல விதங்களாக எழுதப்பட்டிருக்கின்றன. ...வொருவரும் ஒவ்வொரு வகையைச் சொல்லி அதற்குத் தக்க நூல் ஆதார ...காட்டி விடுகின்றனர். ஒருவர் கூறுவதை மற்றொருவர் ஏற்றுக்கொள்ள ...வில்லாமலும் போய் விடுகிறது.

# நந்தன்—ஓர் பஞ்சமன்

(கி. ரா. ஆதிகுடி.)

"என்ன ஐயா! அக்கிரமமாயிருக்கிறது! பிரம்ம குலத்திலுதித்த பிராம்மணர்களும், அழுகிய மாட்டைத் தின்னும் சண்டாளர்களும் ஒன்றாய்ப் போகவேண்டுமாமே? இந்த அநியாயம் எங்கு அடுக்கும்? இதற்காக காந்தி பட்டினி கிடக்கிறாராம். அவர் பட்டினி கிடந்தால் நமக்கென்ன? அவருக்கு அஜீர்ணம் போலிருக்கிறது, பட்டினி கிடக்கிறார். இதற்காக வர்ணாச்ரம தர்மத்தை விட்டு விடுவதா? இத் தர்மம் ஆதியில் பகவானாலேயே சிருஷ்டிக்கப்பட்டது. இவ்வளவு காலமாய் அனுஷ்டித்து வந்த ரிஷிகளென்ன, பண்டிதர்களென்ன அவர்களெல்லாம் மூடர்களா? இவர்கள்தான் பிரகஸ்பதியின் அவதாரமோ?..."

"என்ன சொன்னீர்கள்? பறையனும் பிராம்மணனும் ஒன்றா? அதெப்படி முடியும்? காந்திக்கென்ன பித்தம் பிடித்துவிட்டதா? சுயராஜ்யம் வருவதற்குள் இப்பாடு படுத்துகிறாரே காந்தி! சுயராஜ்யம் கொடுத்துவிட்டால் ஏது நம் தேசத்தைத் தலைகீழாக மாற்றிவிடுவார் என்பதற்குச் சந்தேகமில்லை. "காந்தி—காந்தி" யென்று எல்லாரும் கதர் கட்டப்போகத்தான் அகவிலை ஒரேயடியாய்ப் படுத்துப் போயிற்று. இன்னும் என்ன வேண்டும்? காந்தியால்தானே ஊரில் தரித்திர தேவதை கூத்தாடுகிறாள். இன்னும் கொஞ்சம் நஞ்சம் இருக்கும் தர்மத்தையும் அழிக்கப் பார்க்கிறார் போலிருக்கிறது."

மேற்கூறிய சம்பாஷணை பூவலூர் ஆற்றங்கரையில் சந்தியா வந்தனம் செய்து சிரத்தையுடன் மனத்தைக் கடவுளின்பால் செலுத்தி ஜபம் செய்யும் இரு பிராம்மணர்களுக்கிடையே நடந்தது. முதலில் பேசியவர் அவ்வூருக்குப் பெருத்த தனிகரும்,—"முதற் புள்ளி" யுமான வேதாசலமையர் என்பவர். இவர் அதிகச் செல்வாக்குடையவர். அவர் பேரைச் சொன்னால் அழுத பிள்ளையும் வாய்மூடும். அவர் பேருக்கேற்ப வேதாகமங்களில் படித்துத் தேர்ந்த பண்டிதர் என நினைத்து நேயர்கள் ஏமாந்தால் அதற்கு நான் ஜவாப்தாரியில்லை. உண்மையில் அவருக்கு எழுத்து வாசனையே கிடையாது. தம் பெயரை மாத்திரம் தமிழில் எழுத வெகு சிரமப்பட்டுக் கற்றுக் கொண்டிருக்கிறார். ஆனால் அதைப்படிக்க யாராலும் முடியாது. மற்று அவருக்குச் சந்தியா வந்தனம்கூட முழுவதும் சரியாகத் தெரியா[illegible] வதந்தி.

மற்றொருவர்தான் "தெக்க சாஸ்திரி" யென்ற தக்ஷிணாமூர்த்தி[illegible]கள். அவர் அந்த ஊர் புரோகிதரும், ஐயரின் அந்தரங்க மந்[illegible] அவர் யோசனையில்லாமல் ஐயர் ஒன்றும் செய்வதில்லை.



"நம்மூரில் இதெல்லாம் ஒன்றும் இதுவரையில் கிடையாது. இப்பொழுது இந்த நந்தன் பயல் இரண்டெழுத்து தெரிந்து விட்டதென்று அகத்தால் திமிர்பிடித் தலைகிறான். பறத்தெருவில் பள்ளிக்கூடம் போட்டிருக்கிறானாம். ஒருவரும் மாடு தின்னக் கூடாதெனக் கட்டுப்பாடு செய்கிறானாம், ஊரை மரியாதையின்றிக் கெடுக்கிறானாம். இன்னும் வருகிற தைப்பூசத்தில் அந்தப் பயல்களுக்குக் கோவில் வாசலில் வந்து சுவாமி தரிசனம் செய்ய வேண்டுமாம், எவ்வளவு துணிவு! என்ன அக்கிரமம்! இந்தப் பசங்களின் திமிரை நான் அடக்குகிறேன்!" என்று வேதாசலமையர் வீரத்துடன் கூறி முடித்ததும் ஜபமும் முடியவே இருவரும் எழுந்து தம் தம் இல்லம் நோக்கிச் சென்றனர்.

## 2

இன்று புஷ்ய மகோத்சவம். பூவலூரில் மற்ற உற்சவங்களைவிட இது மிகவும் விமரிசையாக நடக்கும். மகாதேவமூர்த்தி வெள்ளி ரிஷபத்தின் மீது அம்பிகா சமேதராய் ஆற்றங்கரையில் தீர்த்தமளிப்பது மனோன்னதக் காட்சியாயிருக்கும். இதைத் தவிர, பிரபல நாதசுரக்காரர்களும், பாண்டு வாத்தியக்காரர்களும் வாசித்துத் தள்ளும் சங்கீதத்தின் இனிமையும், அருமையும், அதை அனுபவித்து முன்னிருந்து தலையை ஆட்டும் ரசிகர்களுக்குத்தான் தெரியும். இன்னும் அதிர் வெடிகள், "அவுட்"கள், மத்தாப்புக்கள் முதலிய வாணவேடிக்கைகள் கண்டோர் கண்ணைக் கவர்ந்து காதைச் செவிடுபடச் செய்யும். இவ்வளவும் கோவில் டிரஸ்டியும், பிரபல மிராசுதாருமான ஸ்ரீமான். வேதாசலமையர் செலவில் நடக்கிறபடியால் இதிலொன்றும் ஆச்சரியமில்லை. இவ்வேடிக்கைகளைக் கண்டு களிக்க பக்கத்திலுள்ள கிராமங்களிலிருந்து ஜனங்கள் முதல்நாள் முதற்கொண்டே திரள் திரளாக வந்து கூடிக் கொண்டிருந்தார்கள்.

இரவு சுமார் மணி பத்திற்குச் சுவாமி ஊரைச் சுற்றித் திருவுலா வரப் புறப்பட்டார். மேள வாத்தியங்களும், அதிர் வெடிகளும் காதைத் துளைத்தன. வாணங்களும், மத்தாப்புக்களும், இருபக்கமும் சாரி சாரியாகத் தொங்கவிட்டிருக்கும் "கியாஸ் லைட்"களின் பிரகாசமும் ஒருங்கே சேர்ந்து கண்ணைப் பறித்தன. ஸ்ரீமான். வேதாசலமையர் தம் பருத்த சரீரத்தில் விபூதியைப் பட்டையாகப் பூசிக்கொண்டு, ஐந்து விரலகல சரிகைக் கரை போட்ட பட்டு வஸ்திரத்தை அரையிலுடுத்திக்கொண்டு, பத்து விரல்களிலும் வைர மோதிரங்கள் பள பளவென மின்ன, கையில் வெள்ளிப்பூண் பிடித்த பிரம்பொன்றை வீசிக்கொண்டு ஆடம்பர படாடோபத்துடன் சுவாமிக்குமுன் கிளம்பிவந்தார்.

பத்தடி பின்னால் கறுத்துப் பருத்த உருவமும், தடித்த உதடும், எமதூதர்போன்ற தோற்றமும் வாய்ந்த இருபத்தைந்து ஆட்கள் கையில் தடியுடன் சுவாமியைத் தொடர்ந்து வருவதைக் கண்டு நேயர்கள் ஆச்சரிய முறலாம். வழியில் ஏதாவது சிறு கலகங்கள் ஏற்பட்டால் பந்தோபஸ்துக்காக முன் ஜாக்கிரதையாக ஐயர் அவர்களை முன்பே அவ்விதம் வரும்படி ஏற்பாடு செய்திருந்தார். அதுவுமன்றி பறையர்கள் சுவாமியைப் பக்கத்தில் வந்து தெரிசிக்க வேண்டுமென்று முன்பே சொல்லிக்கொண்டிருந்ததால் ஏதேனும் கலகம் ஏற்படலாமென்று ஐயர் எதிர்பார்த்தார்.

சுவாமி கோவிலைவிட்டுக் கிளம்பி ஒரு மூலையில் திரும்பித் தெருவுக்குள் நுழைந்தது. அப்பொழுது ஒரு கல்லெறி. தூரத்தில் "பஞ்சமர்கள்" என்னும் "தீண்டாதார்" வகுப்பைச் சேர்ந்த 30-பேர்கள், தலைமுழுகி, நெற்றியில் "தின்னூறு" பூசி தேங்காய் பழங்களுடன் சாமி கும்பிடத் தயாராய் வந்து நின்றுகொண்டிருந்தனர். ஆனால் சமீபத்தில் வரக்கூடாதென்று ஐயர் கண்டிப்பாய்க் கூறியதுமன்றி அவர்கள் மீறினால் போலீசில் ஒப்பித்துவிடுவதாகவும் பயமுறுத்தியதால் அவர்கள் இன்னது செய்வதென்று தெரியாமல் திகைத்துக்கொண்டிருந்தார்கள். அச்சமயம் பந்தோபஸ்துக்காக வந்திருந்த தடியர்கள் அப்பஞ்சமர்களின் ஓரமாய்க்கடந்து செல்ல நேர்ந்தது. அத்தடியர்களுள் அதிகமாகக் குடித்திருந்த ஒருவன் இவர்களைப் பார்த்து எளனமாகப் பேசினான்:—என்ன துணிச்சல்டா இந்த படுவாப்பசங்களுக்கு? கோவிலுக்குப் போகணுமாம்! மாட்டுத் தோலைத் திங்கும் பறப்பசங்களுக்கு சாமி தரிசனமா?".

இதைக்கேட்ட பஞ்சமர்களுக்கும் கோபம் வந்தது. ஆனால் அவர்கள் அன்று குடிக்காததால் கோபத்தை அடக்கிக்கொண்டனர். இல்லாவிடில் உடனே இருதிறத்தாரும் கைகலந்து சமர் தொடுத்திருப்பர். அச்சமயம் அகஸ்மாத்தாக சுவாமியின் பக்கத்தில் விட்ட வாணங்களில் ஒன்று முன்பு ஏளனமாகப் பேசியவனின் முதுகில் வந்து விழுந்தது. அவன் பஞ்சமர்கள் தான் தன் மேல் கல்லெறிந்து விட்டார்களென்று நினைத்துவிட்டான். அவ்வளவுதான்! அவனுக்கு மூண்டது கோபம்! உடனே தடியைச் சுழற்றிக் கொண்டு கிளம்பினான். அவனுடன் அவன் சகாக்களும் கிளம்பினர். "அடிமாடு தின்னிப் பயல்களுக்கு அவ்வளவு திம்ரா?..." என்று எல்லோரும் ஒரே மூச்சாகப் பஞ்சமர்கள் மேல் பாய்ந்தனர். பஞ்சமர்களும் இவர்களுக்கு இளைத்தவர்களல்லர். இவ்வளவு நேரம் அவர்களால் அடக்கி வைக்கப்பட்டிருந்த ஆத்திரம் பொங்கி எழுந்தது; தங்கள் தடியையும் சுற்றிக்கொண்டு ஆவேசத்துடன் எதிர்த்தனர். சற்று நேரத்தில் இரு கட்சியினரும் கைகலந்தனர். எங்கும் கலவரமும், குழப்பமும், கூக்குரலும் மிகுந்தன.

அதற்குள் ஐயரும் அவ்விடம் வந்து சேர்ந்தார். தன் பிரம்பை வீசிக் கொண்டு கூட்டத்தில் கலந்துகொண்டார். ஆத்திரத்தில் இரண்டு பஞ்சமர்களை வீசிவிட்டார். மூர்க்கத்தினால் வெறி கொண்ட பஞ்சமர்கள் ஐயரை நாலு பக்கத்திலும் சூழ்ந்துகொண்டனர், அவர்பாடு ஆபத்தாய்விட்டது. பஞ்சமர்கள் கிட்டத்தில் நெருங்கி விட்டனர். அடுத்த நிமிஷம் ஐயர் கதி அதோகதியாய்விடும் போலிருந்தது. அப்பொழுது இந்நேரம் எட்டியிருந்து எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டிருந்த ஒருவாலிபன் ஐயரின் ஆபத்தான நிலைமையைக்கண்டான். உடனே சட்டென்று புலிபோல் பாய்ந்து ஐயருக்கும் அவரைச் சட்னியாக்கவிருந்த பஞ்சமருக்கும் இடையே குதித்து தன்னிருகைகளையும் உயர்த்தி "நிறுத்துங்கள்!" என்று கம்பீரமான தொனியில் கூறினான். உடனே மந்திரத்தால் கட்டுண்டவர்போல் அப் பஞ்சமர் யாவரும் சண்டை செய்வதை நிறுத்தினர். திடீரென்று தங்கள் எதிரிகள் போரை நிறுத்தியதைக்கண்ட ஐயரின் ஆட்களும் ஆச்சரியத்தால் ஸ்தம்பித்து நின்றனர்.

இவ்வளவு தூரம் அப்பஞ்சமர்கள் பயந்து நடக்கும் அவ்வாலிபன் யார்? அவன்தான் முன்னொருநாள் ஐயரின் அளவிலாக்கோபத்திற்கு ஆளான 'நந்தன்' என்ற பஞ்சமன்.



அவன் கையில் யாதொரு ஆயுதமும் இல்லை. அன்றியும் அவன் பார்வைக்குச் சிறு பிராயமுள்ள வாலிபனாய்க் காணப்பட்டானாயினும், அவனிடம் அவ்வூர்ப் பஞ்சமர்கள் அளவற்ற மரியாதையும் அன்பும் கொண்டிருந்தனர். அவன் அப்பஞ்சமர்களை முன்னுக்குக் கொண்டுவர மிகவும் முயன்று வந்தான். அவர்களுக்குப் படிப்புக்கற்பித்தும் ஈனத்தொழில் புரிவதிலிருந்து அவர்களைத் தடுத்தும், சுகாதாரம் முதலிய விஷயங்களைப் போதித்தும் அவர்களைப் பல விதத்திலும் முன்னேறச் செய்துவந்தான். ஆகையால் அவர்கள் அவனிடம் ஒரு பக்தியும் பயமும் கொண்டு அவன் எது கூறினும் அதன்படி நடந்துவந்தனர்.

நிற்க, முன்கூறியபடி சண்டை நின்றதும் நந்தன் அப்பஞ்சமர்களைத் திருப்பிச் சேரியை நோக்கி அழைத்துக் கொண்டு போய்விட்டான். கலவரமும் குழப்பமும் அடங்கி, பெரும் புயலுக்குப் பின் வரும் அமைதியையொக்க எங்கும் நிம்மதி யடைந்தது. ஆனால் ஐயரின் ஆத்திரம் மட்டும் அடங்கவில்லை. அவர் கோபம் கரைபுரண்டோடிப் பொங்கி யெழுந்தது; கொதித்தார்; குதித்தார். "அந்தப் பறப்பசங்களை என்ன பண்ணுறேன் பார்!" என்று கூத்தாடினார். முன் மதனனை யெரித்த மகேச்வரனின் கோபம்கூட அவருடைய ஆத்திரத்துக்கு இணையாகாது எனச் சொல்வது தகும். திருவிழாப் பந்தோபஸ்துக்காக வந்திருந்த ஜவான்களை அழைத்தார். கூட்டத்தில் புகுந்து கலகம் செய்ததற்காக நந்தன், வேலன், கந்தன் என்ற மூவரையும் பிடிக்கும்படி ஏவினர். அவர்களும் அம்மூவரையும் பிடித்துக்கொண்டு போயினர். நந்தனும் அவன் சகாக்களும் பதில் பேசாமல் ஜவானைப் பின் தொடர்ந்தனர்.

பத்து நாளில் கேஸ் விசாரணைக்கு வந்தது. நந்தன், வேலன், கந்தன் இம்மூவரும் திருவிழாவில் கூட்டத்தில் புகுந்து கலகம் செய்ததும் அன்றி, பந்தோபஸ்துக்காக வந்திருந்த ஆட்களில் இருவரை அடித்துக் காயப்படுத்தினதாகவும் குற்றம் சாட்டப்பட்டனர். கேஸைப் போலீஸாரே எடுத்துக் கொண்டனர். வேதாசலம் ஐயர் இதற்காகப் பெருவாரியாகப் பொருள் செலவழித்து இருபது சாட்சிகள் வரை தயாரித்துக் கொடுத்தார். போலீசார் பக்கம் விசாரணை முடிந்ததும் நியாயாதிபதி நந்தன் முதலியோரை சாக்ஷிகள் உண்டாவென்று கேட்டார். ஆனால் நந்தன் தான் வாதிக்க வேண்டியதில்லையென்று கூறிக் குற்றத்தை ஒப்புக்கொண்டான். அவனுடைய கூட்டாளிகளும் அவனைப் போலவே ஒப்புக் கொண்டனர். கேசு ருசுவாகிவிட்டபடியால் நியாயாதிபதி குற்றவாளிகளுக்கு ஆளுக்கு ஆறுமாதம் சிறைவாசத் தண்டனை விதித்தார்.

4

மனோரம்மியமான மாலை. நிர்மலமான வானம். பூவலூர் ஆற்றங்கரையில் இனிமையான மந்தமாருதம் ஜில்லென்று வீசுகிறது. மேற்றிசையில் செந்நிற வானத்தில் அஸ்தமிக்கும் பொன்னிறக் கதிரவனின் காட்சி கண்களைக் கவர்ந்தது; காண்போர் மனதையும் வஞ்சித்து இப் பிரபஞ்சத்தின் கர்த்தாவான ஈசுவரன்பால் இழுத்துச் சென்றது.

இவ்வுன்னதக் காட்சியைக் கண்டு களித்துக்கொண்டே நந்தன் ஆற்றங்கரையோரமாக உலாவிச் சென்றான். அன்றுதான் அவன் விடுதலையாகி

இரண்டு தினங்களாயிருந்தன. "தீண்டாதா"ரென்னும் தன் சாதியாரை எவ்விதம் முன்னுக்குக் கொண்டுவருவதென்று மனதில் எண்ணி ஏங்கித் தவித்தான். அவர்கள் படும் எண்ணிலாக் கஷ்டங்களை எண்ணி யெண்ணி நெஞ்சம் புண்ணானான். அவர்களுக்கொரு வழி பிறக்காதாவென்று ஈசுவரனை வேண்டித் துதித்தான். இச் சந்தர்ப்பத்தில் முன்கூறிய மாலைச் சூரியனின் மகோன்னதமானக் காட்சி அவன் கண் எதிர்ப்பட்டது. அவ்வளவிலா ஆனந்தத்தில் அவன் மூழ்கித் தன் மெய்மறந்து நின்றான்.

திடீரென்று ஒரு கூக்குரல் கேட்டது. தன் கனவிலிருந்து விழித்த நந்தன் சத்தம் வந்த திக்கை உற்று நோக்கினான். அக்கிராரத்தின் கடைசியில் வானத்தில் சந்திரோதயம் போன்ற செந்நிற வெளிச்சம் ஒன்று தோன்றியது. அது வர வர அதிகமாகி கொழுந்துவிட்டெரியும் பெரிய தீச்சுடராக மாறியது. அதைக் கண்டதுதான் தாமதம்! நந்தன் தன் கவலைகளையும் ஆனந்தத்தையும் மறந்து ஒரே எட்டில் தாவி மறுநிமிடமே அவ்விடத்தை யடைந்தான். என்ன பரிதாபம்! தெருக்கோடியிலுள்ள வேதாசலம் ஐயரின் மாளிகை தீக்கிரையாகி வெந்துக் கொண்டிருந்தது. ஐயரின் ஆட்கள் அங்குமிங்கும் ஓடி நெருப்பை யவிக்க முயன்று கொண்டிருக்கின்றனர். ஐயர் பரபரப்புடன் ஆட்களை வெருட்டி வீட்டிலுள்ள விலையுயர்ந்த சாமான்களை வெளியேற்றிக் கொண்டிருக்கின்றார். ஐயரின் மனைவி அன்னம்மாள் தன் ஒரே செல்வக் குழந்தை பங்கஜம் வீட்டிற்குள் அகப்பட்டுக் கொண்டுவிட்டாளென்று அலறிப் புடைத்துக்கொண்டு கதறுகிறாள்.

இத்தீக்குக் காரணம் வீட்டு வேலைக்காரி வீரம்மாள் அடுப்புச் சாம்பலைக் கொல்லைப்புறத்தில் கொண்டு கொட்டியிருக்கிறாள். ஆனால் அதில் அவியாய விருந்த தணல் பக்கத்திலிருந்த வைக்கோலில் பட்டு புகைந்து கொண்டேயிருந்து பெருந்தீயாக மாறி யாரும் கவனிப்பதற்குள் வீட்டில் பிடித்துவிட்டது.

முற்கூறியபடி அன்னம்மாள் அலறிக்கொண்டிருக்கும் சமயம் நந்தன் அவ்விடத்தை யடைந்தான். அடைந்து சற்று தூரத்தில் மரியாதையாக நின்று கொண்டிருந்தான். அதற்குள் அக்னி பகவானும் வீட்டின் பின்புறத்தை யெரித்து இரையாக்கிக் கொண்டு, முன்புறத்தை யடைந்துவிட்டான். ஐயரும் தன் மகள் பங்கஜத்தைக் காணவில்லை யென்ற செய்தியை யறிந்தார். பலவிடங்களிலும் தேடினார். பிறகு வேலைக்காரியிடமிருந்து குழந்தை மேல் மாடியில் தூங்கிக் கொண்டிருப்பதாக அறிந்தார். ஆனால் அங்கு யார் போவது? எப்படிப் போவது? உள் முழுதும் தீ சூழ்ந்துவிட்டது. தான் போவதென்றால் முடியாத காரியம். தன் ஆட்களை விளித்து ஒவ்வொருவராகச் சொல்லிப் பார்த்தார். ஒருவரும் அசையவில்லை. அவர்களைப் பயமுறுத்தினார். அதுவும் பயனில்லை. பிறகு அவர்களுக்குப் பெருத்த வெகுமானங்கள் தருவதாக ஆசைகாட்டித் தூண்டினார். ஆனால் அவர்கள் ஒருவரும் தங்கள் உயிரை வெறுக்கத் துணியவில்லை. ஒவ்வொருவராகப் பின்தங்கி நழுவ ஆரம்பித்தனர்.

ஐயருக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை. துடித்துத் திகைத்தார். அப்பொழுது அவர் பார்வை தற்செயலாக தூரத்தில் நிற்கும் நந்தன் மேல் விழுந்தது. ஓர் யோசனை தோன்றிற்று. உடனே அவனைப் பக்கத்தில் அழைத்தார்.



"நந்தா, என் குற்றத்தை மறந்து தயவு செய்து எனக்கொரு உதவி செய். என்னருமைப் பங்கஜம் மேல்மாடியில் தீயிலகப்பட்டுக் கொண்டுவிட்டாள். அவளைக் காப்பாற்றி விடு. உனக்கு வேண்டியதைத் தருகிறேன்" என்று கெஞ்சினார்.

நந்தன் மனம் இளகியது. ஆனாலும் சற்றுத் தயங்கினான். "சாமி நான் தீண்டாதவனாயிற்றே!" என்றான்.

"பரவாயில்லை! ஆபத்துக்குப் பாபமில்லை. சீக்கிரம்! சீக்கிரம்!" என்றார் ஐயர்.

சொன்னதுதான் தாமதம்! கண்மூடிக் கண் திறப்பதற்குள் நந்தன் ஆடைகளைக் களைந்தெறிந்துவிட்டு அரையில் ஒரு சிறு துண்டுடன் புலி போல் பாய்ந்து "திகுதிகு" என்று எரியும் வீட்டிற்குள் புகுந்தான். என்னே! அவன் தைரியம்! என்ன வீரம்! என்ன தியாகபுத்தி! பக்கத்திலுள்ளோர் யாவரும் திகைப்பும் வியப்பும் கொண்டு ஸ்தம்பித்து, அதிக ஆவலுடன், மூச்சுவிடாமல் வீட்டையே உற்று நோக்கிக் கொண்டிருந்தனர். ஓர் பஞ்சமன் அக்கிராரத்திற்குள் நுழையலாமா வென்பதை யாவரும் மறந்துவிட்டனர்!

சற்று நேரத்தில் நந்தன் செந்தணலால் வெந்த தேகத்துடன் கையில் கம்பளியால் சுற்றப்பட்ட மூட்டையொன்றை எடுத்துக்கொண்டு வெளியே ஓடிவந்து கீழே வைத்தான். ஐயரும் அன்னம்மாளும் தங்கள் குழந்தை உயிருடனிருக்க வேண்டுமேயென்ற கவலையுடன் அம்மூட்டையைப் பிரித்துப் பார்த்தனர். பங்கஜத்துக்கு ஒருவித ஆபத்தும் நேரவில்லை. பயத்தினால் மூர்ச்சை தெளிந்தெழுந்தாள். ஐயர் நந்தனை எங்கும் தேடினார். பலவிடத்தில் தேடியும் காணவில்லை. பிறகு வீட்டிற்கு ஆளனுப்பினார். நந்தன் வீட்டில் படுத்த படுக்கையாயிருந்தான். தேகமெங்கும் வெந்து புண்ணாயிருந்தது. பிரக்ஞையின்றி அவன் நிலை மிகவும் பரிதாபகரமாயிருந்தது.

ஐயர் இச் செய்தியை யறிந்ததும் நேரே தன் வண்டியை யனுப்பி டாக்டரை வரவழைத்தார். வைத்தியரும் நந்தன் நிலைமை மிகவும் ஆபத்தானதென்று கூறினார். கல் நெஞ்சரான ஐயரின் மனதும் இதைக் கேட்டதும் சற்று இளகிற்று. ஒரு கைம்மாறும் கருதாது தன் உயிரைத் தியாகம் செய்த நந்தனின் உயர்குணத்தைப் பெரிதும் புகழ்ந்தார். எப்பாடுபட்டாவது அவனைக் காப்பாற்றிவிட வேண்டுமென்று தீர்மானித்தார். தானே நேரில் டாக்டரிடம் சென்று அவனுக்கு வேண்டிய செலவைத் தான் ஒப்புக் கொள்வதாயும் எவ்விதமாவது அவனைப் பிழைப்பிக்க வேண்டுமென்றும் வேண்டினார். டாக்டர் தம்மால் கூடியதைச் செய்வதாகவும் ஒப்புக்கொண்டு தினமும் வந்து ஊக்கத்துடன் கவனித்தார்.

ஈசுவர கிருபையால் இரண்டு மாதத்தில் நந்தன் சொஸ்தமடைந்தான். ஆனால் அவன் பழைய நிலையை யடைய ஆறுமாதமாயிற்று.

* * * *

பூவனூருக்கு 3-மைல் தூரத்தில் காவிரியாற்றங்கரையில் ஒரு புனிதமான இடத்தில் ஒரு ஆசிரமம் அமைந்திருக்கிறது. அதற்கு "வேதாச்ரம"மென்று பெயர். அங்கு தினமும் அனேகம் ஏழைப் பஞ்சமர்களுக்கு அன்னமளிக்கப்

படுகிறது. அதையொட்டி ஒரு கைத்தொழிற்சாலை யிருக்கிறது. அதில் நூல் நூற்பது, நெசவு, தச்சுவேலை முதலிய பல கைத்தொழில்களும் பஞ்சமச் சிறுவர்களுக்குக் கற்பிக்கப்படுகிறது. இவ்வளவுக்கும் கர்த்தா நமது பழைய வேதாசலம் ஐயர் என்றால் நேயர்கள் ஆச்சரியப்படாமல் எப்படியிருக்க முடியும்?

நந்தன் அன்று தன் மகளின் உயிரைக் காப்பாற்றியதிலிருந்தே வேதாசலம் ஐயருக்குப் பஞ்சமர்களிடம் ஒருவித இரக்கமும் கருணையும் பிறந்தது. அதற்குப் பிறகு ஸ்ரீமான் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்களின் பிரசங்கத்தை இரண்டு மூன்று தடவை கேட்டார். அதிலிருந்து அவர் மனம் முற்றிலும் மாறிவிட்டது. அதன் பயனாகத் தம் ஏராளமான சொத்தில் பெரும் பகுதியைப் பஞ்சமர்களின் முன்னேற்றத்திற்கென்றே அர்ப்பணம் செய்துவிட்டார். பல ஏழைக் குடும்பங்களைக் காப்பாற்றினார்; பல சிறுவர்களை இலவசமாகப் படிக்கவைத்தார். ஜலக் கஷ்டமுள்ள விடங்களில் கிணறுகள் தோண்டி அவ்வெளிய ஜனங்களுக்கு எல்லாவிதங்களிலும் சௌகரியங்கள் செய்துவைத்தார். பிறகு நந்தனுடன் ஆலோசித்து முற்கூறிய ஆசிரமமொன்றை ஏற்படுத்தித் தன் பார்வையிலேயே நடத்தினார். தாமும் அதில் வசித்துக் கொண்டு தினமும் பஞ்சமர்களுடனேயே போசனமருந்தி வந்தார். நந்தன் அவருக்கு மிகவும் அந்தரங்கமாய்விட்டான். அவனன்றி அவர் ஒரு காரியமும் செய்வதில்லை.


## 'ஆனந்தபோதினி' வாரப் பத்திரிகை.

:o:

நமது 'ஆனந்தபோதினி' வாரப் பதிப்பின் நான்காவதாண்டு நடைபெறுகிறது. நம் தேசமக்கள் அரசியல், சமயம், சமூகம், பொருளாதாரம் முதலிய துறைகளில் தக்க அறிவும், அபிவிருத்தியும் பெறுவதற்காகவே பற்பல அறிஞர்களின் அரிய கட்டுரைகள் அதில் வெளியாகின்றன. நம் நாட்டிலும், உலகில் இதர தேசங்களிலும் நடைபெறும் எல்லாச் செய்திகளும் திரட்டி வெளியிடப்படுகின்றன. தினசரிப் பத்திரிகை படிக்கவில்லையே என்னும் கவலையின்றி உலக விஷயம் முழுவதையும் நமது வாரப் பத்திரிகையினின்றும் தெரிந்துகொண்டு மகிழ்ச்சியடையலாம். இதன் வருஷ சந்தா உள் நாட்டுக்கு ரூபா மூன்றுதான். வெளிநாடுகளுக்கு ரூபா ஐந்து. உடனே எழுதிக்கொள்ளுங்கள்.

மானேஜர்,
'ஆனந்தபோதினி' ஆபீஸ்,
செவகார்பேட்டை, மதராஸ்.


# ஆரம்பக் கல்வியும் பெற்றோரும்

(P. N. கலியாணசுந்தரன்.)

தற்போது ஆரம்பக்கல்வியின் அபிவிருத்திக்காக பாடுபடாதவர்
மிகச் சிலரே யாவர். பலர் பெருமுயற்சியின் பயனாகப் பட்ட
ணங்கள் தோறும், கிராமங்கள் தோறும் போர்டு பாடசாலைகள், முனிசிபல்
பாடசாலைகள் இவைகளன்றி இன்னும் இதர பள்ளிகள் பலவும் அமைந்துள்
ளன. பெரிய ஊர்களில் தெருக்கள் தோறும் பாடசாலைகளைக் காண்கிறோம்.
குழந்தைகள் இவைகளில் கற்று அதனாலாம் பயனை யடைதல் மேற்படி பாட
சாலைகளின் காரண கர்த்தர்களும் அவற்றில் நியமிக்கப்பபட்டுள்ள ஆசிரியர்
களும் எடுத்துக்கொள்ளும் முயற்சியினால் மாத்திரம் கூடாது. ஒரு பள்ளிக்
கூடம் நிலைபெற வேண்டுமாயின் கல்வி கற்கும் குழந்தைகள் அத்தியாவசியம்.
குழந்தைகள் பள்ளிக்கு அனுப்பப்படுதற்குப் பெற்றோர்களின் கடமை இன்றி
யமையாதது. ஆதலின், ஒரு கலாசாலை முன்னேற்றத்தை யடைவதற்கு
அதிகாரிகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகிய மூவரின் கூட்டுறவும் உழைப்
பும் அவசியம் என்பது வெள்ளிடைமலை. பெற்றோர்களின் ஒத்துழைப்பும்,
ஆசிரியர்களின் மாசற்ற ஊக்கமும், மேலதிகாரிகளின் உண்மைக் கவனிப்பும்
ஆகிய இவைகள் தோன்றினால் ஆரம்பக்கல்வி காட்டுத் தீப்போல் வெகு
சீக்கிரத்தில் பரவு மென்பதில் ஏதேனும் ஐயமுண்டோ? ஆயின் அனுபவத்
தில் மேற்சொன்னவைகளில் ஏதேனும் ஒன்றில் குறையிருக்கக் காண்கிறோம்.
இனி அத்தகைய குறைகளை வேரோடு களைய முற்படுவது கற்றோரின்
கடமையெனக் கொண்டு கல்வியின் அபிவிருத்திக்காக ஒவ்வொருவரும் தக்க
பிரயாசையை மேற்கொள்ள வேண்டும்.

கல்வி விஷயத்தில் மற்றையோரைக் காட்டிலும் ஆசிரியருக்கும் பெற்றோருக்குமே அதிக சிரத்தை யேற்படல் வேண்டும். ஆசிரியர், பெற்றோர் ஆகிய இரு வலிய காளைகளும் ஒருப்பட்டு இழுக்க முற்பட்டாலன்றிக் கலாசாலையாகிய வண்டி குறித்த இடத்தை (முன்னேற்றத்தை) யடைவது கடினம். ஆகவே ஆசிரியர்கள் பெற்றோர்கள் நட்பைப் பெரிதும் நாடி அவர்களைப் பள்ளிக்கூட விஷயங்களில் சிரத்தை காட்டுமாறு ஊக்கவேண்டும். ஆசிரியர்கள் தாங்கள் கல்வி கற்பிக்கும் மாணவர்களில் ஒவ்வொருவனுடைய பெற்றோரையும் அறிதல் வேண்டும். மாணவர்களின் உதவியைக்கொண்டு ஆசிரியர்கள் எளிதில் பெற்றோர்களின் நட்பைப் பெறலாம்.

நம் பள்ளிக்கூடங்களில் அனேகமாய்க் குழந்தைகளின் பெற்றோர்கள்

இரண்டு தடவைக்கு மேல் பிரவேசித்தல் கஷ்டம். அதாவது 1. பையனைப் பள்ளியில் சேர்க்கும் காலத்திலும் 2. வகுப்பு மாற்றக்காலத்திலுமே யாகும். பின்னர்க் கூறிய காலத்தில்தான் ஆசிரியர்கள் மீது பெற்றோரும் அன்னோர் மீது ஆசிரியர்களும் குற்றங்கள் சுமத்திக் குறைகூறிக் கொள்கிறார்கள். உதாரணமாக ஒரு சம்பாஷணை:—

பெற்றோர்:—என்ன ஐயா! பையன் ஆறுமாச காலமா பள்ளிக்கூடம் வந்து கொண்டிருக்கிறான். ஓரெழுத்தும் வரவில்லையே......

ஆசிரியர்:—(அவசரப்பட்டு) ஐயா! உங்கள் குழந்தை ஆறுமாசத்தில் கணக்கெடுத்துப் பார்த்தால் ஆறு நாள்கள் கூட சரிவரப் பள்ளிக்கூடம் வரா விட்டால் யார்மீதையா தவறு?

இம்மாதிரிப் பேச்சுகள் முதிர்ந்தால் விபரீதம் விளைவது கண்கூடு. எனினும் இவை ஒருபோதும் அறிவாளிகள் செயலாகாது. நிற்க, நாம் பெற்றோர்களின் கடமையை ஆராய்வோம். குழந்தையின் தேகசுகம், குணம், கல்வி, நடையுடை பாவனைகள் முதலிய யாவும் நல்லதாகவோ அல்லதாகவோ அமைவதற்குப் பெற்றோரின் கவனிப்பே காரணமாகிறது. பிள்ளைகளை முற்றிலும் சீர்திருத்தப் பெற்றோர் பள்ளிக்கூடத்தையே பெரிதும் எதிர் பார்த்துத் தங்கள் கடமையை மறந்து வாளாவிருத்தல் தகாது. ஆயினும் பள்ளிக்கூடம் அவர்கள் நினைக்குமாறு தன் கடமையைச் செய்தே வந்தாலும், பிள்ளைகளைச் சீர்திருத்த எடுத்துக்கொள்ளும் பெருமுயற்சி பெற்றோரின் அசிரத்தை, அறியாமை இவைகளால் பெரிதும் தடை படுகிறது. ஆதலினால் அனுபவ ஞானத்திலும் கல்வி யறிவிலும் மிக்க பெற்றோர்கள் தங்களாலியன்ற வரை பள்ளிக்கூட ஆசிரியர்களோடு ஒத்துழைத்துத் தங்கள்—சிறுவர் சிறுமிகளின் முன்னேற்றத்தை நாடி, கல்வியை அபிவிருத்தி செய்ய முன்னிற்கவேண்டும். அதோடு நில்லாது அறியாமை காரணத்தால் ஆசிரியர்களுடன் முரண்படும் தங்கள் சகோதரப் பெரியாரையும் பள்ளிக்கூடத்தோடு ஒத்துழைக்குமாறு தூண்டுதல் நலம். மற்றும் பெற்றோர் கடமைகளை விரிக்கிற் பெருகு மாதலால் அன்னோர் தங்கள் சிறாரின் கல்வி விஷயமாய் ஆசிரியர்களுக்குப் புரியத் தக்க உதவிகள் சிலவற்றை மாத்திரம் பின்வருமாறு கூற விரும்புகிறேன்.

(1) பெற்றோர் தங்கள் குழந்தைகளை கல்வி கற்கும் வயது சமீபித்தவுடன் பள்ளியில் சேர்த்து அவர்கள் தினந்தோறும் பள்ளிக்கு அனுப்புவதில் சிரத்தை பாராட்டல்.

(2) குழந்தைகளுக்குக் கல்வி விஷயமாயுள்ள குறைகளை அவ்வப்போது ஆசிரியரிடம் எடுத்துச் சொல்லல்.

(3) பிள்ளைகளை மாத்திரம் அனுப்பினால் போதுமென்றிராமல் சிறு பெண்களையும் பாடசாலைக்கு அனுப்புதல்.



(4) பள்ளிக்கூட நாட்களில் குழந்தைகளை அகாரணமாய் வீட்டில் நிறுத்திக்கொள்ளாதிருத்தலோடு குழந்தைகள் தாமாக நின்றுவிடுதலைக் கண்டித்து அவர்களைப் பள்ளிக்கு அனுப்புதல்.

(5) பள்ளிக்கூடத்தில் நடக்கும் பாடங்களைக் குழந்தைகள் வீட்டில் தினந்தோறும் படிக்குமாறு செய்தல். பாடங்களில் குழந்தைகளுக்கு உதவி புரிதல்.

(6) குழந்தைகள் ஒரு நாளில், ஏதோ சில மணி நேரங்கள் பாடசாலையில் கழித்தது தவிர பெரும்பகுதியை வீட்டில் கழிப்பதால் பெற்றோர்கள் அவர்களை வெகு ஜாக்கிரதையாகக் கவனித்தல். அதாவது தங்கள் குழந்தைகள் துஷ்ட சகவாசத்திலும் முரட்டுத் தனமான விளையாட்டுகளிலும் ஈடு படாதவாறு கவனித்தல்.

(7) பள்ளிக்கூட விழா காலங்களில் ஆஜராகித் தங்கலாளான உதவிகளைச் செய்தல் (விழாக்கள்:—பள்ளிக்கூட வருஷார்தக் கொண்டாட்ட நாள்;
சுகாதாரவாரம்; கலைமகள்விழா முதலியன.)

(8) தங்கள் குழந்தைகள் கல்வி கற்கும் பாடசாலையில் உள்ள புத்தகக் களஞ்சியத்திற்கு (Library) உதவக் கூடியதாய் நல்ல புத்தகங்கள் பரிசளித்தல். சிறுவர்கள் ஒழிந்த நேரத்தைக் கழிப்பதற்கு அனுகூலமான சில பத்திரி
கைகள், தினசரிகள் இவைகள் வழங்கி உதவுதல்.

(9) அடிக்கடி பள்ளிக்கூடத்திற்கு விஜயம் செய்து பள்ளிக்கூட முன்னேற்றத்திற்கு அனுகூலமான வழிகளை ஆசிரியர்களுடன் கலந்து யோசித்தல்.

(10) விழாக் காலங்களில், நன்றாக வாசிக்கும் பிள்ளைகளை ஆசிரியர் மூலம் விசாரித்து அறிந்து அவர்களுக்குத் தக்க பரிசுகள் வழங்கி அதனால் இதர குழந்தைகள் நன்றாய் வாசிக்குமாறு ஊக்கி உதவி புரிதல்.

இவை போன்று பல உதவிகளைப் பெற்றோர் செய்யக்கூடுமாதலால், கல்வி கற்கும் குழந்தைகள் பற்றிப் பேற்றோர் என்று பன்முறை இவ்வியாசத்தின்கண் கூறப்பட்ட பெரியோர்கள் யாவரும் இனியேனும் குழந்தைகளின் கல்வி அபிவிருத்திக்காகத் தங்களாலியன்ற வரை பாடு படுவார்கள் என்று பெரிதும் விரும்புகிறேன்.

இவை யாவும் இனிது முடிய இறைவன் இன்னருள் புரிவானாக.

---

புதிதாய்க் கல்யாணஞ் செய்துகொண்ட தம்பதிகளிருவரும் இன்னுரையாடிக் கொண்டிருந்தனர். இது வரையில் தனது ஒரு கரத்தை சட்டைப் பைக்குள் மறைத்துக் கொண்டிருந்த கணவன் அதை வெளியே எடுத்து, "கண்ணே! எனக்கு ஒரு கை பாழ்; முன் கையே கிடையாது; உன்னை ஏமாற்றியதைப்பற்றி வருத்தப்படுகின்றேன்."

மனைவி:—அருமைநாத! உங்களுக்கு அந்தக் கவலையே வேண்டாம். உங்கள் அழகிய கரத்தைப் பார்க்கும் பாக்கியம் நான் பெற்றிலேன்.

# ஆத்திசூடி உதாரணக் கதைகள்

(செம்பூர் வித்வான். வீ. ஆறுமுகஞ் சேர்வை.)

(14-ம் தொகுதி 103-ம் பக்கத் தொடர்ச்சி)

## 49. "செய்வன திருந்தச் செய்"

"செய்வன—செய்யும் காரியங்களை, திருந்த—செவ்வையாக, செய்—(நீ) செய்யக் கடவாய்" என்பது இதன் பொருள்.

மனிதர் செய்யும் எந்தக் காரியத்தையும் ஒழுங்குபெறச் செய்தல்வேண்டும்; அப்படிச் செய்தால் மாத்திரமே, நற்பயனையும், புகழையும் அடைவார்கள்; அங்ஙனம் செய்யாவிடின் அக்காரியம் கெடுதலாகவே முடியும்; அவ்விதம் காரியக்கெடுதி நேர்வதனால் அவருக்குப் பலவிதமான கஷ்ட நஷ்டங்களும், உயிர் நிந்தையுமுண்டாகும். செய்வன திருந்தச் செய்யாமையால் துன்பமுற்றார் கதைகள் பலவுண்டு. அவற்றுள் மெய்யாக அனுபவத்தில் நடந்தகதை யொன்றினை உதாரணமாக இங்குக் கூறுவாம்:

ஒரு நகரத்தில் கோபாலன், சாமிநாதன் என்னும் இரண்டு சிநேகிதர்கள் இருந்தார்கள். கோபாலன் சற்று அவசர புத்தியுடையவன்; தான் செய்வதே சரியென்று பேசும் பிடிவாதக்காரன்; தற்பெருமை யுடையவன். சாமிநாதனோ கூரிய புத்தியும், பொறுமையுமுடையவன்; எதையும் பகுத்தறிந்து ஆழ்ந்த யோசனையோடு செய்பவன்; சாந்தமாகப் பேசக்கூடியவன்.

கோபாலன் இடம்ப வார்த்தைகளும், துடிதுடித்த செய்கையுமுடையவனாதலின், முன்பின் யோசியாமல் பலரொடு பழகிப் பல துறைகளில் இறங்கி வர்த்தகம், கண்டிராக்ட் முதலிய தொழில்களைப் பட படப்பாகச் செய்துவந்தான். பலர் அவனுடைய இடம்ப வார்த்தைகளில் மயங்கி அவன் தொழில் செய்வதற்கு வேண்டிய பண உதவி, வாக்கு சகாயம் முதலியவற்றைச் செய்துவந்தார்கள். இது இடம்பத்திற்கு வசப்படுங் காலந்தானே! கோபாலன் அவ்வாறு பலருடைய உதவிகளைப் பெற்றுத் தொழில்களை நடத்தி உருட்டுப் புரட்டுக்களும், மோசநாசங்களும் செய்து ஐம்பதினாயிரம் ரூபாய்க்கு மேல் சம்பாதித்துவிட்டான். அதனால் அவன் செருக்குற்று மோட்டார் சவாரி செய்து அதிகாரிகளை வசப்படுத்தி ஜில்லா போர்டு, தாலுகா போர்டு,



சர சங்கம், ரெயில்வே முதலிய டிபார்ட் மெண்டுகளில் மேலும் மேலும
பலவித கண்டிராக்ட்டுகளை எடுத்துப் பல வேலைகளைச் செய்து வந்தான்.
இக்காலத்தில் இவற்றின் தன்மை எல்லோருக்கும் தெரிந்ததுதானே; அதிகாரி
களுக்கு ஏதாவது தக்ஷிணை சாதித்துவிட்டால் எந்த அனுகூலத்தையும் அவ
ரிடம் பெற்றுக் கொள்ளலாமல்லவா? இந்த முறையில் கோபாலன் ஆயிரம்
ரூபாய் செலவாகத்தக்க வேலையை ஐயாயிரம் ரூபாய்க்குக் கண்டிராக்ட்
எடுத்து அதிலும் ஐந்நூறு ரூபாய் செலவு செய்து அழுத்தமில்லாத வேலையைச்
செய்து முடித்து மேலுக்கு ஒழுங்காகக் காட்டிவிட்டுக் கணக்கு முடித்து
நாலாயிரத்தைந்நூறு ரூபாய் வாங்கித் தலைவர்களுக்குச் சமர்ப்பிக்க வேண்டி
யதைச் சமர்ப்பித்துவிட்டு மீதியைச் சட்டைப்பையில் போட்டுக்கொண்டு
போய்விடுவான். இப்படிச் செய்து வந்ததால் அவனுக்கு மேலும் மேலும்
பணம் சேர்ந்துகொண்டே யிருந்தது. அதனால் செருக்கும் அதிகரித்தது.

சாமிநாதன் சாதுவா யிருந்தபடியால் அவனுக்கு ஐசுவரியம் உண்டாக
வில்லை; இக்காலத்திற்றான் சாதுவை எவரும் சட்டை பண்ணமாட்டார்களே;
அவனுக்கு முப்பது ரூபாய் சம்பளத்தில் ஓர் உத்தியோகம் கிடைத்தது.
அதைக்கொண்டு அவன் இல்வாழ்க்கையை ஒழுங்காக நடத்திக்கொண்டு
இடம்பமின்றி மரியாதையாகக் காலந்தள்ளி வந்தான். அவன், கோபாலன்
அடாச் செயல்களைச் செய்யும்போது சில சமயங்களில் புத்தி கூறுவான்.
கோபாலன், "போ! போ!! உனக்கென்ன தெரியும்; இந்த நியாயங்கள் படித்த
தனால்தான் நீ தரித்திரம் பிடித்தலைகிறாய்" என்று அவன் பேச்சை எடுத்
தெறிந்து பேசுவான். பணச் செருக் குடையாருக்கு அறிவுரை செவியில்
நுழைய மாட்டாதல்லவா?

இப்படி இவர்கள் வாழ்ந்துவருங் காலத்தில், கோபாலன், தனக் கேற்
பட்டிருந்த செருக்கினால் கவர்ன்மெண்டு கட்டிட மொன்று கட்டுவதற்கு
ஐம்பதினாயிரம் ரூபாய் கண்டிராக்ட் என்று எடுத்து வேலை நடத்தினான்.
அந்தக் கட்டிடம் மிகவும் உயர்ந்த கட்டிடம்; கோபாலன் அதற்குத் தக்க அடிப்
படை போடாமல் குறைத்துப் போட்டான்; செலவு சுருங்கவேண்டு மென்
பது அவனுடைய கருத்து. அப்போது சாமிநாதன் அவனைக் கண்டு, "இந்
தக் கட்டிடத்திற்கு அடிப்படை பலமாகப் போடவேண்டும்" என்றான்.
கோபாலன், "உனக்கு இந்த வேலையின் நுட்பந்தெரியாது; நீ எனக்கு யோசனை
சொல்லவேண்டாம்; உன்னுடைய யோசனையைக் கேட்டால் ஒரு பைசா
கூடக் கிடைக்காது" என்று சினந்து கூறித் தன் நோக்கப்படி வேலையை
நடத்திக்கொண்டு போனான். மழைகாலத்தில்கூட வேலையை நிறுத்தாமல்
சுவர்களை மேலும் மேலும் உயரமாக எழுப்புவித்துக் கொண்டு போனான். அப்
படிச் செய்வது அபாயத்திற் கிடமா யிருந்தது. அவனுடைய சிநேகிதனாகிய
சாமிநாதனுக்கு அதனால் அபாய முண்டாகுமென்று நிச்சயமாகத் தெரிந்

தது. அவனால் சும்மா இருந்துவிட முடியவில்லை. அவன், "நம் நண்பன் நம்மைச் சினந்தாலும் நாம் அவனுக்கு வரும் கெடுதியை எடுத்துரைக்காமல் இருக்கக் கூடாது; நம் கடமையை நாம் செய்தே தீரவேண்டும்" என்று நினைத்து அவனிடம் சென்று "கோபாலா! சுவர்களை சாத்தோடு மழைகாலத்தில் உயரமாக எற்றுவது கூடாது; அடிப்படையும் பலமில்லை; வேலையைக் கொஞ்சம் இடையில் நிறுத்தி வைத்துச் செய்; இல்லாவிடில் அபாயமுண்டாகும்" என்று சொன்னான்.

அப்பொழுதும் கோபாலன் அவன் சொல்லைக் கேட்கவில்லை; "சாமிநாதா! நீ சும்மா இருக்கமாட்டேனென்கிறாய்; வேலையைக் கெடுக்காதே; நான் சீக்கிரம் வேலையை முடித்துப் பணம் வாங்கவேண்டும்" என்று வேலையை நடத்திக்கொண்டே போனான். சாமிநாதன் கூறிய மறுநாள் கட்டிட வேலை மிக மும்முரமாக நடந்தது; சுமார் நாற்பது ஐம்பது கொல்லத்துக்காரர்கள் சாரங்கட்டி மிகவும் உயரத்தில் ஏறி வேலை செய்துகொண்டிருந்தார்கள். அந்தருணத்தில் அக்கட்டிடம் அடியோடு இடிந்து தரை மட்டத்தில் வீழ்ந்துவிட்டது; வேலை செய்தவர்களில் முப்பது பேர்வரை மடிந்து போனார்கள்; சிலர் காயமடைந்து பிழைத்தார்கள்.

கோபாலன் என் செய்வான்; பெருந்திகில் அடைந்தான்; மீண்டும் பணச் செலவு அதிகமாகச் செய்யவேண்டியதாய் விட்டது; இறந்தவர் குடும்பத்தார் அவர்கள் இறந்ததற்குக் கோபாலனே காரணகர்த்தா என்று அவன்மீது வழக்கும் தொடுத்துவிட்டார்கள். எல்லாச் சங்கடங்களையும் தீர்த்துக் கொள்வதற்கு அவனுடைய ஆஸ்தியெல்லாம் தொலைந்துவிட்டது; செருக்கும் ஒடுங்கிற்று. சாமிநாதன் கூறியவற்றைக் கேளாதது தவறு என்பதை அதன் பிறகுதான் உணர்ந்தான்.

(தொடரும்)

---

திண்ணைப் பள்ளிக்கூட உபாத்தியாயர் ஒருவர் ஸ்நானஞ் செய்வதற்காக வெந்நீர் தயாரிக்கும்படி சிஷ்யனொருவனுக்குக் கட்டளையிட அவனும் அவ்வாறு செய்து முடித்தான். இடையில் தனது மனைவியின் பிணக்கத்தைத் தீர்க்க அவருக்கு ஒருமணிநேரம் பிடித்தது. பிறகு அதிகாரத்துடன், உபாத்தியாயர்:—"ஏண்டா, முனியா, இவ்வளவு நேரமாகவா வெந்நீர்போட்டாய்? எப்படி யிருக்கிறது வெந்நீர்?"

முனியன்:—"வெந்நீரெல்லாம் தண்ணீரா யிருக்கிறது, ஸார்."

***

மனிதருடைய ஒரு ரோமத்தில் 4 அவுன்ஸ் பாரத்தைக் கட்டித் தொங்க விட முடியுமாம்.

# செய்ந்நன்றி அறிதல்.

(திருவருணை-ஸ்ரீமதி. ருக்குமணி அம்மாள்.)

செய்ந்நன்றி அறிதல் என்பது பிறர் செய்த நன்மையை மறவா
திருத்தல் எனப்படும். இது ஒரு மனிதனுக்கு இருக்க
வேண்டிய குணங்களில் முதலாவது. இந்தச் சிறந்த குணத்தைப் பெற்
றிருப்பவரே மனிதர் எனப்படுவர். அதைப் பெறாதவர் மனித உருவம் தாங்
கிய மிருகமே ஆவர். செய்ந்நன்றி என்பது ஒருகாரணமும் இன்றிச் செய்த
உதவி, தக்கதொரு காலத்தில் செய்த உதவி, ஒரு பயனையும் எதிர்பாராமல்
செய்த உதவி என மூன்றுவகைப்படும். இவற்றுள் ஒருவகையான பிரதிப்
பிரயோஜனத்தையும் எதிர்பாராமல் தாங்களாகச் செய்த உதவிக்கு இம் மண்
ணுலகத்தையும், விண்ணுலகத்தையும் கொடுத்தாலும் சமம் ஆகாது. செய்
யப்பட்ட உதவி தினை அளவு சிறியதாக இருப்பினும் அறிவுடையோர் அத
னைப் பனையளவு பெரிதாகக் கொள்வர். உதவிக்குச் சிறிது பெரிது என்ற
அளவு இல்லை. அவ் வுதவியைப் பெற்றுக்கொண்டவருடைய மனதின் அள
வுப்படியே, அறிவு, ஆற்றல், நன்றி அறியுங் குணம், பரோபகார சிந்தனை
ஆகியவற்றால் அது அளவிடப்படும். ஒவ்வொருவரும் தமக்கு உதவி புரிந்த
வர்களது தொடர்பை விடாதிருத்தல்வேண்டும். தமக்கு சேர்ந்த துன்பங்களை
நீக்கிப் பேருதவி புரிந்தவர்களது நட்பை அறிவுடைய நல்லோர் என்றும்
மறக்கமாட்டார். தீமையை அப்பொழுதே மறந்துவிடுவர். ஒருவர் எப்பொழு
தேனும் ஓர் உதவியைச் செய்திருக்கலாம். பிறகு அவரே ஒரு பெரும் தீமை
யையும் செய்திருக்கலாம். இம்மாதிரியான காலங்களில் அவர் செய்த தீமையை
மறந்து, அவர் புரிந்துள்ள சிறிய உதவியையே மனதில் நினைத்தல் வேண்டும்.
நன்றி அறியும் குணத்தினர் உலகினரால் பெரிதும் கொண்டாடப்படுவர். நன்றி
மறப்பவர் பெரிதும் இகழப்படுவர். எல்லாப் பாதகச் செயல்களுக்கும் பிராயச்
சித்தம் உண்டு. ஆனால் நன்றி மறத்தல் ஆகிய பாதகச் செயலுக்கு பிராயச்
சித்தம் இல்லை. ஆனதுபற்றித்தான்,

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்றார் பொய்யாமொழியாரும். எனவே, நன்றி மறப்பவர் துன்புற்று நலிவர்.
நன்றி அறிபவர் இன்புற்று வாழ்வர். அவர் இம்மையிலே புகழினையும், மறு
மையிலே அழியாப் பதத்தையும் அடைவர். மனைவிமார்கள் தங்கள் கணவ
னிடம் காட்டவேண்டிய நன்றி யாதெனில் அவர் மனம் சற்றும் நோகா
வண்ணம் நடந்து அவரைக் களிப்பிக்கவேண்டியதே. கணவன்மாரும் தங்
கள் மனைவிமாரிடம் அங்ஙனமே நடந்துகொள்ளவேண்டும். பிள்ளைகள்
தம் பெற்றோர்களிடத்தில் காட்டவேண்டிய செய்ந்நன்றியோ பல. அவை
கள் இக்காலத்தில் நலிவுற்றிருப்பதனால், பாடசாலைகளில், உபாத்தியாயர்,
உபாத்தினிமார்கள் நம் நாட்டுச் சிறுவர் சிறுமிகளின் மாசற்ற இரத்தத்தில்
இவ்வறிவு கலக்கும்வண்ணம் செய்யவேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.
நான் காலம் சென்ற என் பர்த்தாவின்பால் கொண்டுள்ள செய்ந்நன்றியைக்
காட்டவே அவர் ஞாபகார்த்தமாய்ச் சிறு கட்டுரையை வரையலானேன்.

# பசுவின் பெருமை.

திருவருணை-ஸ்ரீமதி. பி. எஸ். ராதாபாய் அம்மாள்.

பசு இந்துக்களுக்குத் தெய்வம். முக்கியமாக இந்துக்கள் வீடுகளில் அதிகாலையில் சூரியன் உதிப்பதற்கு முன்னதாகவே தெருக்களிலும், வீடுகளிலும் பசுவின் சாணங்கொண்டு மெழுகிக் கோலம்போட்டுச் செம்மண் பூசப்படுகிறது. பசுவின் சாணியை உருண்டையாகச் செய்து, வெய்யிலில் உலர்த்தி, அதைப் புடம்செய்து, சுத்தமாக வடிகட்டி எடுக்கும் சாம்பல்தான் சிவபக்தர்களால் திருநீறு என்று நெற்றியில் அணியப்படுகிறது. எருமுட்டையை அடுப்பில் போட்டு, அதைச் சாம்பலாகச் செய்து, பல் துலக்குவதற்கும், பாத்திரங்கள் துலக்குவதற்கும் உபயோகம் செய்கிறோம். நமது பிதிர்க்களுக்காகச் செய்யும் சடங்குகளிலும், சுப சடங்குகளிலும் எருமுட்டையை அவசியமாக உபயோகிக்கிறோம். தவிரவும், இந்தப் பசுவின் சாணம், கோமயம், பால், தயிர், நெய் முதலியவைகளைப் பஞ்ச கவ்வியம் என்று இந்துக்கள் கொண்டாடுகிறார்கள். நமது இந்து மாதர்கள் வீடுகளில் பிரசவித்தால் அந்த இடத்தில் கோமயம் தெளித்துப் பிரசவித்தவர்கட்கும் பஞ்ச கவ்வியம் கொடுப்பது வழக்கம். இந்து மதத்தின் ஒரு பிரிவாகிய மத்துவ மதஸ்தர்களும் வருடத்தில் ஒரு நாளாகிய ஆஷாட சுத்த பிரதம ஏகாதசியன்று ஒருவர்கூட தப்பாமல் பஞ்சகவ்வியம் சாப்பிடுவது வழக்கம். ஆனால் "பாழாகப் போனதைப் பசுவின் வாயில்போடு" என்னும் பழமொழிப்படி நமது பசுமாடுகளுக்கு நெற் பயிரில் இருக்கும் நெல்மணிகளை நாம் எடுத்துக்கொண்டு வைக்கோல் துரும்புகளை அதற்குப் போடுகிறோம். அந்த நெல்லைக்குற்றி அதிலிருக்கும் அரிசியையும், உமியையும் நாம் எடுத்துக்கொண்டு அதற்கு வெறும் தவிட்டை மாத்திரம் போடுகிறோம். அந்த அரிசியைச் சுத்தம் செய்த தண்ணீரையும், சாதம் வடித்த கஞ்சியையும் அதற்கு வைக்கிறோம். நல்ல வாழைப் பழத்தின் உள்ளிருக்கும் பாகத்தை நாம் எடுத்துக்கொண்டு தோல்களை மாத்திரம் அதற்குப் போடுகிறோம். நமது நாட்டில் விளையும் பருத்தியை நாம் ஆலைகளுக்கு அனுப்பி நூலாலாகச் செய்து நமது ஆடைகளை அடைகின்றோம். அதில் தங்கிய மீதிக் கொட்டைகளைப் பசுவிற்கு வைக்கிறோம். எள் நிலக்கடலைகளின் சாரமாகிய எண்ணெயை நாம் எடுத்துக்கொண்டு பிண்ணாக்கை அதற்கு வைக்கிறோம். வீடுகளில் கோதுமை அல்வா செய்யும்போது கோதுமையின் பாலை மாத்திரம் எடுத்துக்கொண்டு சக்கையை அதற்கு வைக்கிறார்கள். இவ்வாறு நம்மால் புறக்கணிக்கப்பட்ட வஸ்துக்களை நாம் அதற்குக் கொடுத்தாலும் அது நமக்கு சுத்தமான ருசியுள்ள பாலைத் தருகிறது. அந்தப் பாலை நாம் நமது கடவுளுக்கு அபிஷேகம் செய்யவும், பூஜை செய்யவும் உபயோகிக்கிறோம். அந்தப் பசுவின் பாலினால் நாம் சிறு குழந்தைகளைக் காப்பாற்றலாம். அது நமது தேகத்திற்கு ஒரு நல்ல ஆகாரம் ஆகும். மிகவும் ஆரோக்கியகரமானது. அதை வியாதியஸ்தர்கள் தங்கள் மருந்துகளுடன் சேர்த்துச் சாப்பிடுகிறார்கள். அந்தப் பாலை நன்றாகக் காய்ச்சி அதிலிருந்து தயிர், நெய், மோர், முதலிய வஸ்துக்களை நாம் பெறுகிறோம். இத்தகைய பேருதவி செய்யும் அந்தக் காமுலை நமது இந்துமக்கள்—பணத்தாசை பிடித்த பேய்கள் அந்நிய நாட்டிற்கு—கசாப்புக் கடைகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள்! இது தருமமா?

# வைசூரியைத் தடுக்கும் வழி.

நமது நாட்டில் பெரும்பாலும் வெய்யிற்காலத்தில்தான் வைசூரி என்னும் கொடிய பிணி மக்களை வாட்டத் தொடங்கும். இப்பொழுது எங்கும் இந் நோய் பரவியிருப்பதாகத் தெரிவதால் அதைத் தடுக்கும் வழியைப்பற்றிய இரண்டு அறிஞர்களின் முறைகளைக் கீழே குறிப்பிடுகின்றோம். வாசக நேயர்கள் இம் முறைகளை மற்றவர்கட்கும் எடுத்துரைக்குமாறு விரும்புகின்றோம். ப-ர்.

வைசூரி ஒரு தொத்துவியாதி. நோயாளிகளையும், அவர்கள் வஸ்திரம், படுக்கை, எச்சில் முதலியவைகளையும் தொடுவதாலும், காற்றோட்டமில்லாத அறைகளில் அவர்கள் சுவாசித்த ஆகாயத்தை மற்றவர்கள் சுவாசிப்பதாலும், நோயாளிகளைத் தொட்டு உதவி செய்பவர்களைத் தொடுவதாலும், இந்நோய் பரவுகிறது. நோயானது, ஆரம்ப முதலே மற்றவர்களுக்குத் தொத்தக்கூடியதென்றாலும், சீர்சுரந்து காய்ந்து செதிள் பறக்கும் சமயமே அதிகமாகத் தொத்துகிற காலம். நோய் பத்துநாள் தெரியாவண்ணம் இருந்து, திடீரென்று தோன்றும். கடினமாகு முன் தலைநோய், தலைச் சுற்று, முதுகு, தொண்டை, கைகால் முதலியவற்றின் வலி, காய்ச்சல், தாகம் புலப்படும். இவைகள் முற் குறிகள். குழந்தைகளுக்கு ஜன்னியும் உண்டாகும். இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குப் பின் முத்துத் தோன்றவே, காய்ச்சல் குறையும். அதிக முத்து கடினமான நோய்க்கு அடையாளம். சரீரம் எங்கும் முத்து வியாபித்தாலும், வாய், முகம், நெற்றி, தலை, கை மணிக்கட்டுகள், தேகம் முழங்கைகளிலும் கடைசியில் கால்களிலும் வரும். முத்து நீர் கோப்பதுடன் இரண்டாவது காய்ச்சல் வரும். கடுங் காய்ச்சல், முகத்தில் வீக்கம், கண் மூடுதல், ஜன்னி, வாத ஜுரம்போன்ற குறிகள் உண்டாகி 12, 13 அல்லது 14-ம் நாளில் மரணம் நேரிடலாம்: அல்லது படிப்படியாய் காய்ச்சல் குறைந்து சுகம் உண்டாகலாம்.

நோயில் பலமாதிரிகள் உண்டு:—

1. சுலப வகை. பிரத்தியேகமான சில முத்துக்கள் காணப்படும்.

2. மத்திப வகை. (சேர்ந்த முத்துக்கள்.) முகம், கை, பாதம், இவைகளில் முத்துக்கள் ஒன்றோடொன்று சேர்ந்து காணப்படும்.

3. கடும் வகை (இரத்தப் படலம்.) வெளியில் முத்துக்கள் தெளிவாய்க் காணுமுன் மரணம் உண்டாகக் கூடும். நோய் வளர்ந்துவரும்போது தேகத்தில் புண்கள் வெடித்து ரத்தம் எடுத்தலும், ஜல மலபாதைகள் வழியாய் ரத்தம் கழிதலும் இந்த இனத்தின் அசாத்திய குறிகளாம். கர்ப்பஸ்திரீகளுக்குக் கர்ப்பச் சிதைவோடு அதிக இரத்தப்போக்கும், மற்ற ஸ்திரீகளுக்கு மாதவிடாய் காலத்தில் அதிக இரத்தப் பெருக்கும் ஏற்படுவதால் மரணம் நேரிடும்.

ஜாக்கிரதையாய் வைசூரி குத்திக்கொள்வதாலும், மூன்று வருஷத்துக்கு ஒருதடவை திரும்பிக் குத்திக்கொள்ளுவதாலும் நோயைத் தடுக்கலாம். ஒரு

வேளை நோய் வந்தாலும் உயிருக்கு மோசம் வராது. ஒரு தரம் வைசூரி வந்தவர்களுக்குத் திரும்ப வராது.

வைசூரி நோய்க்கு யாதொரு சிகிச்சையும் இல்லை என்று நமது தேசத்தில் பெருமபான்மையோர் மனதில் பரம்பரையாய் பற்றிப்போனதால், நியாயமான சுகாதார விதிகளைத்தானும் கவனியாமல் விட்டுவிட்டு, அம்மன் விளையாட்டு என்று சொல்லி இருந்துவிடுகிறார்கள். குறிப்பிட்ட சிலரிடம் தான் இந்த நோய்க்கு மருந்து உண்டென்று நம்பி நோயின் குணம் குறிகளைக் கவனியாமல் வைசூரி மருந்து என்று வாங்கிக்கொடுப்பாரும் உண்டு, இது சரியல்ல.

நோய் ஆரம்பித்தவுடன் அதற்கென்று பிரத்தியேகப்பட்ட ஆஸ்பத்திரி உண்டானால் அங்கேயோ அல்லது வீட்டில் பிரத்தியேகமான காற்றோட்டமுள்ள அறைகளிலோ, நோயாளியை வைத்துக் கவனிக்கலாம்.

மிகவும் கடினமான பத்தியம் நோயாளியை பலவீனப்படுத்தும். ஆகையால் தேக பலத்தைக் காப்பாற்றத்தக்கதாக பால், பொடி அரிசிக் கஞ்சி, லேசான காய்கறிகள் கொடுக்கலாம். வயிற்றோட்டமோ, உப்பிசமோ உண்டானல் அதற்குத்தக்க ஆகாரத்தை அறிந்து மாற்ற வேண்டியது.

தலையிலும் முகத்திலும் ரோமத்தைக் கட்டையாய் கத்தரிக்க வேண்டும். வாயையும் கண்களையும் சுத்தமாக வைப்பது மிகவும் அவசியம். நீர் படக்கூடாது என்ற வீண் பேச்சைத் தள்ளிவிட்டு வாயை 4 மணி நேரத்துக்கு ஒருதரம் கழுவி அல்லது கொப்பளித்துச் சுத்தப்படுத்தி மருந்தும் போடலாம். கண்களை அடிக்கடி மருந்து நீர் கொண்டு கழுவிச் சுத்தப்படுத்தி கண் ஒட்டாமல் மருந்து போடுதல் நலம்.

நாடோறும் வெந்நீரைத் துணியில் தோய்த்துத் தேகத்தைத் துடைக்க வேண்டும். சில வேளைகளில் வெந்நீரால் கழுவவும் செய்யலாம். இப்படிச் செய்வதால் கடி, சொறி, நாற்றம், குறைந்து நோயாளிக்குத் தூக்கம் வரும். இலகுவில் உடையாத சிலந்தி, படுவன்களைக் கீறிவிடுவது மிகவும் ஆசுவாசத்தைத் தரும். நோய் சுகமானபின், மற்றவர்களுக்குப் பரவாமலிருக்கும் பொருட்டு நோயாளி 3 வாரம் முதல் 6 வாரம் வரை படுக்கை அறையிலே இருத்தல் அவசியம்.—டாக்டர்-எஸ். அம்ப்ரோஸ்.


## தக்க கஷாய முறை.

வைசூரி என்பது சுரநோய் வகுப்பில் ஒரு பகுதியே ஆகும். தேகத்தில் வேசகாட்டினல் இரத்தம் அதிகம் சூடாவதனல் தோலில் தடிப்பும் கொப்பளமும் உண்டாகின்றன. இதனிடம் பலர் ஒரு தேவதா பக்தி செலுத்தி வருகின்றனர். வைசூரிக்குக் காரணபூதமான மலச்சிக்கலையும், உதிரக் கொதிப்பையும் மாற்றி, வைசூரி உண்டாகாமல் தடுக்கும் கடுக்காய், சூரத்தாமரை, ரோஜா மொக்கு, நெல்லி வற்றல், இவற்றை வகைக்குக் காற்பலம் இடித்துக் கஷாயமாகக் காற்சேர் வீதம் சாப்பிட்டுவந்தால் வைசூரி உண்டாகாது. 8 தினங்கள் காலையில் சாப்பிட்டால் போதும்.

திருவாரூர்-டாக்டர். கண்ணுசாமி பிள்ளை.




## "சுத்த வீரன்"



ராஜா:—"என்டா ராமா! நீ யுத்தகளத்திற்குச் சென்று என்ன செய்தாய்?"

ராமன்:—"இருபது பேர்களுடைய கால்களையும் வெட்டி எறிந்துவிட்டேன் எஜமான்!"

ராஜா :—" சரியான வீரனுக்கு லக்ஷணம் தலைகளை வெட்டுவதல்லவா?"

ராமு:—" அவர்களுடைய தலைகளைக் காணாததினல்தான் நான் கால்களை வெட்டினேன்!"

***

## "மரியாதையுள்ள தம்பி"



அண்ணன்:—(பள்ளியிலிருந்து வரும் தம்பியைநோக்கி) " கோபாலா! இந்த முதல் பரிசு உனக்கு எதற்காகக் கிடைத்தது?"

தம்பி :—" இதுவா? மிகவும் மரியாதையாக நடந்ததற்குக் கிடைத்ததடா மூழு மூண்டம்!"

***

தந்தை:—"என்னடா அது கையில்?"

பையன்:—"எனக்கு எங்கள் வகுப்பில் பரிசு கொடுத்தார்கள்"

தந்தை:—"எதற்காக?"

பையன்:—" கோழிக்கு எத்தனை கால்கள் என்ற கேள்விக்கு-மூன்று கால்கள் என்று விடை கொடுத்ததற்காக!"

தந்தை:—"அட முட்டாளே! கோழிக்கு இரண்டு கால்கள்தானே?"

பையன் :—" மற்ற பையன்கள் நான்கு என்று சொன்னார்கள். நான் மூன்று என்றேன். மற்றவர்களைவிட உன் விடையில் தப்புக் குறைவு என்று எனக்குப் பரிசு கொடுத்தார்கள்"

***

ஒரு முனிசிபல் அறிக்கை:—"இருட்டுவதற்கு முன்பே வண்டிகளின் விளக்குகளை ஏற்றிவிடவேண்டும். விளக்குகள் ஏற்றியபிறகு இருட்டிவிட்டதாக எண்ணிக்கொள்ளவேண்டும்."



"பல் வைத்தியம்"

பல் வலிக்குச் சிகிச்சை செய்துகொள்ள வந்தவர் சாய்ந்துகொண்டு தமது வாயை மிடாவைப்போல் பிளந்துகொண்டார்.

பல் வைத்தியர்:—"ஐயா! நீங்கள் அவ்வளவு தூரம் வாயைத் திறக்கவேண்டியதில்லை, நான் வாய்க்கு வெளியிலிருந்துகொண்டுதான் பல்லைப் பிடுங்குவேன்!"

***

"ஜாக்கிரதை"



தாய்:—"அடே முத்து ஜாக்கிரதை! கையைச் சுத்தியால் அடித்துக்கொள்ளப் போகிறாய்!

முத்து:—"இல்லை அம்மா! எதிர்வீட்டு முருகன்தான் ஆணியைப் பிடித்துக்கொண்டிருக்கிறான்!"

***

நண்பன்:—"நாளைக்குப் பிரயாணம் என்று நினைத்த மாத்திரத்தில் எனக்கு உடனே நோய் வருகிறது"

மற்றவன்:—"ஐயோ பாவம்! ஏன் அடுத்த நாளைக்கு வைத்துக்கொள்ளக்கூடாதா?"

***



"சாதுரியம்"

மாமா:—(தமாஷாக) "அடே சோமு! நீ என்னமோ மணங்கு-வீசை என்று படித்துக்கொண்டிருக்கிறாயே வீசையும் முகத்திலிருக்கும் மீசையும் ஒன்றுதானே?"

சோமு:—"இல்லை மாமா! வீசையைச் சேர்க்கவேணுமானால் ஐந்தால் பெருக்க வேண்டும். மீசையைச் சேரா(று)க்கவேணுமானால் முகத்தைச் சேற்றுக்குள் அமிழ்த்தவேணும்"

***

குப்பன்:—"உனக்கு யாராவது ஏழையாயிருக்கும் பந்துக்கள் இருக்கிறார்களா?"


சுப்பன்:—"எனக்குத் தெரிந்தவர்கள் யாரும் இல்லை."

குப்பன்:—"போகட்டும்! பணக்காரப் பந்துக்கள் இருக்கிறார்களா?"

சுப்பன்:—"என்னை அறிந்தவர்கள் யாரும் இல்லை"



"வாக்குறுதி"



சைக்கிள்காரர்:—" இந்த மோட்டார் சைக்கிளை நான் வாங்கியபோது ஆறுமாதத்திற்குள் ஏற்படும் உடைவு, கெடுதல் முதலியவைகளைத் தாங்கள் சரிப்படுத்திக் கொடுப்பதாகச் சொல்லி யிருந்தீர்களல்லவா?"

ஷாப்புக்காரர்:—"ஆமாம்! இப்போதும் நாங்கள் அதை மறுக்கவில்லையே!"

சைக்கிள்காரர்:—" அப்படியானால் இவ்வண்டியோடு கரணம் அடித்ததில் என் முன் பற்கள் இரண்டும் விழுந்துவிட்டன! இடது கையும் ஒடிந்துவிட்டது! அதற்கு என்ன சொல்லுகிறீர்கள்?"

***



"பிறர் ஜோலிக்குப் போகாதவர்"

வேலைக்காரன்:—(அதிக ஆத்திரத்துடன்) எஜமான்களே! அடுத்த வீட்டில் தீப்பற்றிக்கொண்டது!"

எஜமான்:—"முட்டாளே ஓடிப்போ! என் எதிரில் நில்லாதே! நான் அண்டை அயல் வீட்டுக் காரியங்களில் தலையிடுவதில்லை என்று உனக்கு இன்னும் தெரியாதா?"

## ஐயவினாவிற்கு விடை

சென்ற தை மாத 'ஆனந்தன்' மலரில் ஸ்ரீமதி. பண்டிதை ரா. ரங்கநாயகி அம்மையார் அவர்கள் விடுத்த ஐயவினாவைக் கண்ணுற்றேன். குரங்குக்கும் சிரங்குக்கும் சிலேடை கூறும் வெண்பாவில் 'குரங்கு சொறிந்தால் தினவையெடுக்கும்' என்று குறித்தேன். வீட்டிற் பழகும் குரங்குகள், வளர்ப்போரது தலையைச் சொறிந்தும், முதுகைச் சொறிந்தும் தினவைத் தீர்த்தலுண்டு. இவ்வாறு தினவைப் போக்குதலால் 'தினவை எடுக்கும்' என்று பொருள் கூறினேன். பண்டிதை அம்மையார் கூறுமாறு பொருள் கொள்ளினும் பொருந்தும். இனி, சில பாக்களில் தளை சிதைவுற்றிருத்தலைக் குறித்து ஒன்று சொல்ல விரும்புகிறேன். அழகிய சொக்கநாதர் பாடிய கவிகளடங்கிய கையெழுத்துப் பிரதி யொன்று சில மாதங்களுக்கு முன் எனக்குக் கிடைத்தது. அச்சுப்பிரதியிலிருந்து எடுத்தெழுதப்பட்ட கையெழுத்துப் பிரதியில், எழுதியவர் ஏட்டைக் கெடுத்திருத்தலும் கூடுமாதலால் உண்மைப் பாடத்தைக் குறித்து உறுதியாக ஒன்றும் சொல்வதற்கில்லை. அச்சுப்பிரதி கிடைக்குமாயின் ஆராய்ந்து பண்டிதை யம்மையார்க்கும் ஆனந்தன் அன்பர்களுக்கும் அறிவிப்பேன்.

ரா. பி. சேதுப் பிள்ளை, பி.ஏ., பி.எல்.




கனவான்கள் சங்கம்:—ஐரோப்பாவில் செர்வியா நாட்டில் பெல்க்ரேட் நகரில் கனம் (சரீரத்தில்) உள்ளவர்கள் சங்கம் ஒன்று ஏற்பட்டிருக்கிறதாம். அவர்கள் 16 ஸ்டோன் (ஒரு ஸ்டோன் 14 ராத்தல்) எடையில் குறைந்தவர்களைத் தங்கள் சங்கத்தில் சேர்ப்பதில்லையாம்.

***

செயற்கை மாமிசம்:—இப்பொழுது ஆடு, மாடு, கோழி முதலியவற்றின் மாமிசங்களை ரஸாயன முறையில் தயாரிக்கும் விதத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்களாம். அமெரிக்காவிலுள்ள ராக்பெல்லர் ரசாயனச் சாலையில் கோழி மாமிசம் செய்யக் கண்டுபிடித்துவிட்டார்களாம்.

***

ஒரு அழகியின் அதிருஷ்டம்:—வெராகொராய்ஸ் என்ற பெயருள்ள ஒரு ருமேனியப் பெண் மிகுந்த அழகி என்று பாராட்டப் படுகிறாள். ஒவ்வொரு வியாபாரியும் அவளுடைய அழகிய முகத்தைத் தம் பொருள்களின் விளம்பரம்போடும்போது பக்கத்தில் வெளியிடுகின்றார். ஆகையால் ஒவ்வொரு விளம்பரக்காரர்களிடத்திலிருந்தும் அவளுக்கு 20 பவுன் விகிதம் கிடைக்கின்றது. இத்தொகை பல ஆயிரங்களாகுமாம்.

***

அணையா நெருப்பு:—கம்பாலாவிலிருக்கும் உகந்தாப் பிரதேசத்து அரசர் அரண்மனையின் வாயிலில் ஒருபோதும் அணைந்துபோகாத தீ ஒன்று எரிக்கப்படுகின்றதாம். ஒரு அரசர் இறந்தால்தான் அத்தீ அணைக்கப்படுகின்றதாம்.

***

புத்திர பாக்கியம் பெற்ற மடந்தை:—ரொட்ரீக்ஸ் என்ற 24 வயதுடைய பெண் சமீபத்தில் தனது பதினான்காவது குழந்தையைப் பெற்றிருக்கிறாள். அவளுக்கு மெக்ஸிகோவில் கலியாணமானபொழுது வயது 13. அவள் பெற்ற பிள்ளைகளில் இரட்டைப் பிள்ளைகள் மூன்று ஜோடி. மற்றவை தனிப் பிள்ளைகள்.

***

கிழட்டுத் தம்பதிகள்:—லண்டன்மா நகரில் வசிக்கும் தம்பதிகட்குள் மிஸ்டர் வாக்கரும் அவரது மனைவியுமே அதிக வயதானவர்கள். அவர்கள் சமீபத்தில் தான் தங்கள் 75-வது விவாக ஜூபிலியைக் கொண்டாடினார்கள். மிஸ்டர் வாக்கருக்கு இப்பொழுது வயது 94. அவரது மனைவிக்கு 93 வயதாகிறது. அவர்களுடைய இளைய மகனுக்குத் தற்போது 75 வயதாகிறது. அவரும் பெற்றோருடனேயே வசித்து வருகிறார்

# ஆசிரியர் குறிப்புக்கள்.

## கைப்புண்ணுக்குக் கண்ணாடியா?

சென்னை சட்டசபையில் இதுகாறும் எத்தனையோ பிரச்சினைகள் தீர்க்கப்பட்டிருக்கின்றன—மசோதாக்கள் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன. ஆனால் சி. வகுப்புக் கைதிகட்கு மோர் கொடுக்கும் விஷயம் மாத்திரம் நீண்ட காலமாக வெகு சிக்கலான தோரணையில் விவாதிக்கப்பட்டு வருவது வெட்கக் கேடாயிருக்கிறது. முன்னர் இரண்டு மூன்று முறை சட்டசபை அங்கத்தினர்கள் இதைப்பற்றிக் கேள்வி கேட்டார்கள். சட்ட அங்கத்தினர் ஸர். கிருஷ்ணன் நாயர் அவர்கள் கைதிகட்கு மோர் அவசியம் என்று தெரியவில்லை என்ற பதிலையே கொடுத்திருந்தார். சென்ற மாதச் சட்டசபைக் கூட்டத்திலும் இதே விடையைத்தான் கொடுத்தார். அங்கத்தினர்கள் மோர் மிகவும் இன்றியமையாத உணவுப் பொருள் என்றும், போகப் பொருள் அல்ல என்றும் எவ்வளவு எடுத்துக் காட்டினாலும் சட்ட அங்கத்தினர் லட்சியம் செய்வதாகத் தெரியவில்லை. மோர் இன்மையால் பல கைதிகள் நோய்வாய்ப் பட்டுக் கொண்டு வருகிறார்கள் என்று அடிக்கடி பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகளைச் சட்ட அங்கத்தினர் அறியாரா என்று கேட்கின்றோம்? குற்றவாளிகட்குச் சிறைகளில் அவர்கள் உயிர்தாங்கவேண்டிய பொருளையும் கொடுக்கக்கூடாது என்று எந்தச் சட்டமும் கூறும் என்று நாம் நம்பவில்லை. நமது நாட்டுக்கு மோர் இன்றியமையாத உணவுப் பொருள் என்று வைத்திய சாஸ்திரங்கள் மட்டுமல்ல—இக்கால அறிஞர்களும் ஆராய்ந்து வெளியிட்டிருக்கிறார்கள். எந்தப் பதார்த்தம் இல்லாவிட்டாலும் மோர் ஒன்றினாலேயே பல்லாயிரக் கணக்கான ஏழை மக்கள் வயிறு குளிர உண்டு திருப்தி அடைந்துவிடுகிறார்கள். இவ்வுண்மையை மலையாளத்தில் பிறந்து வளர்ந்த சட்ட அங்கத்தினர் அறியாவிடினும் மற்றவர்கள் கூறுவதையேனும் ஒப்புக்கொள்ள வேண்டும். ஸர். கிருஷ்ணன் நாயர் தென்னாட்டு மக்கட்கு மோர் அவசியமில்லை என்று எப்படித் தெரிந்துகொண்டார்? அரசாங்கத்தார் ஏதேனும் விசாரணை செய்தார்களா? இல்லை என்பதை அவரே ஒப்புக் கொண்டுவிட்டார். ஆனால் இந்தத் தடவை அவரது பதிலில் ஒரு விசேஷம்! அரசாங்கத்தார் தங்கள் கருத்தை மாற்றிக் கொள்ளுவதைப்பற்றி ஆலோசிப்பார்கள் என்று கூறியிருக்கிறார். எல்லோருக்கும் சர்வ சாதாரணமாய்—அநுபவத்தில் தெரிந்துள்ள இவ்விஷயத்தில் இவ்வளவு சந்தேகங்கட்குச் சட்ட அங்கத்தினர் இடங்கொடுத்து விட்டதிலிருந்து அதிகார வர்க்கத்தினரின் போக்கு என்ன என்பது இனிது விளங்கும் என்று நம்புகிறோம். அரசாங்கத்தார் தென்னாட்டு மக்கட்கு மோர் கொடுக்கும் விஷயத்தை "ஆலோசனை" செய்வதாகக் கூறுவது கைப்புண்ணைப் பார்க்க கண்ணாடி வேண்டிய கதையை ஒக்கும்.

## சென்னை நகரசபைத் தலைவருக்கு மேயர் பட்டம்

சென்னை கார்ப்பொரேஷன் தலைவர் இதுகாறும் பிரஸிடெண்டு என்ற பேரால் அழைக்கப்பட்டு வந்தார். சென்ற மாதம் சட்ட சபையில் இனிமேல் அவர் மேயர் என்று அழைக்கப்பட வேண்டும் என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இப்பொழுது அப்பட்டம் வகிக்க உரிமை

வாய்ந்தவர் செட்டி நாட்டுக் குமாரராஜா ஸ்ரீமான் எம். ஏ. முத்தையா செட்டியாராவார். மேயர் பட்டம் பெற்று விளங்கும் இளைஞர் ஸ்ரீ. முத்தையா செட்டியாரவர்கள் புதிய உற்சாகத்துடன் நகர நலத்தைக் கவனிப்பார் என்று நம்புகின்றோம்.

## வெண்ணெய் வெட்டி சிப்பாய்கள்

சென்ற மாதம் 3-ந்தேதி வியாழக்கிழமை பகல் ஒரு மணி சுமாருக்குச் சென்னை சட்டசபை நடந்துகொண்டிருந்தபோது யாரோ சில 'காங்கிரஸ் தொண்டர்கள்' பட்டாஸ் வெடியைக் கொளுத்திச் சபைக்குள் வீசினர் என்றும், யூனியன்ஜாக்கைக் கொளுத்தினர் என்றும், பகிஷ்காரக் கூச்சல்களையும் புரட்சிக் கூச்சல்களையும் செய்தனர் என்றும் அறிந்து வருந்துகின்றோம். இத்தகைய துஷ்ட சுபாவம் வாய்ந்தவர்கள் காங்கிரஸ் பேரைச் சொல்லிக் கொண்டு அதன் புனிதத் தன்மைக்குப் பங்கம் உண்டாக்குவது மகா பாதகம் ஆகும் என்பதை நாம் விரிக்கவும் வேண்டுமா? இத்தகைய "பட்டாஸ் வீரர்"களை வெண்ணெவெட்டி சிப்பாய்கள் என்னுமல் வேறு எம்மொழியால் அழைப்பது?

## காமாலைக் கண்ணர்

கல்கத்தா "ஸ்டேட்ஸ்மென்" பத்திரிகாசிரியர் ஸர். ஆல்பிரட் வாட்ஸன் என்பவர் இப்பொழுது விடுமுறையில் இங்கிலாந்தில் தங்கியிருக்கிருர். இவர் சமீபத்தில் ஒருவிருந்தில் பேசியபோது,

"உலகிலேயே காந்திதான் பிற்போக்கான மனிதர். அவருடைய கொள்கையால் பாதி ஜனங்கள் பட்டினியாலும் பஞ்சத்தாலும் வருந்த நேரும் என்பதில் ஐயமில்லை. இந்தியாவில் முதலாளிகளின் ஆட்சியை ஸ்தாபிப்பதே காந்தியின் கொள்கை. அதனுலேயே மில் முதலாளிகளும் பணக்காரர்களும் அவரை ஆதரிக்கிருர்கள். வங்காளத்தில் ஜமீன்தார்கள் தங்கள் தங்கள் ஊர்களை விட்டுக் கல்கத்தாவில் வந்து தங்கி விவசாயிகளைப் பிழிந்து விடுகிருர்கள். கைத்தொழில் முதலாளிகளிடம் இந்திய அரசியலை ஒப்புவிப்பது பேராபத்து. ஆகையால் இந்தியாவில் கல்வி பரப்பவேண்டியது அவசியம்"

என்று குறிப்பிட்டிருக்கிருர். காங்கிரஸையும் காந்தியடிகளையும் தூற்றுவதே தொழிலாகக் கொண்ட இவரது பேச்சை மதித்து வியாக்யானம் செய்ய நாம் விரும்பவில்லை. உலகத்தாரால் ஏழை பங்காளர் என்று காந்தியடிகள் போற்றப்படுகிருர். இத்தகைய பெரியார் ஸர் வாட்ஸன் திருஷ்டியில் எவ்வாறு காணப்படுகிருர் என்பதை எடுத்துக் காட்டவே அவருடைய பேச்சை எடுத்துக் காட்டினேம். காமாலைக் கண்ணருக்குக் கண்டதெல்லாம் மஞ்சள் தானே. இவருடைய பேச்சைக் கண்டு மயங்குபவர்கள் லண்டனில் யாரேனும் சிலர் இருக்கலாம். ஆனுல் உலகம் சர். வாட்ஸனுக்குப் பைத்தியக்காரப் பட்டம் கட்டும் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை.

## சபாஷ் மத்திய மாகாணம்!

மத்திய மாகாண அரசாங்கத்தார் சட்டசபையில் அரசாங்கச் செலவில் கட்டப்பட்ட ரஸ்தா, பாடசாலை, நந்தவனம், மார்க்கட்டு, சத்திரம், சுடுகாடு, நதி, கிணறு, குளம் முதலிய இடங்களில் ஜாதி வித்தியாசம் காட்டக்கூடாது என்றும், யாராவது தடுத்தால் அவர்கட்கு ஐம்பது ரூபாய் வரை அபராதம் போடப்படும் என்றும் ஒரு சட்டம் நிறைவேற்றியிருக்கிருர்கள். மற்ற



மாகாண அரசாங்கங்களும் இவ்வாறு செய்யவேண்டும் என்பதே எமது வேட்கையாகும். சமீபத்தில் பம்பாய் அரசாங்கத்தார் தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வி விஷயத்தில் ஜாதி வேற்றுமையை ஒழித்திருப்பதும் குறிப்பிடத் தக்கதாகும். தீண்டாதவர்களுடன் சரி சமமாக உட்கார்ந்து வாசிக்க இஷ்டமில்லாத பிள்ளைகளின் பெற்றோர்கள் தங்கள் சொந்தச் செலவில் வேறு பள்ளிக்கூடங்களை ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும் என்பது பம்பாய் சர்க்காரின் கட்டளை.

## திரிச்சி சமதர்ம ஆச்சிரமம்

திரிச்சியில் சமதர்ம ஆச்சிரமம் ஒன்று ஏற்பட்டிருப்பதாகவும், அதன் நோக்கம் சமதர்மக் கொள்கைகளைப் பரப்பிச் சமத்துவத்தை நிலைநாட்டுவது என்பதாகவும் வெளிவந்த செய்தியை அறிந்து மகிழ்ச்சிப்பெருக் கடைகின்றோம். முன்னர் சேரமாதேவியில் ஸ்ரீ. வ. வெ. சு. ஐயரால் நிறுவப்பட்ட குருகுலம் உயர்வு தாழ்வு பாராட்டிய காரணத்தால் நிலைகுலைந்தது. திரிச்சி சமதர்ம ஆச்சிரமம் இளைஞர்களிடையே சமதர்ம உணர்ச்சியை ஊட்டிப் பல்லாண்டு வாழவேண்டுமென்று விரும்புகின்றோம்.

## மதுரையில் விபசாரத் தடைச் சட்டம்

சென்னைமாநகர அளவில் நின்ற விபசாரத்தடைச் சட்டம் இப்பொழுது மதுரையிலும் அமலுக்கு வந்திருப்பதை அறிந்து மகிழ்கின்றோம். சென்னைக்கு அடுத்தபடியாக மதுரையில் விபசாரிகளின் தொல்லை அதிகம் என்பதை எல்லாரும் அறிந்திருக்கலாம். இதுபோலவே ஸ்ரீரங்கம் முதலிய க்ஷேத்திரங்களிலும், ஜில்லாத் தலைநகரங்களிலும் இச்சட்டம் அமலுக்கு வரவேண்டும் என்பது எமது வேண்டுகோள். இப்பொழுதுள்ள விபசாரத் தடைச் சட்டம் நாட்டினின்றும் விபசாரத் தொல்லையை அடியோடு ஒழித்து விடாதாயினும், ஓரளவுக்கு—ஒன்று மறியாத இளம் பெண்களைக் காக்கவும், தெருக்களில் அருவருப்புக் காட்சிகளும் சண்டைகளும் நிகழாமல் பார்த்துக் கொள்ளவும் இச்சட்டம் உதவி புரியக்கூடும் என்பதே நமது கருத்து. ஆகையால் எல்லா நகரங்களிலும் இச்சட்டம் நடைமுறையில் வரவேண்டும் என்று ஆசைப் படுகின்றோம்.

## டிவேலராவின் வெற்றி

ஐரிஷ் பொதுத்தேர்தலில் டிவேலரா கட்சிகுப் பெரும்பான்மையான ஸ்தானங்களுடன் கூடிய வெற்றி கிடைத்திருக்கிறது. ஐரிஷ் டெயில் சபையில் அவரது கக்ஷிக்கு 77-ஸ்தானங்களும் காஸ்கிரேவ் கக்ஷிக்கு 48-ஸ்தானங்களும் கிடைத்திருக்கின்றன. மீண்டும் டிவேலரா ஸ்வாதீன அயர்லாந்தின் அரசியல் தலைவராவார். இவருடைய வெற்றியால் அயர்லாந்துக்கு அதிக நன்மையுண்டா இல்லையா என்பது வேறு விஷயம். ஐரிஷ் மக்களின் நன்மதிப்புக்கு அவர் பாத்திரராக விளங்குகிருர் என்பதே இப்பொழுது முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம். ராஜவிசுவாசப் பிரமாண நீக்கம், வருஷாசனத் தொகை நீக்கம், ஏகாதிபத்திய நீக்கம்ஆகிய இம்மூன்று விஷயங்களையும் அடிப்படையாகக் கொண்டே இத் தேர்தல் நடைபெற்றது. இதுகாறும் தங்கள் கொள்கைக்கு ஆதரவு இருப்பதாகச் சொல்லிக்கொண்டிருந்த காஸ்கிரேவ் கக்ஷியினரும் பிரிட்டிஷாரும் இனிமேல் என்ன செய்வார்கள் என்று தெரியவேண்டும்.




# நீல அறையின் மர்மம்.

(எஸ். எஸ். வாஸன்.)

(559-ம் பக்கத் தொடர்ச்சி.)

அவர்கள் பேசியதைக் கேட்டு நான் பாலாமணியம்மாளைப் பார்த்து "பல்லாவரத்தில் என்ன விசேஷமோ?" என்று கேட்டேன். என்னுடைய கேள்விக்குப் பதில் சொல்லுகிறார்களோ அல்லது அலட்சியமாக இருந்துவிடுகிறார்களோ என்று பயந்து கொண்டிருந்தேன். ஆனால் அவர்கள் என்னைக் கொஞ்சங்கூட அலட்சியம் செய்வதாயில்லை. நான் கேட்ட கேள்விக்கு என்னைப் பார்த்து பாலாமணியம்மாள் "பல்லாவரத்தில் விசேஷமான சங்கதி யொன்றுமில்லை. சிநேகித விஷயமாய்ச் சில நாட்கள் அங்கே இருந்துவிட்டு வரலாமென்றிருக்கிறோம். பல்லாவரம் மாசிலாமணி முதலியாரென்று நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாமே? அவருடைய மனைவி சரஸ்வதியம்மாளை யெனக்கு நிரம்பத் தெரியும். இங்கிருப்பதை விட அங்கிருந்தால் பொழுது வேடிக்கையாய்ப் போகும்" என்றாள். உடனே நான் "அங்கே எத்தனை நாட்களிருப்பீர்களோ?" என்று கேட்க "பதினைந்து நாட்களிருந்தால் அதிகம்" என்று விடையளித்தாள்.

பிறகு பாலாமணியம்மாள் மாசிலாமணி முதலியாரின் குணத்தைப் பற்றியும் எப்படி அவருக்கும் தன்னுடைய கணவனுக்கும் நட்பு உண்டாயிற்று என்பதைப் பற்றியும் வெகுவாய்ப் பேசத் தொடங்கினாள். நான் யாதொன்றும் பேசாமல் பாலாமணியம்மாள் சொல்லிக்கொண்டிருந்ததை மட்டும் கவனித்துக்கொண்டிருந்தேன். இப்படியாக ஒரு மணி நேரங்கழிந்துவிட்டது.

கோகிலம் (அவள் கோகிலமே யல்ல; இருந்தாலும் கோகிலமென்றே தற்சமயம் சொல்ல வேண்டியதா யிருக்கிறது)—அந்தத் தோகை மயிலாள் தன் அத்தையம்மாளைப் பார்த்து "நேரமாகி விட்டதே! இனி நாம் புறப்படுவதற்குள் அரைமணி நேரமாகி விடும். அப்பால் இங்கிருந்து இரயில்வே ஸ்டேஷனுக்குப் போகவேண்டும்" என, பாலாமணியம்மாளும் "ஆம்! நேரமாய் விட்டது. இதோ வந்துவிட்டேன்" என்று தன் நாற்காலியை விட்டெழுந்தாள்.

எனக்கு, நான் காதல்கொண்ட மின்னற் கொடியின் முன்னரே யெப்பொழுதும் இருக்க ஆசையா யிருந்தது. கோகிலத்தை விட்டுப் பிரிய எனக்குக் கொஞ்சங்கூட இஷ்டங் கிடையாது. ஆனாலும் நான் என்ன செய்யக் கூடும்? அவ்விருவரும் வீட்டைவிட்டு வெளியே செல்வதால் நான் எனக்கு



இஷ்டமில்லாமலேயே அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு வெளியே சென்றேன்.

கோகிலத்தைக் கூப்பிட்டு அவளிடமிருந்து உண்மையைக் கேட்டறிந்து கொள்ளவேண்டுமென்று என் மனம் எண்ணிய போதிலும் இதற்குப் போதுமான தைரியம் என்னிடங் கிடையாது. மேலும் முதலாக, இவள்தான் என் மனைவி மீனாளோ வென்பதை நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டும்; அப்பால் இறந்தவர்கள் பிழைப்பதும் உண்டோ என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும்?.........என்ன விந்தை! ஒரு டாக்டராகிய நானே இந்த முட்டாள்தனமான கேள்வியைக் கேட்டுத் தக்க பதில் அறிந்து கொள்ள வேண்டியதாய் விட்டது.

அன்புடைய நேயர்களே! நான் கூறுவதெல்லாம் நீங்கள் நம்ப முடியாத விஷயங்களாகவே யிருக்கின்றன. இருந்தாலும் இன்றைய தினம் நான் என் மனைவியுடன் பேசி யிருக்கிறேன். நான் யார் என்று அவளுக்குத் தெரியாது. நாங்கள் ஒருவரை யொருவர் அன்னியராகவே பாவித்துப் பேசினோம்; ஆயினும் நாங்கள் யார்?

உலகத்தில் இப்பேர்ப்பட்ட அதிசய சம்பவங்களும், இரகசிய விசேஷங்களும் மர்மங்களும் நடைபெறுகின்றன என்று அநேக நாவல்களில்தான் நான் படித்ததுண்டு. ஆனால் இம்மாதிரியெல்லாம் உண்மையாகவே—அதிலும் என் விஷயத்திலேயே நடைபெறுமென்று நான் கனவில்கூட கருதினவனல்லன். எனது கலியாண மர்மத்தைப் பற்றியும், எனது மனைவி கொல்லப்பட வேண்டியதற்காக பூர்ணலிங்க முதலியார் எனக்கு 20,000 ரூபாய் கொடுப்பதாகச் சொன்ன அதிசயத்தைப்பற்றியும் எல்லாவற்றையும்விட இறந்த என் மனைவியாள் பிழைத்த ஆச்சரியத்தைப் பற்றியுமே என் மனம் சிந்தித்துக்கொண்டிருந்தது.

மிகச் சூழ்ச்சியான ஆபத்தில் நான் சிக்கிக்கொண்டிருக்கிறேனென்பதில் கொஞ்சங்கூட சந்தேகமில்லை. மேலும் நான் சென்னைக்குத் திரும்பிவந்துவிட்டது என்னுடைய விரோதிகளுக்குத் தெரிந்திருக்கவேண்டுமென்றே யெனக்குத் தோன்றியது. ஆகவே நான் வெகு ஜாக்கிரதையாகவும் தந்திரமாகவும் இவ்விஷயங்களில் துப்புக் கண்டுபிடிக்க வேண்டும். எப்படியாவது எனது விரோதிகள் பூர்ணலிங்க முதலியார், சபாபதி முதலியார் இவ்விருவரையும் கண்டுபிடித்தல் வேண்டுமென்றும் இவர்கள் எனக்கு ஆபத்தையுண்டு பண்ணின அந்த மர்ம வீட்டையும் அறிந்துகொள்ள வேண்டுமென்றும் தீர்மானங்கொண்டேன்.

மீனாள் இறத்தல்வேண்டும் என்றே பூர்ணலிங்க முதலியார் பிரயாசைப்பட்டார். ஆனால் அதிர்ஷ்டவசமாகவே அவள் தற்சமயம் உயிருடனிருக்கிறாள்! ஆனால் அவளுக்கு இந்த அற்புத விஷயங்களெல்லாம் தெரியாது போல் தோன்றுகிறதே அதிக ஆச்சரியத்தை யுண்டுபண்ணுகிறது.

ஆழ்ந்த யோசனையுடன் நான் லிங்க செட்டித் தெருவிலுள்ள என் நண்பன் மருந்துசாலைக்கு வந்து சேர்ந்தேன். அங்கு என்னை எதிர்பார்த்துக் கொண்டு வாயிற்படியில் என் நண்பன் ஜகந்நாதன் இருக்கக் கண்டேன். என்னைக் கண்டதும் அவன் "என்ன லோகநாதா! நீ இவ்விடம் இல்லை யென்பதாக எனக்குக் கடிதம் வந்ததே! எங்கேதான் போயிருந்தாய்?" என்று ஆச்சரியப்பட்டுக் கேட்க நான் நிதானமாக வெளியூருக்குப் போயிருந்தேனென்

றேன். "வெளியூருக்கா? எந்த ஊருக்கு? என்ன விசேஷம்?" என்று அவன் ஆவலுடன் அடுத்துக் கேட்டபடியால் நான் "எல்லாம் சாவதானமாய்ச் சொல்லுகிறேன், மெத்தைக்குப் போகலாம் வா" என்று சொல்லி யழைத்துக்கொண்டு மெத்தை யறைக்குச் சென்றேன். பிறகு ஆதிமுதற்கொண்டு அந்தம்வரையில் எனக்கு நடந்தவைகளனைத்தையும் ஜகநாதனுக்குத் தெரிவித்தேன்.

நான் சொல்லியதை யெல்லாம் தாங்கமுடியாத ஆச்சரியத்துடன் கேட்ட பின்னர் ஜகந்நாதன் என்னைப் பார்த்து "லோகநாதா! நீ சொல்லுவதைப் போல் நான் பார்த்ததுமில்லை, கேட்டதுமில்லை. உண்மையில் உனக்குக் கலியாண மாய்விட்டதென்றா சொல்லுகின்றாய்?" என்றான்.

நான்:—நேரான கலியாணமே நடந்தேறியது. கோவிலில் ஸ்வாமி ஸந்நிதானத்தில் பிராமணர் வந்து நடத்தி வைத்தபடியால் கலியாணம் சாஸ்வதமானதே. இதில் எல்லாவற்றையும்விட அற்புதம் என்னவென்றால் எனக்கு என் மனைவியைத் தெரிந்திருக்கும்பொழுது என் மனைவிக்கு என்னைத் தெரியவில்லை.

ஜகந்நாதன்:—அந்தக் கொடியவன் பூர்ணலிங்கம் கொலை செய்வதில் நிரம்ப கைதேர்ச்சி யுடையவன். உன் மனைவியை வெகு தந்திரமாகக் கொலை செய்திருக்கிறான். அவளுடைய கண்ணிலுள்ள கறுப்பு விழி சிறிதாய்ப் போனதே இதற்கு அத்தாட்சி.

நான்:—ஆம்; அவளுடைய இடதுபுறக் கண்ணில் மாத்திரமே இந்த விசேஷம் தென்பட்டது.

ஜகந்நாதன்:—அப்படி நீ பார்த்திருந்தும் இன்று நீ கண்ட பெண்ணின் கண்களில் அந்த விசேஷங் கிடையாது?

நான்:—இன்று நான் பார்த்த மங்கைதான் எனக்குக் கலியாணஞ் செய்து கொடுக்கப்பட்டவள்! இது நிச்சயம்! சத்தியம்!—என்று வீராவேசமாய்க் கூறினேன்.

ஜகந்நாதன்:—லோகநாதா! நீ சொல்லுவதுபோல் எப்படி யிருக்கக் கூடும்? நீ கூறுவதுபோல் அவளிறந்தவளாயின், இப்பொழுது நீ பார்த்தது போல் அவள் உயிருட னிருக்கமுடியாதே!...கொஞ்சங்கூட சாத்தியமான விஷயமாகக் காணப்படவில்லையே?

நான்:—அசாத்தியமான விஷய மென்பதற்கு ஆக்ஷேபணை யில்லை. ஆயினும் நான் சொல்லுவதில் தப்பிதங்கிடையாது! நான் மணஞ் செய்து கொண்டவள் என் கண் முன்னே இறந்து கிடந்தாள். ஆனாலும் இன்று அவளை உயிருடன் கண்டேன். அவளுடன் பேசவும் பேசினேன்.

ஜகந்நாதன்:—என்ன ஆச்சரியம்! என்ன ஆச்சரியம்!! இதைப்போன்ற அற்புதத்தை யாரும் கண்டதுமில்லை; கேட்டு மிருக்கமாட்டார்கள். நீ மீனாளைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்று அம்மனிதர்கள் உன்னைத் தூண்டியதற்கு ஒரு முக்கியமான காரண மிருத்தல்வேண்டும். இல்லாதபட்சத்தில் அந்தப் பூர்ணலிங்கம் உனக்கு ஒருபோதும் 20,000 ரூபாய் கொடுக்கச் சம்மதியான். முதலில் அவளைக் கலியாணஞ் செய்துகொடுத்துவிட்டுப் பிறகு அவளைத் தொலைத்துவிடவே எத்தனித்திருந்தான். இதன் காரணங்க



ளெல்லாம் நமக்குப் பிற்காலம்தான் தெரியும். மேலும், லோகநாதா! எனக்குத் தோன்றும் சந்தேகம் என்னவென்றால் இந்த மர்மத்தில் பாலாமணி யம்மாளும் சம்பந்தப்பட்டிருக்க வேண்டும். என்ன? உன் அபிப்பிராயம் எப்படி?

நான்:—ஆம்! ஜகந்நாதா! எனக்கும் அந்தச் சந்தேகம் உண்டு.

ஜகந்நாதன்:—இது போகட்டும்; இந்த கோகிலம் என்பவளை உண்மையாகவே நீ காதலிக்கின்றனையா?

நான்:—நண்பா! என்ன பைத்தியக்காரனைப்போல் கேட்கின்றாயே? அவள் என் மனதைக் காந்தம்போல் கொள்ளை கொண்டு விட்டாள். அவளின்றி எனக்கு இவ்வுலகத்தில் வேறு சுகங் கிடையாதென்பதை நீ நிச்சயமாய் நம்பு!..... அவளைப் போன்ற வசீகரமான அழகுடைய மங்கை நான் இது வரையில் பார்த்ததுமில்லை; இனிப் பார்க்கப்போவதுமில்லை—என்றேன்.

இரண்டொரு நிமிஷங்களுக்கு மௌனமா யிருந்த பின்னர் என் நண்பன் என்னை நோக்கி "அடடா! என்ன ஆச்சரியம்! என்ன மர்மம்! என்ன பயங்கரம்! இப்பேர்ப்பட்ட அதிசயமான விஷயங்களும் இவ்வுலகத்தில் நடை பெறுகின்றன வென்று எனக்கு இன்றுதான் தெரியும்" என்றான்.

இப்படியாக நான் கூறுவதைக் கேட்டு என் நண்பன் ஆச்சரியப்படுவதும், பிறகு ஏதாவது எனக்கு யோசனை சொல்லுவதுமாக இருக்க நானும் மேல்நடக்க வேண்டிய காரியங்களைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தேன்.

மறுநாள் என் காதற்கரசியாகிய கோகிலத்தை மறுமுறை காணவேண்டுமென்று அதிக ஆவலுட னிருந்தேன். இவள் போகு மிடங்களையும் கவனித்துக் கொண்டுவந்தாலே இவளையும் என்னையும் சூழ்ந்திருக்கும் மர்மத்தைக் கண்டுபிடிக்க ஏதாவது ஆதாரங்க ளேற்படும் என்றென் மனதிற் பட்டது. இதை நான் என் நண்பனுக்குத் தெரிவிக்க அவனும் ஆழ்ந்து யோசித்த பிறகு என்னைப்பார்த்து "நீ கூறுவதும் ஒரு வழிதான். ஆனால் நீ வெகு ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். கொஞ்சம் அஜாக்கிரதையா யிருந்தாலும் உன் தலையையே கொண்டுபோய் விடுவார்கள். வேண்டுமானாலும் இன்றைய தினமே பல்லாவரத்திற்குப் போ. ஆனால் தூரத்தில் இருந்தபடியே எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டுவா. உன்னைச் சூழ்ந்திருக்கும் கொடிய மர்மத்தைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று உன் மனம் உறுதி கொண்டிருக்கும் பட்சத்தில் நீ, நான் வேண்டிக்கொள்ளுகிறபடி நிரம்ப தந்திரமாகவும் ஜாக்கிரதையாகவும் இருக்க வேண்டியது அவசியம்" என்று சொல்ல, நான் "இந்த மர்மத்தைக் கண்டுபிடிக்காமல் என் மனம் ஒருநாளும் நிம்மதி யடையாது. மேலும் எத்தனை வருஷங்களான போதிலும் கோகிலம் அன்புடைய என் மனைவியாகவே எனக்கு வந்து சேரவேண்டும்" என்றேன். சிறிது நேரங் கழித்து அவன் என்னைப்பார்த்து, "ஒருவேளை இன்னொரு முறை அந்த பூர்ணலிங்கம் உன் மனைவியைத் தொலைத்துவிட யத்தனித்து ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கக் கூடும்" என்று சொல்ல நான் "ஆம். இந்த எண்ணத்தினாலேயேதான் நான் இப்பொழுது பல்லாவரம் போகவேண்டியது அத்யாவசியமா யிருக்கிறது. அவளுடைய உயிர் நிலைபெற்றிருப்பது நிச்சயமான விஷயமல்ல; ஏனெனில் அவளைத் தொலைத்துவிட வேண்டுமென்பதே பூர்ணலிங்கத்தின் கருத்து என்று நன்றாய்த் தெரிகிறது" என்றேன்......

## "ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

ஆங்கீரஸஸு மாசிமீ—கலியுகாதி 5034, சாலிவாகனம் 1855,
பசலி 1342, கொல்லமாண்டு 1108, ஹிஜரி 1351,
இங்கிலீஷ் 1933ஸு பிப்ரவரிமீ—மார்ச்சுமீ

| மாசிமீ | பிப்ரவரிமீ | வாரம். | திதி. | நக்ஷத்திரம் | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 12 | ஞா | துதி26-33 | பூரம்35-40 | சி35-40அ | விஷ்ணுபதி புண்யகாலம் |
| 2 | 13 | திங் | திரி23-0 | உத்34-15 | சித்60 | சுப முகூர்த்தம் செய்ய |
| 3 | 14 | செவ் | சது19-40 | அஸ்32-5 | சித்60 | சங்காஷ்ட சதுர்த்தி |
| 4 | 15 | புத | பஞ்15-20 | சித்29-28 | சித்60 | விவாகம், சுப முகூர்த்தம் |
| 5 | 16 | வியா | சஷ்10-30 | சுவா26-5 | அ26-5சி | தானியம் செலவிட |
| 6 | 17 | வெ | சப்5-13 | விசா22-38 | சித்60 | திஸ்ரோஷ்டகா |
| 7 | 18 | சனி | அஷ்0-2<br>நவ54-30 | அனு18-55 | சித்60 | இராமதாஸ நவமி, திஸ்<br>ரோஷ்டகா, அவமாகம் |
| 8 | 19 | ஞா | தச49-3 | கே15-13 | ம15-13அ | மீனுயனம் நா-2-20 |
| 9 | 20 | திங் | ஏகா43-54 | மூல11-40 | சி11-40ம | சர்வ,மத்வ ஏகாதசி, அவமா |
| 10 | 21 | செவ் | து39-5 | பூரா8-23 | சி8-23அ | தில துவாதசி [கம் |
| 11 | 22 | புதன் | திர35-0 | உத்5-33 | அ5-33சி | மஹா சிவராத்திரி |
| 12 | 23 | வியா | சது31-40 | திரு3-30 | சித்60 | நதிராடிக்க, மருந்துண்ண |
| 13 | 24 | வெள் | அ●29-15 | அவி2-18 | சித்60 | சர்வத்திர அமாவாசை |
| 14 | 25 | சனி | பிர28-28 | சத2-23 | அ2-23மா | பால்குண சுத்தம்,சந்திர தரி |
| 15 | 26 | ஞா | துதி28-53 | பூர3-38 | சி3-38அ | கரிநாள் [சனம் |
| 16 | 27 | திங் | திரி30-43 | உத்6-23 | சித்60 | கரிநாள் |
| 17 | 28 | செவ் | சது34-5 | ரே10-40 | சித்60 | மாச சதுர்த்தி விரதம் |
| 18 | 1 | புத | பஞ்38-45 | அஸ்16-8 | மா16-8சி | |
| 19 | 2 | வியா | சஷ்44-25 | பர22-43 | சி22-43மா | |
| 20 | 3 | வெள் | சப்50-25 | கி✻29-50 | சி29-50ம | |
| 21 | 4 | சனி | அஷ்56-28 | ரோ37-8 | அ37-8சி | |
| 22 | 1933ஸு மார்ச்சுமீ 5 | ஞா | நவ60 | மிரு44-5 | சித்60 | |
| 23 | 6 | திங் | நவ2-13 | திரு50-5 | சி50-5அ | |
| 24 | 7 | செவ் | தச6-28 | புன54-48 | சித்60 | |
| 25 | 8 | புதன் | ஏகா9-28 | பூச57-58 | சித்60 | |
| 26 | 9 | வியா | து10-40 | ஆயி59-23 | சி59-23அ | |
| 27 | 10 | வெ | திர10-13 | மக்ம்59-15 | ம59-15சி | |
| 28 | 11 | சனி | ச○8-10 | பூர57-40 | சி57-40ம | |
| 29 | 12 | ஞா | பௌர4-45<br>பிர59-58 | உத்54-45 | அமி60 | பால்குண பகுளம், வசந்<br>தோட்சவ, அவமாகம் |
| 30 | 13 | திங் | துதி54-18 | அஸ்51-0 | சி51-0பிர | மீனரவி நா-45-50, சாதுர்<br>மாஸ்ய துதியா, 9-க்குன்<br>மழை |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| ஸூரி<br>புத<br>ராகு | 14-கும்-சுக்<br>15-மீன-புத | | செவ் |
| சனி<br>சுக் | | | குரு<br>கே |
| | | | |

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR,
AT THE "ANANDA BODHINI" PRESS,
NO. 6, LAWYER CHINNATHAMBI MUDALI STREET, MADRAS.


# குசாவதி அல்லது

## ஒரு வஞ்சக வநிதை.

சே. இராஜு செட்டியார், எம்.பி. பி.ஜ., அவர்கள் இயற்றியது.

இரண்டாம் பதிப்பு.

குசாவதி என்னும் பெண்மணி பாலியத்தில் பணம் சம்பாதிக்கும் நிமித்தம் அஞ்சா நெஞ்சுடன் பல அரிய செயல்களை மேற்கொண்டு, வம்புச் சண்டைக்கெல்லாம் வல்லவளாயும், வஞ்சகத்திற்கெல்லாம் மிஞ்சினவளாயும், பேர்போன திருடர்கள் மோசக்காரர்களிடமே தன் கைவரிசையைக் காட்டி குபேர சம்பத்தடைந்தும் பிறகு கடைசியில் ஒரு சந்நியாசியைக் கண்டு அவரருளால் தன் வாழ்க்கையில் வெறுப்புற்று, மனம்போன போக்கெல்லாம் போன தன் மனதை நிலை நிறுத்தி தன் எல்லா ஆஸ்தியையும் பெண்கள் பாடசாலைக்கும், பிரசவ ஆஸ்பத்திரிக்கும் பகிர்ந்து எழுதிவைத்து துறவறம்பூண்டு எளிய வாழ்க்கையை நிம்மதியாய் மேற்கொண்டு பரமனடிபாடி பரகதி அடைந்தது படிக்கப் படிக்க பேரானந்தத்தையும் ஆச்சர்யத்தையும் விளைவிக்கும்.

இதன் விலை அணு 6.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 31-3-33 வரை விலை அணு 4.

# ஞானகாந்தி

கற்பின் ஜோதியாக விளங்கும் ஞானகாந்தி என்னும் இக்கதா நாயகியின் பதிபக்தி, அறிவு, ஆற்றல், பொறுமை, தன்னடக்கம், பிறர் துயரங் கண்டிரங்கல், பரோபகாரம் முதலியவை பல அத்தாட்சிகளோடு அனைவரும் படித்து ஆனந்திக்குமாறு வரையப்பட்டிருக்கின்றன. இதற்கு எல்லாவிதத்திலும் நேர் மாறான நடத்தையுள்ள அம்புஜம் என்னும் ஸ்திரீயின் போக்கு மிகவும் கேவலமாயிருந்தும், கடைசியில் நல்லுணர்வுபெற்று சீர்திருந்தி சாந்தமடைவது எல்லோருக்கும் சிறந்த நீதியைப் போதிக்கும். எளிய இனிய நடையில் எழுதப் பட்டது. அநேக நீதிகளடங்கியது; அறிவு விருத்திக்கு நிகாற்ற ஓர் பொக்கிஷம் என்றே இதைச் சொல்லவேண்டும். புதிய பதிப்பு விலை ரூபா 1-6-0

ஆனந்தபோதினி சந்தாதாருக்கு 31-3-33 வரை விலை ரூபா 1.

# சந்திராபாய் அல்லது

## சங்கரதாஸின் வெற்றி.

ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்கள் எழுதியது.

ரஸாயன ஆராய்ச்சி, மின்சாரம், டெலிபோன், ஆகாயக் கப்பல், வெடிகுண்டு, டார்பிடோப் படகு முதலானவைகள் தோன்றியிருக்கும் நவீன நாகரீகப் போக்கின் சாதகபாதகங்களை இந்நாவல் வெள்ளிடை மலைபோல் ஆங்காங்கு வெளிப்படுத்துகிறது. இதன் விலை ரூபா 2.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 31-3-33 வரை விலை 1—4—0

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167 சென்னை.

## எப்பொழுதும் பிணியால் மங்கி நிற்கும் பெண்களில் நீயும் ஒருத்தியா?



பெலூனா மாத்திரைகள் பெண்களுக்கென்றே ஏற்பட்டது. இவைகளை உட்கொண்டால் ஜீரணக் கருவிகள் சரியான நிலைமையை அடையும். பலம், சந்தோஷம், சௌக்கியம் இவைகள் ஒருங்கே அடையலாம்.

மலபந்தம், தூக்கமின்மை, அஜீரணம், சோர்வு, தலைவலி, துடிப்பு, வெள்ளை காணுதல், இரத்தக் குறைவு, மலடித்தனம், மயக்கம், பலஹீனம், வாய்வு உபத்திரவம் முதலிய வியாதிகளைக் கண்டிக்கும். மாதவிடாய் காலத்தில் ஏற்படும் வலியை நிவர்த்திக்கும்.

பெலூனா சிவப்பு பையில் விற்கப்படும்.

# Feluna




பெலூனா எல்லா மருந்து வியாபாரியிடத்திலும் கிடைக்கும். இதன் விலை புட்டி ஒன்றுக்கு ரூ. 2-4-0. தபாற்பெட்டி நெ. 760, பம்பாய்க்கு எழுதி வி. பி. மூலமாகவும் தருவித்துக்கொள்ளலாம்.

# கிராண்டு நாஷனல் ஸ்வீப்.

(அயர்லாந்து ஆஸ்பத்திரி டிரஸ்டு லிமிடெட்டால் நடத்தப்படுவது.)

**(இங்கிலாந்து) ஆண்ட்ரீ என்ற விடத்தில் 24-3-1933-ல் நடைபெறும்.**

ஆகாய தபால் மூலம் அனுப்ப டிக்கட் 1-க்கு ரூ. 7-14-0 விதம் 10-2-33 வரை சந்தாக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

---

# லிங்கன்ஷயர் ஹாண்டிகேப் ஸ்வீப்.

(மியூச்சுவல் கிளப் லிமிடெட்டால் நடத்தப்படுவது,)

**லிங்கனில் (இங்கிலாந்து) 22-3-1933-ல் நடைபெறும்.**

சாதாரண தபால் மூலம் அனுப்ப டிக்கட் 1-க்கு ரூ. 4-12-0 விதம் 22-2-1933 வரை சந்தாக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

---

மேற்படி கிளப்புகளது டிக்கெட்டுகள், ரொக்கத்திற்கு கீழ்க் கண்டவரிடமிருந்து கிடைக்கும்:—

**T. V. ரெட்டி,**
ஆதரைஸ்ட் ஏஜெண்ட்,
ராஜமகேந்திரபுரம், கீழ்க்கோதாவரி ஜில்லா.

மதராஸ் ஏஜெண்ட்;—C. பட்டாபிராம் அண்ட் கோ.,
5, காசி செட்டி தெரு, ஜி. டி. மதராஸ்.

சாதி சமயச் சண்டைகளை யொழித்து சமரசபாவத்தைப் பரப்புவது எது?
இந்து மதத்தின் உண்மையான தத்துவத்தை அறிவிப்பது எது?

வேதாந்த மொன்றே.

உபநிடதங்களின் பரம தாத்பரியமாக விளங்கும் வேதாந்தத்தின் இரகசியார்த்தங்களை யெல்லாம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் அறியவேண்டுமானால்

# ஞானசூரியோதயம் என்னும்

# வேதாந்த இரகசியார்த்த வினாவிடை

என்னும் அரிய நூலைப் பாருங்கள். ஒவ்வொருவரிடத்திலும் அத்தியாவசியமாக இருக்கவேண்டிய ஞான பொக்கிஷம். பிறருதவியின்றிப் பாலருமறியுமாறு எளிய நடையில் சம்பாஷணை வடிவமாக எழுதப்பட்டிருக்கிறது. முமுட்சுக்களுக்குண்டாகும் முக்கியமான சந்தேகங்களை யெல்லாம் போக்கி ஜீவன் முக்திப் பரமானந்தத்தைத் தருவது. வேதாந்த தர்க்க ஆசிரியர் திரு. கோ. வடிவேல் செட்டியார் அவர்களின் சிறந்த முகவுரை யுடைய நூ. நாவல் வாசிப்பது போலவேயிருக்கும். நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டது. சுமார் 200 பக்கம் கொண்டது.

இதன் விலை ரூபா 1—0—0.


ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 31-3-33 வரை விலை அணா 12.

## நிமித்தியகுறி சாஸ்திரம்

மனதில் நினைத்துக்கொள்ளுங் காரியங்களையும், அவற்றின் பலாபலன்களையும் அறிந்து சொல்லும் மார்க்கங்கள் விளக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன. இது ஜோதிடர்களுக்கு மிகவும் உபயோகமானது. விலை அணா 2.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167. மதராஸ்.

---



## சரிகை ஹாரங்கள்.

சரிகை ஹாரங்களை சுத்த வெள்ளி சரிகையிலும், தங்க சரிகையிலும், தங்கநிறத்தாலும், வெள்ளி நிறத்தாலும் வாங்குகிறவர்களின் பிரியப்படி செய்யப்படும். ஹாரங்களின் விலையில் நாலிலொருபங்கு அட்வான்ஸாக அனுப்பினால் தான் வெளியூர் ஆர்டர்களை கவனிக்கப்படும். ஹாரங்கள் திருப்திபடாத பக்ஷத்தில் திருப்பி அனுப்பினால் தபால்செலவு போக மிகுதி பணத்தை வாபீஸ் செய்யப்படும். எந்த சமயத்திலும் இம்மாதிரியான ஹாரங்கள் இவ்விடத்தில் கிடைக்கும்.

| | | | |
|---|---|---|---|
| 1-ம் நெ. | ஹாரம் 1-க்கு விலை | ரூபா | 1—8—0 |
| 2-ம் நெ. | ,, | ,, | 2—8—0 |
| 3-ம் நெ. | ,, | ,, | 5—0—0 |
| 4-ம் நெ. | ,, | ,, | 10—0—0 |
| 5-ம் நெ. | ,, | ,, | 15—0—0 |

---

சுகுணநிதி டிபோ நெ. 1/6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

# தத்வசங்க்ரஹ ராமாயணம்

இரண்டாம் பதிப்பு.

இது சமஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட அருமையான நூல். இதனை ஒரு முறை படிப்பவர்கள் இம்மை மறுமை யென்னும் இருவகை வாழ்விற்குரிய சாதனங்களை புணர்ந்து மக்களாய்ப் பிறந்த தாம் அனுஷ்டிக்கவேண்டிய ஒழுக்கங்களைக் கைக்கொண்டு பகவானுடைய திருவருட் குரியவராக விளங்குவர் என்பதில் ஐயமில்லை. இந்த கிரந்தம் துஷ்ட நிக்ரஹ சிஷ்டபரிபாலன நிமித்தம் உலகத்தில் ஸத்யவந்தனை விளங்கிய தசரத பூபதிக்கு ஸ்ரீ ராமனாக அவதரித்த ஜகத் பிரபுவின் குணாதிசயங்களைப் பற்றிப் பேசுவது.



ஸ்ரீ ராமாவதாரத்தின் உண்மை இதனைப் படிப்பவர்க்கு உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளங்கும். இதனைப் படித்தால் அநேக ஞான நூற்களைப் படித்த பயனை ஒருங்கே யடைதல் கூடும். ஸ்ரீராம பூஜா விதிகளும் அர்ச்சனைகளும் இதன்கண் விவரிக்கப்பட்டுள்ளன. இதுவரையில் வெளியான ராமாயணங்களைவிட மும்மடங்கு மேலான தத்வ உபதேசங்கள் இதன்கண் காணலாம்.

உபந்யாசகர்களுக்கு வேண்டிய பல அரிய விஷயங்களுடன் கூடியது. ஸ்ரீ ராம சரிதையை வாசிப்பதே இகபர நன்மை யளிக்குமென்பர் பெரியோர். இதில் எண்ணிறந்த மிக்க அருமையான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

இதன் விலை ரூபா 4.

## ஸ்ரீமத் கம்பராமாயண வசன சங்கிரகம்

(சப்தகாண்டங்கள் அடங்கியது.)

(மூன்றாம் பதிப்பு) இதன் விலை ரூபா 2.

ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகம் ஆப்டோன் படம் சேர்க்கப்பட்டது. மிக்க திருத்தங்களோடு கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது.


☞ சொற்ப காப்பிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன. ஆதலின் புஸ்தகம் வேண்டியவர்கள் முன்னரே எழுதிப் பெற்றுக்கொள்க.

ஸ்ரீ இராமபிரான் சரிதையை விரித்துக் கூறும் இந்த இராமாயணமானது மிக்க புண்ணிய கதை யென்பது உலகறிந்த விஷயம். இதனைப் பாராயணஞ் செய்வதாலுண்டாகும் பயன்கள் அளவிடற்கரியனவாம். இதனைப் பக்தி சிரத்தையுடன் படிப்பவர்க்கு உலகத்தில் விரும்பக்கூடிய பொருள்களெல்லாம் கைகூடும்; உயர்ந்த அறிவுண்டாகும்; கீர்த்தி அதிகரிக்கும்; மோக்ஷத்தை அடையும் மார்க்கம் ஏற்படும்; இலக்குமி கடாக்ஷமுண்டாகும்.

---

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# புல்—புல்—தாரா.




இது ஹார்மோனியத்தைப் போன்ற சிறந்த மனோகர சங்கீத வாத்தியம். சங்கீதப் பயிற்சியை எளிதில் அளிக்கக்கூடியது. இதனுடைய நாதமோ செவிக்கின்பந்தரத்தக்கது. ஒவ்வொரு வீட்டிலும் சிறுவர்களுக்கு சங்கீத ஞானத்தை புகட்டச் செய்யும் கருவி இதுவேயாகும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 7 | கம்பிகள் உள்ளது | விலை ரூபா | 5 | 8 | 0 |
| 6 | ,, | ,, | 5 | 0 | 0 |
| 5 | ,, | ,, | 4 | 8 | 0 |
| 4 | ,, | ,, | 4 | 0 | 0 |
| 3 | ,, | ,, | 3 | 8 | 0 |

வாசிக்கும் தந்தம் 1, சாவி 1, கம்பி 2, உபயோகிக்கும் விதம் புத்தகம் 1, இவையாவும் சேர்த்து மேற்படி பெட்டியுடன் அனுப்பப்படும். பெட்டி வேண்டியவர்கள் இத்தனை கம்பிகள் என்று தெரிவிப்பதுடன் முன்பணம் ரூ. 2. அனுப்பவேண்டும்.

## மயிர் போக்கும் சோப்.



இது ஒவ்வொருவருக்கும் மிகவும் அத்தியாவசியமானது. சரீரத்தின் எந்தப்பாகத்திலுமுள்ள மயிரை இந்த சோப்பின் உதவியால் பிரயாசையின்றி அதிக சுலபமாய்ப் போக்கிவிடலாம். மயிரைப் போக்கவேண்டிய இடத்தில் கொஞ்சம் ஜலத்தைப் பூசி, அதன்மேல் இந்த சோப்பைத் தேய்த்து ஐந்து நிமிஷம் கழித்து காகித கார்டினாலாவது ஓலைத்துண்டினாலாவது வழித்தால் அவ்விடத்திலுள்ள மயிர் யாவும் கழிந்துபோகும். அந்த இடம் பிறகு மழமழப்பாக விருக்கும். இந்த சோப்பில் துர்நாற்றம் முதலியவை இரா. சோப் 1-க்கு விலை அணா 0 6 0

3-சோப் கொண்ட பாக்ஸ் 1-க்கு ரூ. 1 0 0

## மயிர்போக்கும் சூரணம்.

இதில் கொஞ்ச மெடுத்துத் தண்ணீரில் குழைத்து உரோமமுள்ள விடத்தில் பூசி ஐந்து நிமிஷத்திற்குப் பிறகு ஒரு கடுதாசிகார்டிலாவது, ஓலைத்துண்டினாலாவது வழித்தால் மேற்படி மருந்து தடவிய விடத்திலுள்ள உரோம முழுவதும் இலகுவாய் நீங்கி மழமழப்பாகி விடும். வேக்காடு எரிச்சல் முதலாகிய உபத்திரவங்கள் உண்டாகா. புட்டி 1-க்கு அணா 8.

கருணாநிதி டிபோ, நே. 1/6, வெங்கடேசமேஸ்திரி தெரு, மதராஸ்.

# "திபேத்தன் ஹெர்ப்" என்னும் மூலிகை.



1932ஞு டிசம்பர்மீ 3உ யிட்ட கடிதத்தில் K. சாத்லிங்கப்பா எழுதுவதாவது :—தாங்கள் அனுப்பிய போன வருஷத்து "ஹெர்ப்" என்னும் மூலிகை மிகவும் குணமாயிருந்தது. ஆதலால் இன்னும் அதிகமாக வியாபாரத்திற்கு இந்த வருஷம் அனுப்பவும்.

திபேத், ஹிமாலயம் முதலிய இடங்களில் வெகுநாள் யோகதவ ஆராய்ச்சியினால் இந்த 'திபேத்தன் ஹெர்ப்' ஒரு லாமா யோகியினால் கண்டு பிடிக்கப் பட்டது.

1. வசிகரன்:—ஆண் பெண் பாலரிடம் பரஸ்பரம் பார்த்த மாத்திரத்தில் காதல் வெற்றி யளிப்பதில் நிகரற்றது. உபயோகித்த உடனே இது தெரியவரும் விலை ரூ. 3 8 0.

2. வியாபார ஜீவனோபாயம்:—எந்தவித வியாபாரத் தொழிலிலும், உபயோகிப்பவர்கள் லாபமே அடைவார்களென்பது நிச்சயம். ரூ. 3 8 0.

3. வியாஜ்ஜிய வழக்குகள்:—இதன் அபார சக்தியால் தோற்கும் நிலையிலுள்ளவழக்குகளும் ஜெயம் பெறலாம். ரூபா 3 8 0.

4. வியாதிகள்:—கொடுமையான எப்பேர்ப்பட்ட வியாதிகளும் தீராக்ஷயரோகங்களும் இதன் உபயோகத்தால் தீர்ந்து பிறகு எப்பொழுதும் சுகத்துடனிருப்பார்கள். ரூபா 3 8 0.

5. உத்தியோகம் —தகுந்த உத்தியோக மில்லாமற் திண்டாடும் யுவர்களுக்கு, அவரவர் திறமைக்கும் யோக்கியதைக்கும் தகுந்தவாறு, அவர்கள் பரிபூரண மனத் திருப்தி யடையும்படியான தகுந்த வேலையை அளிக்க வல்லது. உத்தியோக உயர்வு எவ்வழியிலும் நிச்சயம். ரூபா 3 8 0.

6. பரீக்ஷை:—பரீக்ஷையில் ஜெயம் நிச்சயம். ரூபா 3 8 0.

7. வெல்ல முடியாத சத்துருக்கள்:—ஆபத்தை விளைவிக்கக்கூடிய மிக்க பலம் பொருந்திய சத்துருக்களும் இதன் உபயோகத்தால் அடி பணிவார்கள். ரூபா 3 8 0.

8. ஆகாத நக்ஷத்திரத்தால் அவஸ்தைப்படுவோர்கள்இதை உபயோகித்து ஆறுதலடைந்து ஆனந்தமடைவார்கள். ரூபா 3 8 0.

9. சுக சௌகரியங்கள். இதன் உபயோகத்தால் பெருகும். ரூ. 3 8 0.

குறிப்பு:—ஹிந்து சாஸ்திரத்தில் நம்பிக்கையுடையோர் இந்த மூலிகை எதற்காக வேண்டும் என்று தெரியப்படுத்தில் அதற்குத் தகுந்தவாறு அனுப்பப்படும். ஒரு 'ஹெர்ப்' ஒரு எண்ணத்தைப் பூர்த்தி செய்ய வல்லது. ஒரு ஹெர்பின் விலை ரூ. 3 8 0 தான். தபால் செலவு அணா 6 வேறு. ஒரே தடவையில் 3-வாங்கினால் தபால் செலவு உள்பட ரூ. 9 6 0 தான். இந்தக் கிரயம் இந்தியாவிலுள்ளோர்க்கு. அந்நிய நாட்டினர் 'ஹெர்ப்' ஒன்றுக்கு 8-ஷில்லிங் பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டரில் முன் பணமாக அனுப்பவேண்டும்.

BIJOYA LODGE, (A.B.), (P. O.) Salkia, Howrah

# நாகரீக நங்கையர் கழுத்துச் சங்கிலி

இது சுத்தமான 18 காரட் கோண்ட

ரோல்ட் கோல்ட் பிளேட் நெக்லேஸ் என்னும்

## கழுத்துச் சங்கிலி



3 வருஷம் உத்திரவாதமுள்ளது. இது சுத்தமான ரோல்ட் கோல்டால் செய்யப்பட்டு இமிடேஷன் வைரம், சிவப்பு, ரத்தினங்கள் முதலியவை பதிக்கப் பெற்றது. படத்திற் கண்டபடி மிகவும் வேலைப்பாடுடையது. பதக்கம் அமைக்கப்பெற்றது. கண்ணைக் கவரக்கூடியது. அசல் தங்கத்தால் செய்தது போலவே யிருக்கும். யாவரும் எத்தேயத்தினரும் உபயோகிக்கலாம். இதன் விலை ரூபா 1—8—0

ஒரே சமயத்தில் இரண்டு சங்கிலிகளுக்கு ஆர்டர் கொடுத்தால் தபால் செலவு இல்லை.

## ரோல்டு கோல்டு
## "பிடோ" லீவர் கைகெடியாரம்.

எங்கள் ரிஜிஸ்டர் ரோல்டு கோல்டு "பிடோ" லீவர் கைக்கெடியாரம் பார்வைக்கு அழகாயிருக்கும். சரியான டைம் காட்டும். சிலிண்டர் கெடியாரங்களைப்போல் கொஞ்ச நாளைக்குள் நின்று போவதல்ல. 5 வருஷமல்ல பத்து வருஷங் கூட ரிபேர் இல்லாமல் போகக்கூடிய கடியாரம். இதை வாங்குவோருக்கு ரோல்டு கோல்டு கெடியார கைச்சங்கிலி இனாமாகச் சேர்த்து அனுப்பப்படும். 5 வருஷ காரண்டியுடன் அனுப்புகிறோம்.



இனாம் சங்கிலியுடன் கடியாரம் விலை ரூ 5-12-0. ஸ்டாக் கொஞ்சம் உடனே எழுதுங்கள்.

**சுபீரியர் வாட்சு கம்பெனி,** கெடியார வியாபாரிகள், மதராஸ்.

---

முந்துங்கள் ! தமிழ் நாட்டு பெற்றோர்களே !! முந்துங்கள் !!!

## மெட்ரிக்குலேஷன் அறிவை

தங்கள் பிள்ளைகள் நேரில் படித்துப் பெற சந்தர்ப்ப மில்லாவிடின், தொழில் செய்துகொண்டே தபால் மூலம் ஸ்பெஷல் மெட்ரிக்கோர்ஸ்களை வாசித்து முடிக்கலாம். இஷ்டப்படின் சர்க்கார் கே. சீனியர் பாஸாகி காலேஜில் சேரலாம். லோயர், ஹையர் கிரேட் உபாத்திமார்கள் S. S. L. C. தவறியவர்களுக்கு அதிக பிரயோஜனமானது. நமது மாணவர்களின் வெற்றி. K. சீனிவாசகன் (ஹையர் கிரேட்) IV பாரம் படித்தவர் கடந்த சே. சீனியர் பாஸ் செய்து சக்கண்டரியாக மாற்றப் போகிறார். Dr. H. S. சுப்ரமணியம் 4-மாதங்களில் படித்து பாஸாகி கடைசி 2 வருஷம் M. B. B. S. படிக்கிறார். மற்ற விபரத்திற்கு உடன் ஸ்டாம்புடன் எழுதவும்.

டைரக்டர், அன்பையான்ஸ் கேம்பிரிட்ஜ் இன்ஸ்டிடியூட்,
(தலைமை ஆபீஸ்) ஆறுமுகநேரி S. I. R.

# பூவுலக வாழ்க்கைக்கு இன்றியமையாத சிங்கபலத்தைத் தருவதெது?




அமிர்த சஞ்சீவி லேகியமும்,

முறையாய்ச் செய்த அயக்காந்த செந்தூரத்தைக் காட்டிலும் தேகபலத்தைத் தரும் ஔடதம் வேறொன்றுமில்லை.

## விளம்பரம்.

இதைக் கண்ணுறும் கனவான்களே!

அயக்காந்த செந்தூரமும்.

இந்த லேகிய செந்தூரங்கள் சாமான்யமானவையல்ல. அபாரமான பலத்தைத் தரக்கூடிய சக்தி அமைந்துள்ளவை. உறுதியாய் இவற்றை நம்பி வாங்கிச் சாப்பிட்டால் ஒரே தடவையிலேயே இவற்றின் விசேட குணம் நன்கு விளங்கும்.

## இந்த லேகிய செந்தூரங்களால்
### நிவர்த்தியாகும் முக்கிய வியாதிகளாவன:

தற்காலத்தில் மனிதரின் பால்ய சேஷ்டையாலும், இரத்தப் போக்காலும் அவர்க்கு உண்டான 20 வகை மேகரோகங்கள், சூலைரோகம், குன்மரோகம், பித்தபாண்டு, கைகால் முடக்கு, ஓடுவாய்வு, பித்த எப்பம், நெஞ்சு தொண்டை எரிச்சல், வயிற்றுப்பிசம், அஜீரணம், பசியில்லாமை, தாது ஷீணம், தேக உளைச்சல், கண்ணில் நீர்வடிதல், சோம்பல், நித்திரையில்லாமை, தலை சுழற்றல், நீர் இறங்கும்போது பொறுக்கமுடியாத பாதைகளைத்தரும் தந்திமேகம் முதலியவைகள் ஆச்சரியப்படத்தக்க விதமாய் நீக்கிவிடும். பயங்கரமான மேக சம்பந்த வியாதிகளைப் பத்தே வேளையில் போக்கி சப்த நாம்புகளுக்கும் முறுக்கேற்றி அபரிமிதமான இரத்த விருத்தியைப் பெருக்கி பலத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின இலேகிய பஸ்பம் வெறெங்குமில்லை என்று நாம் உறுதியாகச் சொல்லுவோம். இதல்லாமல் தேகத்தைப் புஷ்டியாக்கித் தேகத்தடிப்பு, ககக்கண் வெளுத்திருத்தல் முதலிய வியாதிகளைக் கண்டித்து தினந்தோறும் மலத்தைத் தாராளமாய்ப் போக்குவதில் இந்த லேகிய செந்தூரங்களே முதன்மையானவையென்பதை நாம் எமது அனுபவத்தில் கண்டிருக்கிறோம். நிற்க, இந்த லேகிய செந்தூரங்கள், மேற்கண்ட வியாதிகளைக் கண்டிப்பாய் நிவர்த்திக்குமா என்னும் சந்தேகமுடையோர் பரீக்ஷார்த்தமாக முதலில் 48-நாளாவது வாங்கி யுண்டால் இவற்றின் அபாரகுணம் தெரியவரும். தவிர யாங்கள் இம்மகத்துவம் பொருந்திய லேகிய செந்தூரங்களை எவ்வளவு சிறப்பித்துக் கூறியபோதிலும் அது தகும். மேலும் இவற்றை நோய் உள்ளவரே தாம் சாப்பிடவேண்டும் என்ற அவசியமில்லை; யாவரும் சாப்பிடலாம். நோய் உள்ளவர்களைவிட நோய் இல்லாதவர்கள் எண்ணிக்கையாக 48-நாள் இந்த லேகிய செந்தூரங்களை யாதும் பத்தியமின்றிச் சாப்பிட அவர்க்கு நல்ல பலம் ஏற்படும். இது தவறாது. இவற்றைத் தருவித்து நண்பர் எண்ணிக்கையாகச் சாப்பிட்டு 10-நாளைக்குள் குணம் இல்லாவிடில் உடனே தெரியப்படுத்தினால் கட்டாயம் இவற்றிற்கு வாங்கிய பணம் வாபஸ் செய்யப்படும். தவிர மேற்காட்டிய நோய்கள் உடையோர் 48-நாட்கள் சாப்பிடுவார்களேயானால் அவை முழுதும் நீங்கிவிடும். அப்படி நீங்கிக் குணம் ஏற்படாவிடில் நாங்கள் அதற்கு உத்திரவாதிகளாவோம். யாங்கள் இவ்வளவு அருமையான லேகிய செந்தூரங்களை எவ்வளவோ சிரத்தையுடன் கஷ்டப்பட்டு முடித்துப் பரோபகாரத்தமாக வெளியிட்டோம். இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரங்களுக்குப் பொன் மெடல், வெள்ளிமெடல், பெற்றதல்லாமல் ஆயிரக்கணக்கான யோக்கியதா பத்திரங்களும் பெற்றிருக்கின்றோம். ஆதலின் நமது லேகிய செந்தூரங்கள் யாம் சொன்னபடி குணத்தைக் கொடுக்கும் என்பதைப்பற்றி ஜவாப்தாரியாயிருக்கக் காத்துக் கொண்டிருக்கிறோம்; இது உண்மை. இவற்றை ஒரே தரம் தருவித்துப் பாருங்கள்; எமது உண்மை விளங்கும்.

வாதாதிக்க தோஷத்தினாலாவது, தூரப்பிரயாசத்தினாலாவது, அதிகமனக் கவலையினாலாவது, அடிக்கடி உண்டாகும் நோயினாலாவது, மற்றெந்தக்காரணத்தினாலாவது பலமிழந்தவர்கள் எண்ணிக்கையாக ஷை லேகிய செந்தூரங்களைப் புசிப்பார்களானால் இவை தேகாரோக்கியம், வலிமை, அழகு முதலியவற்றை அவர்க்குக் கொடுத்து அவர்களைச் சந்தோஷிக்கச் செய்யுமென்பதில் தடையில்லை. வெளியூர்க் கனவான்கள் இந்த லேகிய செந்தூரங்களில் முழு நம்பிக்கை வைத்து ஒரே ஒருதரம் இவற்றைப் பரீக்ஷிப்பார்களானால், அவர்கள் அவசியம் ஆனந்தமடைவார்கள்.

இந்த லேகிய செந்தூரங்களுக்குப் பத்தியமே கிடையாது. எந்தப்பண்டங்களையும் நீக்குதலின்றி சாப்பிடலாம். மருந்து சாப்பிடும்போது பசி அதிகமாய் எடுக்கும் ஆதலால் பச்சைப்பயற்றுக் குழம்பு, கறி மார்க்கண்ட சூப்பு, இவைகளை அதிகமாகப் பசியைத் தணிக்கக்கூடிய விதமாகத் தாமதம் செய்யாமல் சாப்பிடல் வேண்டியது. இவற்றைப் புசிக்கும்போதெல்லாம் பலகாராதிகள் சாப்பிடல் வேண்டும். தயிர், பால், நெய் முதலியவைகள் எவைகளாயிருந்தாலும் சந்தேகமின்றிச் சாப்பிட்டு வரலாம்.

இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரங்களை மட்டும் ஒருவர் தருவித்து எண்ணிக்கையாக 48-நாள் சாப்பிடுவாரேயானால் இவை தேகத்தில் ஊற ஊற, மேகமெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கி அவர் தேகமானது வலுத்துப் புதிய ரத்தம் பரவித் தன் வாழ்நாள் பரியந்தம் இளைக்காமலிருக்கும். இவற்றைப் புருஷன் பெண்சாதி இருவரும் ஏககாலத்தில் ஒற்றுமையாய்ச் சாப்பிட்டு வந்தார்களேயானால், அவர்க்கு உதிக்கும் மக்கள் மிகுந்த தேஜஸோடு தோன்றுவார்கள். இது உண்மை. இதை அதிகம் எழுதுதல் அனாவசியம். இந்தியா, பர்மா, ஸிலோன் ஆகிய உள் நாடுகளுக்கு 24-நாள் சாப்பிடக்கூடிய லேகியமும் செந்தூரமும் விலை ரூ. 1-12-0. போஸ்டேஜ் அணா 8. ஒரே தடவை 48-நாள் மருந்து வாங்குவோர்க்கு போஸ்டேஜ் உள்பட ரூ. 4.

பினாங்கு, சிங்கப்பூர், நெட்டால் முதலிய அயல்நாடுகளுக்கு 24-நாள் சாப்பிடக்கூடிய மருந்து விலை ரூபா 1-12-0. தபாற்கூலி ரூபா 1-4-0.

48 நாள் மருந்து வாங்குவோருக்கு போஸ்டேஜ் உள்பட ரூபா 5-8-0. சிங்கப்பூர், பினாங், மலாக்கா முதலிய வெளிநாடுகளுக்கு வி. பி. ஆர்டர் இருந்தாலும் முன்பணம் அனுப்பாதவர்களுக்கு மருந்து அனுப்பப்படமாட்டாது.

**விலாசம்:—லேகியம் டிபோ,**
44, நம்புலையர் தெரு, மதராஸ்.

---

# சர்வதேள் விஷ சஞ்சீவினி.

(ரிஜிஸ்டர் டிரேட் மார்க்)

**பட்டவுடனே விஷம் பறக்கும்!** **அழுதவன் சிரிப்பான்!!**

**இதில் குணமில்லையென்று நிரூபிப்பவர்களுக்கு 100-ரூபாய் இனாம்.**




நமது நாட்டிற்கு இது அவசியமாய் ஒவ்வொரு குடும்பத்திலும் சதா கையிருப்பாய் இருக்கவேண்டிய ஓர் ஔஷதமாகும். இது ஆங்கில யூனானி தமிழ் வைத்திய நிபுணர்களால் நன்கு மதிக்கப்பட்டுள்ளது. இதை நாள்பட வைத்திருப்பதால் இதன் குணம் சற்றும் குறையாது. தேள், நட்டுவாய்க்காலி, செய்யான், பாம்பு, எலி முதலியவற்றின் விஷங்களை இரண்டொரு நிமிஷங்களில் இது அடியோடு நீக்கக்கூடியது. எண்ணிறந்தோர் இதனால் சுகமடைந்திருப்பது பிரத்தியக்ஷ அனுபவமானதால் இதைப்பற்றி நாம் அதிகம் கூறவேண்டியதில்லை. இது இரண்டுவித மருந்துகளடங்கியது. இதை உபயோகிக்கும் முறை மருந்தோடு அனுப்பப்படும். விலை:—இரண்டுவித மருந்தும் அடங்கிய பாக்கெட் 1-க்கு அணா 8. தபாற்கூலி அணா 4. டஜன் 1-க்கு விலை ரூபா 5.

**ஏககாலத்தில் 3-பாக்கெட் வாங்குவோருக்குத் தபாற்கூலி இனாம்.**
**வியாபாரிகளுக்கு 100-க்கு 25 கமிஷன் கொடுக்கப்படும்.**

---

**தனலட்சுமி கம்பெனி, நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.**

# நாராயண சஞ்சீவித் தைலம்

இத்தைலம் முழுவதும் பச்சிலைகளாலும், பசும்பால் முதலிய சிரேஷ்டமான வஸ்துக்களாலும் ஆயுர்வேத முறைப்படி மிகப் பரிசுத்தமாகத் தயார் செய்யப்பட்டது. இத்தைலத்தில் ஸ்நானம் செய்வதினால் தலைவலி, ஒற்றைத் தலைவலி, மண்டையிடி, மண்டைக்குத்தல், கண் எரிச்சல், கண்களில் நீர் வடிதல், சாலேஸ்வரம், காதுநோய், தலைபாரம், அதிக வெய்யிலினால் உண்



டாகும் சிரோரோகங்கள், சரீரதாபம், மூளைக் கொதிப்பு முதலியவைகள் ஆச்சரியப்படும் விதமாய்த் தீரும். தொடர்ச்சியாய்ச் செய்து வரும் இதன் ஸ்நானங்களினால் நரைத்தமயிர் கருத்துவிடும். மூளையைக் குளிரப்பண்ணி அறிவையும் திடச் சித்தத்தையும் உற்சாகத்தையும் உண்டுபண்ணுவதில் இது நிகரற்றது. சாராய சத்து முதலிய ஆங்கில வாசனைகள் இதில் சேர்க்கப்படவில்லை. சுத்தமான பச்சிலை கிழங்கு புல் முதலிய இந்தியவாசனைகளே சேர்க்கப்பட்டிருக்கின்றன. தினம், இதனைத் தலையில் தடவி வாரிவருவதினால் மயிர் கருப்புப்பட்டைபோல் பளபளப்பாகக் கருத்து ஆலம்விழுதுபோல் நீண்டு வளரும். இன்னும் இது, உஷ்ணத்தைத் தணித்து ஞாபக சக்தியையும், முகவசீகரத்தையும் உண்டாக்கும். கஷ்டப்பட்டு வேலை செய்தவர்களும் வெகுதூரம் நடந்தவர்களும் படுக்கும்போது சிறிது தைலத்தை உள்ளங்கை உள்ளங்கால்களில் தேய்த்துக்கொண்டால் காலையில் எழுந்திருக்கும்போது திரேகம் ஆரோக்கியமாய் இருக்கும். 5 பலம் டின் 1-க்கு ரூபா 1. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.



# கூந்தல் வளரும் துளி

இதை நல்லெண்ணெய் அல்லது தேங்காயெண்ணெயில் கலந்து பிரதிதினம் மயிருக்குப் பூசிவந்தால் கூந்தலானது ஆலம் விழுதுபோல் உண்மையாய் வளரும். அதில் பேன் சேராது; சுண்டு உண்டாகாது; மயிர் உதிராது; வழுக்கைவிழுந்த இடத்திலும் மயிர் முளைக்கும். புட்டி 1-க்கு விலை அணா 12. தபாற்கூலி வேறு.

# கண்நோய் மருந்து

இது கண்நோய், கண்குத்தல், கூசல், நீர் வடிதல், மங்கல், அந்திமாலைப் பீளை கட்டல், சதை வளர்ந்திருத்தல், கண் சிவப்பு, எரிச்சல், கண் இமை புருவம் இவைகளில் வலி, கண் புகைச்சல் இவைகளைக் குணப்படுத்தும். மாணாக்கர்களுக்கும், ஆழ்ந்த பார்வையோடு வேலை செய்பவர்களுக்கும் இது மிகச் சிறந்த ஔஷதம். இதை உபயோகிப்பவர் கண்ணாடி போட வேண்டியதில்லை. புட்டி 1-க்கு அணா 8. தபாற்கூலி வேறு.



தனலட்சுமி கம்பெனி, நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

# மேஹ ராஜ சஞ்சீவி எண்ணெய்.



இந்த எண்ணெயை ஒருமுறை மூன்று நாள் சாப்பிட்ட மாத்திரத்திலே, கிரந்தி, மேக தாமரை, மேக நமைச்சல்கள், மேக இரணம், மேகப் புண், கால் கைகளிலே சேரும் மேக துர்நீர், மேக வெடிப்பு எல்லாவகைகளான வெள்ளை, மூத்திர கருவியிலே தோன்றும் பலவித வியாதிகள் தீரும். அநேக காலமாக இருக்கும் வியாதிகளுக்கு ஒருமுறை சாப்பிட்டு, 15-நாள் பொறுத்து, மற்றொரு முறை சாப்பிடவேண்டும். 3-நாள் எண்ணெய், புட்டி 1-க்கு ரூபா 1—8—0; மருந்துக்கு ஆர்டர் செய்யும்போது வியாதியின் பூரண நிலவரத்தை தெரியப்படுத்தவும்.

# கஸ்தூரி மாத்திரை

குழந்தைகள் முதல் கிழவர்கள் வரையில் எப்பருவத்தோர்க்கும் உண்டாகும் சளி, இருமல், சுரம், தலைப்பாரம், நெஞ்சில் கொருகொருப்பு, ஜலதோஷம் முதலியவைகள் தீரும். இதன் விலை புட்டி 1-க்கு அணா 12.

# காப்கியூர் என்னும் க்ஷய அரி.



கபஇருமல், இரைப்பு, அல்லது மந்தகாசம், க்ஷயம், சளி இருமல், கக்குவாய் இருமல், பெருத்த இருமல், தொண்டை நோய், சுவாசகாசம், கடினமான ஜலதோஷம், அபாயமான ஈழை இருமல், தொண்டையெரிச்சல், தொண்டைக் கரகரப்பு, இருமலினால் தூக்கம் பிடியாமை, குளிர்ச்சியான வஸ்துவைச் சாப்பிடுகிறதினாலும் பனியில் நனைவதினாலும் உண்டாகும் சாதாரண இருமல் முதலான வியாதிகளை நாலுதினத்தில் இது கண்டித்துக் கோழையை வெளியில் தள்ளி நன்றாய் அவ்வியாதிகொண்டிருந்தவரை தூங்கச் செய்யும். புட்டி 1-க்கு விலை ரூபா 1.

# சர்வமேக நிவாரணத் தைலம்.

இந்தப் பிரசித்திபெற்ற இராஜசஞ்சீவி திராவகத்தை, காலை மாலை இரண்டு வேளைகளிலும் 10-நாட்கள் வரை உட்கொண்டால் வெகு நாட்களாகத்





தேகத்தில் ஊறிய மேகரோகங்கள், மேக வாய்வு, தனுர்வாதம், முழங்கால்வாதம், குதிக்கால்வாதம், சகலமான தடிப்புகள், மேகரோகத்தால் உண்டான வெடிப்பு இரணங்கள், குழிப் புண்கள், புரையோடுகிற புண்கள், திமிர் வாய்வு, கைகால் விரல்களில் மேகநீர் தங்கிய நோய்கள், கிரந்தி முதலிய கிரந்திப் புண்கள், துடைவாழை படைகள், நகக்கணுநோய், சகல மூலங்கள் முதலிய ரோகங்கள், நெருப்பிலிட்ட பஞ்சுபோல் போகும். இது அநேக ஜனங்களின் துன்பத்தை நீக்கிச் சௌக்கியத்தை உண்டுபண்ணி அதிக அனுபவத்திற்கு வந்தது. கடின பத்தியமின்றி, பால், நெய், கறி முதலியவைகளுடன் சாப்பிடக்கூடியதும், பேதி, இளைப்பு, ஆயாசம் முதலியவைகளை உண்டாக்காமல் சுகமாக்கி வியாதிகளைக் கண்டித்துச் சுகப்படுத்தக் கூடியதுமாகிய உண்மையான மருந்து.

இதன்விலை ரூபா 1—8—0. தபாற்கூலி வேறு.

தனலட்சுமி கம்பெனி, நெ. 6, வெங்கடேசமேஸ்திரி தெரு, மதராஸ்.

## சுகபேதி மாத்திரை.

இந்த மாத்திரையில் 2-முதல் 5-வரை நிரோக நிடமறிந்து மாத்திரையைச் சாப்பிட்டு கொஞ்சம் ஜலம் சாப்பிடவும். இவ்விதம் சாப்பிட்டால் சுகமாய் பேதியாகிவிடும். மாத்திரையை அனுப்பும்பொழுது உபயோகிக்கும் முறை தெரிந்து கொள்ளலாம். 25-மாத்திரை அடங்கிய புட்டி 1-க்கு அணா 6.




## யூகலிப்டஸ் ஆயில்.

### (சுத்தமான நீலகிரித் தைலம்)

வைத்தியத்தில் கைதேர்ந்த ஒரு அனுபோக வைத்தியரால் செய்யப்பட்ட இந்தத் தைலம் வாந்திபேதி, பிளேக்வியாதி, தேள் முதலிய விஷ ஜந்துக்களின் கடி, கத்தி வகையரு, வெட்டுக் காயங்கள், நாம்புசுளுக்குகள், தீப் புண்கள், வெந்நீர்பட்டு வெந்த புண்கள், பிளவைகள், புரைபோன ரணங்கள், இருமல், கக்குவாய் இருமல், வாய்ப்பிடிப்பு, குடைச்சல், வாய்விருல் உண்டாகும் கொடூரமான பல்வலி, தலைவலி, ஒற்றைத் தலைவலி, கண் எரிச்சல், கண் கட்டி, முதலிய கோய்களுக்குக் கைகண்ட ஔஷதம்.

1 அவுன்ஸ் புட்டி 1-க்கு அணா 4.
1 ,, 1-டஜன் (12) க்கு ரூ. 2—8—0.

## நரைமயிர் கருக்குந் தைலம்.

தற்காலத்தில் பலவிதமாகச் செய்து விற்கப்பட்டு வருகிற கப்புகள் மயிரைச் செம்பட்டையாகவும் பசுமை நிறமாகவும் சாம்பல் வர்ணமாகவும் ஆக்கி விகாரப்படுத்தி விடுகின்றன. நமது தைலமோ நரைத்த மயிருக்குப் பூசிய 3-நிமிஷத்திற்குள்ளாக நரைப்பதற்கு முன்பிருந்த கருமை நிறத்தையும் பளபளப்பையும் உண்டு பண்ணும். மேலே கூறியுள்ள விகார குணங்கள் இதில் உண்டாகமாட்டா, இதைப் பூசிய பிறகு முகலட்சணமும் வசீகரமும் முண்டாகிறபடியால் வயோதிகரும் வாலிபரைப்போல் தோற்றப்படுவார்கள் இதை உபயோகிக்கும் விதம் பார்சலோடு தெரிவிக்கப்படும். விலை ரூ. 1.



## கள்ள நோய் நிவாரணி.

### இது 3-தினத்தில் குணப்படுத்தும்.

மேக உஷ்ணம் என்பது வரம்பற்ற ஸ்திரீ போகத்தினால் தாது கெட மூலத்தில் அக்னி அதிகரிப்பதனால் ஏற்படும் கள்ளநோய். நீரடைப்பு, சதையடைப்பு, பவுத்திரம், அரையாப்பு முதலியன இந்த நோயின் மூலமாய் ஏற்படும். நீர்க்கடுப்பும், குத்தலும், எரிச்சலும் காண்பதுண்டு. இவைகளை நீக்கி நல்ல சுகத்தைக் கொடுக்கக்கூடிய அநுபவ மருந்து இது. பத்தியம் இடையாது. இதனை உபயோகிக்கும் விவரம் மருந்துடன் அனுப்பப்படும்.

புட்டி 1-க்கு விலை ரூ. 1. தபாற்கூலி வேறு.

தனலட்சுமி கம்பெனி, நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.



## கர்ணபிந்து

காதில் சீழ் வடிதல், காது குத்தல், காது கேளாதிருத்தல், காதில் நமைச்சல் முதலிய வியாதிகளுக்கு இந்த மருந்தில் 2-துளி காலை மாலைகளில் காதில் விட்டுவர, காதிலுள்ள நோய்களெல்லாம் நீங்கிவிடும்.

புட்டி 1-க்கு அணா 4.
வி. பி. தபாற்கூலி பிரத்தியேகம்.

## சர்வபடை சம்மாரன்




சரீரத்தின் இடுக்கான இடங்களாகிய துடையின் இடுக்கு, அக்குள், இடுப்பு முதலிய இடங்களில் சிறிது சிறிதாகப் படர்ந்து இரவில் ஓயாத நமைச்சலைத் தந்து நித்திரையைப் பங்கப்படுத்திச் சரீரத்துக்கு அதிக கஷ்டத்தை உண்டு பண்ணும் படைகள், ஒரே தடவையில் இந்தச் சர்வபடை சம்மாரன் என்னும் தைலத்தை உபயோகித்த மாத்திரத்தில் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும்.

புட்டி 1-க்கு அணா 4. தபாற்கூலி வேறு.

தனலட்சுமி கம்பெனி, நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

## பூவேலை தைக்கும் கைமெஷீன்

இவ்வாச்சரியமான மெஷீன் பலவித பூச்சித்திர வேலைகளோடு நேர்த்தியாகத் தைப்பதற்கு மிகவும் அவசியமானது. கொஞ்சநாள் அனுபவத்திலேயே ஸ்திரீ புருஷர்கள் யாவரும் இதை எளிதில் அறிந்து கொண்டு



இவற்றின் உதவியால், மெத்தை படுக்கை, படுக்கை உறைகள், தலையணை உறைகள், மேஜை விரிப்புகள், ஜன்னலின் திரைச்சீலைகள், குழந்தைகளின் சொக்காய்கள், ஸ்திரீகளின் கவுன்கள், குல்லாய்கள், இவைகளில் பலவித பூச்சித்திர வேலைகளமைத்து கண்ணைக் கவரும்படி செய்யலாம்; சுவற்றில் களி மண்ணால் பலவிதப் பூச்சித்திர வேலைகள் அமைப்பதற்கும் இது மிகவும் சாதனமானது.

ஒவ்வொரு ஸ்திரீக்கும் தங்கள் ஓய்வு நேரங்களில் இது மிகவும் உற்சாகத்தைத் தந்து தங்கள் மனத்திற்கினிய யுக்தியுடன் புதுபுது வேலைப்பாடான பலரக பூவேலை சித்திர வேலைகள் செய்வதற்கு இது மிகவும் அவசியமானது.

வாங்கிப்பார்த்தாலே இதன் அருமை பெருமை விளங்கும். பத்தே நிமிஷத்தில் இதை அறிந்து கொள்ளும்படியான முறையையும் இதனுடன் அனுப்புவோம். பல ஆச்சரியமான வேலைகளைப் பகட்டாகவும் நேர்த்தியாகவும் இதன் உதவியால் செய்து முடிக்கலாம்.

அநேக பள்ளிக்கூடங்களில், மாணவர்களுக்கு இவ்வேலைப்பாடுகளைக் கற்பிக்கும் பொருட்டுத் தருவித்து நல்ல பலனை அடைந்திருக்கிறார்கள்.

இதை உபயோகிக்கும் முறை அடங்கிய புஸ்தகம், இம் மெஷீனுடன் கூட பெட்டியில் அடக்கம் செய்து அனுப்பப்படும். விலை ரூ. 2-8-0-தான்.

இராஜலட்சுமி கம்பெனி, நெ. 44, நம்புலையர் தெரு, மதராஸ்.

# சிவப்பிரகாச பல் பொடி




இந்தச் சிவப்பிரகாச பல்பொடி மற்ற இதர பல்பொடிகளைப் போலிராமல், அதிக சுகந்தமாகவும், பல்வலி, பல்லில் சொத்தை, சதை வளர்ந்திருத்தல், வாய்ரணம், வாய்நாற்றம், பல்லாட்டம் முதலிய வியாதிகளை நீக்குவதுமல்லாமல், பல் நன்றாய்த் துலங்கும்படி செய்யும். வாயில் சதா கம கம வென்னும் மணத்தை உண்டாக்கிக்கொண்டிருக்கும். ஒரு மாதத்திற்கு உபயோகிக்கக்கூடிய பல்பொடி டப்பி 1-க்கு விலை அணா 2. 6-டப்பிகள் அணா 10.

## நாக்குப் பூச்சியை நாசமாக்கும் பில்லை

இந்த பில்லைகள் ஒரு வருடத்துக் குழந்தைகட்கு அரை பில்லையும், மற்றவர்கட்கு 1 அல்லது 2 பில்லைகளும் கொடுத்தால் வயிற்றிலுள்ள சிறு கிருமிகள் யாவற்றும் பந்து பந்தாய் வந்துவிடும். 8-பில்லைகள் விலை அணா 6.

## அயத்தங்கத் திராவகம்

மித்திரர்களே! இந்த அபூர்வ மருந்தானது அநேக கொடிய வியாதிகளை ஆச்சரியமாகக் கண்டிக்கக் கூடியது. இதை அநேக ஆயிரக்கணக்கான ஜனங்கள் உபயோகித்துச் சந்தோஷிக்கின்றனர். வியாதியினாலாவது வேறு எந்தக் காரணத்தினாலாவது இளைத்துப்போயிருக்கும் தேகத்தைப் புஷ்டியாக்கி பலவிருத்தி தருவதில இது நிகரற்ற மருந்தாகும். ஆங்கிலேய முறைப்படி தயாரிக்கப்பட்ட அருமையான மருந்து. சாப்பிடுவதற்கு மிக இன்பமாயிருக்கும். இருமல் நோய்கண்டு அவஸ்தைப் படுபவர்கள் இதை உட்கொண்டால் இரண்டே வேளையில் ஆச்சரியமான சுகத்தை யடைவார்கள். இதனால் உண்டாகக்கூடிய அநேக குணங்களில் முக்கியமான சிலவற்றை இங்கே குறிக்கிறோம்.



இது, நரைத்த மயிரைக் கறுப்பாக்கும், உஷ்ணத்தினாலாவது, புழுவெட்டினாலாவது மயிர் உதிர்வதை நிறுத்தும்; இதனால் நீர் வியாதிகள் தீரும். கண்ணெரிச்சல், கைகால் காந்தல் இவை தீரும். இன்னும் இது முகவசீகரத்தை உண்டாக்கும். தேக அசதியை யோட்டும். ஜீரண சக்தியையும், நல்ல பசியையும் உண்டாக்கும். மனதை அதிக உற்சாகப்படுத்தும், நரம்புகளுக்கு அதிக வலுவைத் தரும். தேகத்தில் நல்ல இரத்தத்தைச் சுரப்பிக்கும். க்ஷயரோகத்தை க்ஷணத்தில் தீர்க்கும். வாத பித்த சிலேத்தமங்களா லுண்டாகும் ரோகங்களை நிவர்த்திக்கும். சத்த தாதுக்களுக்கும் நல்ல பலத்தைத் தரும். மூலச்சூடு மூலவாய்வு மலச்சிக்கல் ஆகியவை தீரும்.

இந்தச் சஞ்சீவியை நல்ல போஜனத்துடன் 15 நாள் சாப்பிட்டால் இது இணையில்லாத ஆனந்தத்தைத் தரும். மனிதர் தாம் இழந்துபோன தேகதிடத்தைப் பழையபடி யடைவதற்கு இதைவிட வேறு மருந்தே கிடையாது. ஒருவன் 40-நாள் மருந்தை உட்கொள்ளும் பக்ஷத்தில் அவனுடைய தேகம் வஜ்ஜிரமே யாகும். இதற்கு யாதொரு பத்தியமும் கிடையாது.

20-நாள் மருந்து விலை ரூபா 1. 40-நாள் மருந்து விலை ரூபா 1-12-0.

---

**தனலட்சுமி கம்பெனி, நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.**

# புத்திர சந்தான எண்ணை



ஆண்மலடு சொன்னாலும் சொல்ல லாகும்
அப்பனே பெண்மலடு யாரு மில்லை
ஏன்மலடாய்ப் போவதென்று கேட்பா யாகில்
இயம்புவேன் கருக்குழியில் சோரி சேர்ந்தால்
ஊன்மிகுந்தால் புழுதரித்தால் உதிரங் கெட்டால்
ஓங்கார பிரணவத்தில் வாயு சேர்ந்தால்
தான்மதத்து விபரீதச் சேர்க்கை செய்தால்
தலையாட்டுப் பேய்பிணியால் தரியாதென்னே.

ஸ்திரீகளின் கருக்குழியினிடத்தில் புழுக்கள் உண்டாகி அவ்வப்போது வித்தைப் புசித்து விடுவதனாலும், விபரீதச் சேர்க்கையாலும், கருக்குழியினிடத்தில் சதை வளர்ந்து சொறி பற்றி இரத்தங்கட்டி யிருப்பதாலும், கருக்குழி மதத்துக் கொழுத்திருப்பதாலும், மூலச் சுழியில் வாயு பித்தம் தங்கி யிருப்பதனாலும் கருதரிக்காது.

இந்த எண்ணெயைக் காலை மாலை இருவேளையும் 1-அல்லது 2-காசு அளவு உள்ளங்கையில் விட்டுச் சாப்பிடவேண்டியது. இப்படி 15-நாள் சாப்பிட்டால் இது கருக்குழியிலிருக்கும் ஷை குற்றங்களை நீக்கி, கருக்குழியைச் சுத்தப்படுத்தி, மறுமாதத்திலேயே கரு தரிக்கும்படி செய்யும். இது அனுபவமான எண்ணெய். இதற்குக் கடுமையான பத்தியம் கிடையாது.

சிலருக்கு கருதரித்து 2, 3, 4-மாதங்கள் வரையில் தங்கியிருந்து திடீரென்று உடைந்து போவதுண்டு. இவ்வகைத் தோஷமும் இந்த எண்ணெயால் நிவர்த்தியாகித் தீர்க்காயுளான கரு தரிக்கும். இதன் விலை ரூபா 2.

## மதன கோலாகல
# தங்கமாத்திரை

இம்மருந்து தாதுபுஷ்டியைத் தருவதில் நிகரற்றது. இதில் கஞ்சா, அபின் முதலிய லாகிரி வஸ்துக்கள் சிறிதும் சேர்க்கப்படவில்லை. வயது முதிர்ந்த காரணத்தாலும், வரம்பற்ற போக நுகர்ச்சியாலும் இழந்த பலத்தை இம்மருந்து ஆச்சரியப்படத்தக்க விதமாய் உண்டாக்கி ஒரு விதமான சுறுசுறுப்பையும் கொடுக்கும்.



இதுவன்றி வேறு எந்த நோயினு லுண்டான பலவீனமும் இம்மருந்தினால் நீங்கும். இரத்த விர்த்தியை யுண்டாக்கி நரம்புக்கு உறுதியைக்கொடுக்கும் தன்மையில் இது கைகண்ட மருந்து. வயோதிகமே தெரியாது. களைப்பும் தோன்றாது. சோர்வையும் சோம்பலையும் நீக்கித் தேக பலத்தைக் கொடுக்கும்.

இது, தங்கம், வெள்ளி, முத்து, அயம், காந்தம் முதலிய உயர்ந்த உலோகச் சரக்குகளும், சஞ்சீவிக்கு நிகரான பல மூலிகைகளும் சேர்க்கப்பட்டுச் சிறந்த கைபாக செய்பாகங்களால் தயாரிக்கப்பட்டது.

இதனை ஒருமுறை வாங்கி உபயோகித்தால் இதன் மேலான குணம் தானே தெரியும். 20-மாத்திரைகொண்ட சீசா 1-க்கு விலை ரூபா 2.

---

**தனலட்சுமி கம்பெனி, நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.**

முதல்தரமான—V. H. R. A Quality

# பெருங்காயம்.

அநேகர் உணவை, இனிமையும்படுத்தி ஜீரணிக்கவும் செய்யும் நலல பெருங்காயம் கிடைப்பது அரிதா யிருக்கின்றதென்றும், அதில் உயர்ந்ததைத் தயாரித்துப் பலருக்கும் உபயோகமாகும்படி வியாபாரஞ் செய்யவேண்டுமென்றும் எங்களைக் கேட்டுக்கொண்டபடியால், இப்போது மேலான பெருங்காயம் உயர்ந்ததாயும், வியாதிகளைக் கண்டிக்கக்கூடியதாயும், விலை சாசமாயும் நம்மிடத்தில் கிடைக்கும். வேண்டுவோர் வரவழைத்துக்கொள்ளலாம்.

1-இராத்தல் அல்லது 1-பவுண்ட் ரூ. 2.
½-இராத்தல் ரூபா 1—1—0. } தபாற்கூலி வேறு.

## மோகினி பரிமள கூந்தல் தைலம்



**5** வித இனும் சாமான்கள் சேர்த்தனுப்பப்படும்.

இந்தத் தைலத்தை கூந்தலில் தடவிக் கொண்டால் இன்றுமலர்ந்த புஷ்பங்களின் வாசனைக்கு நிகராயிருக்கும். கூந்தலுக்கு வளர்ச்சியைத் தருவதுடன் தலைக்கொதிப்பையும் அடக்கி தேகத்திற்கு ஆரோக்கியத்தைத் தரவல்லது. விலை அணு 13.

இனும் சாமான்:-1 செண்டுபுட்டி, 1 பெட்ரூம் படம், 1 ஜவ்வாது பில்லை, 1 கலர் சாந்து, 1 சிறிய கண்ணாடி.

## 130 சாமான்கள் அடங்கிய பெட்டி

**இதன் விலை ரூபா 2-12-0 தான்.**



**இதன் விலை ரூபா 2-12-0 தான்.**

**சாமான்களின் விவரம்.**

18 காரட் ரோல்டு கோல்டு அழகிய நிப்புள்ள பவுண்டன் பேனு 1; 18 காரட் ரோல்டு கோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2; ஷை சர்ட் பொத்தான்கள் செட் 12; ஷை கல்லிழைத்த புரூச்; 1; ஜப்பான் நூதன பொம்மைகள் 6; நேர்த்தியான முகம் பார்க்கும் கண்ணாடி 1; அழகிய தந்த சீப்பு 1; மடிப்புள்ள கத்தி 1; நேர்த்தியான கத்தி 1; காம்பினேஷன் நூதன சாவி வளையமும் செயின் 1; உயர்ந்த பென்சல்கள் 12; பென்சல் கிளிப்புடன் கூடிய கவர் 1; பலரக பென் ஹோல்டர்கள் 6; உயர்ந்த நிப்புகள் 12; மணி பர்ஸ் 1; ஜெர்மன் இங்கிபுட்டி 1; இங்கி மாத்திரைகள் 12; செண்ட் புட்டி 1; தேசீய டிரான்ஸ்பர் படங்கள் 32; அழகிய பலரக சேப்டி பின்கள் 25; ஆக 130 சாமான்கள் அடங்கிய பெட்டி 1-க்கு ரூ. 2—12—0.

கருணாநிதி டிப்போ, நெ. 1/6, வெங்கடாசல மேஸ்திரி தெரு, மதராஸ்.

190099